JL
m211,N24BB
N24.1.1
160198



ஆக்ம ச.
பதவிக்கு உய.
ஐக்யெய்ப...
ய ... ...கண்ட.

மனோன்மணீயம்: இது ச.
தமிழ் நாடகம், தத்துவ சாஸ்த்
எம். ஏ. சுந்தரம் பிள்ளையவர்கள்
இயற்றியது. கற்றோர்கள் அக
மகிழச் செய்வது. ரூ. 2—

சீவக ... : திருத்தக்க தேவர். ரூ. 10—0—0
சிலப்பதிகாரம்: இளங்கோ வடிகள். ரூ. 8—12—0
மணிமேகலை: சீத்தலைச் சாத்தனார். ரூ. 6—4—0
சூளாமணி: தோலா மொழித் தேவர். ரூ. 3—0—0
உதயணன் சரிதை: கொங்கு வேளிர். ரூ. 7—8—0
கம்பராமாயண மூலம். 2 வால்யூம். ரூ. 10—0—0
கம்பராமாயணம், பாலகாண்டம், அரும்பத உரை ... பதிப்பு, சுத்த பாடமாகப் பதித்தது. ரூ. 2—4—0
கம்பராமாயணம், பாலகாண்டம், உரையுடன். ரூ. 4—0—0
கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், உரையுடன். ரூ. 4—0—0
கம்பர்: இராமாயணம், ஆரண்ய காண்டம், உரையுடன். ரூ. 4—0—0
கம்பர்: இராமாயணம், கிஷ்கிந்தா காண்டம், உரையுடன், கிருஷ்ண மாச்சாரியார் பதிப்பு. ரூ. 4—8—0
கம்பராமாயணம், சுந்தரகாண்டம், உரையுடன், வையார் பதிப்பு. ரூ. 5—0—0
வில்லி: பாரதம் மூலம், நாவலர் பதிப்பு. ரூ. 3—8—0
வில்லி: பாரதம், உத்தியோக பருவம், உரையுடன், கிருஷ்ணமாச்சாரியார் பதிப்பு. ரூ. 2—0—0
திருக்குறள்: பரிமேலழகர் உரையுடன், நாவலர் பதிப்பு. ரூ. 4—0—0

# பாரதி

ஆத...
தாயுமானவா.
இராமலிங்க சுவா.
சிவஞான போதம்: ம... மெய்கண்ட தேவர் இயற்றியது, சிவஞான முனிவர் உரை செய்தது. ரூ. 5—8—0
சிவஞான போதச் சிற்றுரை விளக்கம். ரூ. 3—8—0
சிவஞான சித்தியார் சுபக்கம், சிவஞான முனிவர் இயற்றிய பொழிப்புரை, சுப்பிரமணிய தேசிகர் இயற்றிய பதவுரை. ரூ. 4—8—0

Kamban and his Art: by C. P. Venktarama Aiyar. Re. 1—0—0
Kamban's Kosala: by T. N. Seshachalam with a foreword by Dr. James H. Cousins. Re. 1—4—0
The Sacred Kural: by Dr. G. U. Pope. Rs. 6—0—0
The Kural: by V. V. S. Aiyar. Rs. 3—8—0
The Naladiar: by G. U. Pope. Rs. 14—0—0
The Tiruvacagam: by Dr. G. U. Pope. Rs. 16—0—0

ச. முத்தையபிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
திருநெல்வேலி பாலம்.

...ட்டு நிலைமையை
...ந்தது ... ...ளிர் விட்டுக்கொண்டு
எழுதிய வியாசம். பாரத நாட்டை உத்தாரணம்
செய்ய விரும்புவோர் இந் நூலைப் படியாமலிருக்
கக்கூடாது. ஸ்ரீ மஹேச குமார சர்மாவின்
மொழி பெயர்ப்பு. விலை அ ... ...

க. சந்திரகுப்த சரித்திரம்:

உ௫00 வருஷங்களுக்கு முன் நம் நாட்டை ஆக்ர மித்த கிரேக்கரைத் துரத்தி செய்த வீரனுடைய சரித்திரம். ஸ்ரீ வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர் எழுதியது. விலை அணா ...

ச. தன்னம்பிக்கை:

அமெரிக்க மகரிஷியான எமர்ஸன் எழுதிய அரிய வேதாந்தப் பொருள் நிரம்பிய வியாசத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு. ஸ்ரீ வ.வெ.ஸுப்ரஹ்மண்ய ஐயர் செய்தது. விலை அணா ...

௫. ரவீந்திரநாத டாகூரின் கதைகள்:

௩ தொகுதிகள்: ஸ்வர்க்கவாசி சுப்பிரமணிய பாரதி, ஸ்ரீ வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர், ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியர், இவர்கள் மொழி பெயர்த்தது. தொகுதி ஒன்றுக்கு அணா கஉ.


பக்கம்
... ... ... க
... ... ... ௩
...கள்... ... ...
...ல்வி பாரதி? (ஸ்ரீ சுத்தானந்த
... ... ... கா
...ரு ஓர் வேண்டுகோள்
(ஸ்ரீ அ. வ. ...நாத பிள்ளை) ... க...
ஸம்ராட் அசோகன்: ஓர் ... க்கதை
(ஸ்ரீ மஹேசகுமார சர்மா) ... உ...
ஸ்வர்க்கவாசி ஸி. சுப்பிரமணிய பாரதி நாடகம்
(ஸ்ரீ பா. ஆதிமூர்த்தி ...) ... ௩0
...: ஒரு சிறு கதை
(ஸ்ரீ வ. வெ. ஸு... ...) .. ...
மக்களும் தேசமும் (ஸ்ரீ தி.ரா.மகா...) ...
கம்ப ராமாயணம்
(ஸ்ரீ வ. வெ. ஸு... ...) ... ச...
யோகஸாதனம் (... ஸ்ரீ அரவிந்த
கோஷ் எழுதியதை ஸ்ரீ க. அமுதன்
மொழி பெயர்த்தது) ... ... ௫0
பாரத சக்தி (ஸ்ரீ சுத்தானந்த பாரதி) ... ௫உ
ஆலோசன அவலோகனம் ... ... ...
புஸ்தக விமரிசனம் ... ... ...


---

## கார்த்திகை சஞ்சிகையில் வர இருக்கும் விஷயங்கள்

---

ராஜகோபாலன் கடிதங்கள்—ஸம்ராட் அசோகன்—முஸ்லீம் பண்டிதரும் சனாதன தர்மமும்—வைரங்கள்—ஆழ்வார்களின் அன்பு—மார்க்க ஒளரேலியன்: ஓர் ராஜ ரிஷி—நபோலியனுடைய பிரசங்கம்—ஸூபி ஸாதியின் திருவாக்குகள்—புத்தன் துறவு முதலியன.



பாரத பக்தனின் ஒற்றுமைக்காக உக நாள் உபவாசமிருந்த மகான்

“பால பாரதி” அனுபந்தம்

NOV 1924

ஓம்

# பாலபாரதி

| | | |
|---|---|---|
| புத்தகம் க. | ஐப்பசி, கலியப்தம் ரு0உசு. | பகுதி க. |


## நமது பத்திரிகை

இது பத்திரிகாயுகம். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், ஜெர்மனியிலும் எண்ணத்தொலையாத பத்திரிகைகள் வெளியாகின்றன. நம் நாட்டில் இப்பொழுதுதான் பத்திரிகைகள் அதிகமாக வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. இன்னும் அனந்தமான பத்திரிகைகள் தோன்றி தமிழ் நாட்டாருக்குப் புதிய விஷயங்களின் அறிவும் ஆனந்தமும் புகட்டவேண்டும் என்பதே எமது ஆசையாக இருப்பதால், நாம் இப் புதிய பத்திரிகையை வெளிப்படுத்தத் துவக்குவதற்கு யாரும் வேறு காரணங்கள் கேட்கமாட்டார்கள் என நம்புகிறோம்.

வெண்டாமரையில் வீற்றிருக்கும் எம் பிராட்டியின் பேரை இப் பத்திரிகைக்கு வைத்துளோம். எதற்காகவெனின், இதில் சொற்பொழிவு பொழியும் ஆசிரியர்களுக்கு அவர்களுடைய விபாசங்களைத் துவக்கும்போதே சரஸ்வதியின் திருவுருவம் அவர்களுடைய நெஞ்சகத்தில் எழவேண்டும் என்றும், இதைப் படிக்கும் நேயர்கட்கு லௌகிக அறிவையும், பாரமார்த்திக அறிவையும் ஒருங்கே தருபவளான வாக்குத்தேவியின் ஸ்மரணை அடிக்கடி ஏற்படவேண்டும் என்றுமே. தன் பெயரைக் கொண்ட இச் சிறு மாதப் பத்திரிகையை, சகல வேதங்களுக்கும் சகல சாஸ்திரங்களுக்கும், சகல மந்திரங்களுக்கும் சகல தந்திரங்களுக்கும் தலைவியாக இருக்கிற கலைமடந்தை தன் பொற் கோயிலாகக்கொண்டு, அதில் நித்தியவாசம்செய்து, எம் மனோர் அனைவரையும் நிறை ஞானமுள்ளவர்களாக ஆக்கவேண்டும் என்று பிரார்த்திப்போம்.

எம் பிராட்டிக்கு ஆயிரம் ஆயிரம் நாமங்கள் இருக்கையில் பாரதி என்ற பெயரை ஏன் தெரிந்து கொண்டோமென்றால், அத் திருநாமம் எமது நண்பரும், இன்றைக்கு இருபது வருஷங்களுக்குமுன் தமிழ்நாட்டிக்குப் புத்துயிர் அளிக்க முயன்ற புண்யாத்மாக்களில் ஓர்பிரமுகருமான காலஞ்சென்ற சி. ஸுப்ரஹ்மண்ய பாரதியின் ஞாபகம் இம் மாஸிகையைப் படிக்கும் அனைவர் மனதிலும் என்றும் அழியாமல் பசுமையாக இருந்து வரவேண்டுமென்றேயாகும்.

இப் பத்திரிகை சேரமாதேவி தமிழ்க் குருகுலத்தின் வாயிலாகத் தோன்றுகிறது. தமிழ்க் குருகுலத்தின்நோக்கம் தனது இணையற்ற பேராற்றல் குலைந்துபோயிருக்கிற தமிழுக்கு அதன் இயற்கையான முதன்மை ஸ்தானத்தைத் தந்து, புராதன

கலைகளுக்குப்போலவே, இக்காலத்துக் கலைகளுக்கும் அதைப் பெரியதோர் நிலயமாக ஆக்கவேண்டும் என்பதும், தமிழ் மக்களுக்குப் பூரணமான கல்வி—அதாவது, இலக்கிய கல்வியோடு விசுவ கர்ம கலைகளும்— கற்பிக்கவேண்டும் என்பதுமே. அந் நோக்கத்திற்கேற்ப, இப்பத்திரிகையில், சீனத்திலின்று பெரு தேசம் வரையிலுள்ள சகல நாடுகளிலும் பூத்த இலக்கியங்களைப்பற்றிய ஆராய்ச்சிகளை வெளிப்படுத்த முயலுவோம். சங்க காலம் முதற்கொண்டு இந் நாள் வரையிலுமுள்ள தமிழ் இலக்கியங்களின் விமரிசனங்கள் வெளியிடப்பார்ப்போம். ஐரோப்பா அமெரிக்காவிலுள்ள வீர தீர விசுவகர்மர்களின் ஆச்சரியகரமான செயல்களைப் பற்றி இப்பத்திரிகையில் அப்போதைக்கப்போது சுருக்கமாக வர்ணித்தெழுதுவோம். ஆயுர்வேதம், யூனானி, ரணசிகிச்சையில் தற்காலத்துச் சல்லிய நிபுணர்கள் செய்திருக்கிற அத்தியாச்சரியமான வேலைகள், இயற்கை வைத்தியர், முதலிய வைத்திய முறைகளைப்பற்றி எழுதுவோம். உலகத்தில் வீரச் செயல்கள் செய்து என்றும் மழியாப் புகழ் படைத்து வைத்திருக்கும் ஆத்மவான்களின் வாழ்க்கைகளைப்பற்றிய குறிப்புக்கள் நமது "பாரதி"யை அலங்கரிக்கும். புதிய கதைகளையும், உயர்ந்த கதைகளின் பாஷாந்தரங்களையும் கதாப்பிரியர்கள் ஆனந்திக்கும்படி இப் பத்திரிகை தாங்கி நிற்கும். ஒவ்வோர் மதத்தின் விமரிசனமும், உலகத்தின் ரிஷிகள், நபிகள், நாதாக்கள் ஆகிய பெரியோர்களின் திவ்விய சரித்திரமும் நமது பத்திரிகையில் அப்போதைக்கப்போது தோன்றிப் படிப்போரின் இருதயத்தை விரியச்செய்யும். ஏனெனில், எமது நேயர் அனைவரும் ஆத்தியாத்மிக வாழ்க்கையின் சுவையை அறிந்து தங்கள் வாழ்க்கையை ஆத்தியாத்மிக வழியில் திருப்பவேண்டும் என்பது எமது நோக்கங்களில் முக்கியமானதாகும். ராஜதந்திரத்தையும் நாம் மறக்கமாட்டோம். ராஜதந்திர சாஸ்திரத்தைப்பற்றி அப்போதைக்கப்போது எழுதி வருவதுடன் ஒவ்வோர் மாதத்திலும் உலகத்திலும் நம் நாட்டிலும் நடைபெறும் சம்பவங்களைப்பற்றி நமது அபிப்பிராயத்தைக் குறித்துவருவோம். சுருக்கச் சொல்லில், உலகத்தில் அறியவேண்டிய விஷயங்களனைத்தையும் பற்றிப் பெரிய வித்துவான்களும், நாவலர்களும் "பால பாரதி"யில் எழுதி அதை ஓர் விசுவ வித்தியா நிலயமாக ஆக்குவார்கள். எம் உத்தேசங்களும் நோக்கங்களும் நிறைவேறுமாறு இறைவி திருவருள் புரிக என்று பிரார்த்தித்துக் கொண்டு தமிழ்த் தாயின் மடியில் இன்று நாம் தோன்றியுள்ளோம்.

16/98

SL
21, 1124 BB
N24.1.1

# காவிய உத்தியானம்

சாமானிய ஜனங்களுக்கு நித்திரைச் சுகத்தையும், காதற் சுகத்தையும் விட்டால் வேறு சுகங்களின் சுவை தெரிவது கிடையாது. பயிற்சி சிறிது பெற்றவர்கள் கான சுகத்தை அனுபவிப்பார்கள். அதனினும் சிறிது அதிகமான பயிற்சி பெற்றவர்கள் சித்திரங்களையும் சிற்பங்களையும் பார்த்து ஆனந்தமுறுவார்கள். ஆனால் நூல்களை—உயர்ந்த ரஸம் நிறைந்த நூல்களை—அனுபவிக்கத் தெரிந்தவர் மிகவும் சிறு தொகையினரேயாவர். உயர்ந்த நூல்கள் அறிவாளிகளுக்குத் தரும் சுகத்திற்கு மற்றைய சுகங்கள் எள்ளளவும் ஈடாகா. மற்ற ஒவ்வோர் சுகங்களும் எப்பொழுதும் அனுபவிக்கத் தகுந்தன அல்ல—நசுவரமானவை—சீக்கிரம் தெவிட்டிப்போவன—ஓர் அளவுக்கு மேல் சென்றுவிட்டால் அவை பெருங் கஷ்டத்தைத் தந்துவிடும். ஆனால் காவ்யச்சுவையையோ, எப்பொழுதும் அனுபவிக்கலாம்; எங்கும் அனுபவிக்கலாம்; நவில் தொறும் நூல்நயம் போலும் செவ்விய நூல்களின் நயம் வளர்ந்துகொண்டே போகும்; நூல்களை அளவுக்கு மிஞ்சிப் படித்துக்கெட்டவரை நாம் பார்த்ததில்லை. மகா ரஸிகனான உமர் கையம் என்பவன் ஓர் பெயர்போன கவியில், சுகவெறியைப் பூரணமாக அனுபவிப்பதற்கு ரமணீயமான உத்தியானத்தில் ஓர் கலசம் நிறைய மதுவும், காந்தை ஒருத்தியும், ரஸமுள்ள ஓர் நூலும் தேவை என்று எழுதுகிறான். நூல்களில் பொதிந்துள்ள சுவையைப்பற்றி சம்ஸ்கிருத கவிகளும் தமிழ்க் கவிஞர்களும் வேண்டிய அளவுக்குப் புகழ்ந்திருக்கிறார்கள்.

> சிசுர் வேத்தி பசுர் வேத்தி
> வேத்தி கானரஸம் பணீ
> ஸாஹித்ய ரஸ மாதுர்யம்
> சங்கரோ வேத்தி வா ந வா,

என்றும்,

> ஸாஹித்யாமிருத ரஸாஸ்வாத
> ஜாத ரோமாஞ்ச கஞ்சுகா:
> விநாபி காமினீ ஸங்கம்
> கவய: ஸுகம் ஆஸதே

என்றும்,

> திரைகொண்ட தண்கடலில்
> வரும் அமுத பாகமாய்த்
> தேசப்ரஸித்தியாகச்
> செப்பும் ஒரு கவிகொண்டு
> குலம் எலாம் வந்து அடிமை
> செயினும் அது நிகராது காண்!

என்றும்,

> தெள் அமிர்த தாரை என
> மதுரம் கதித்த பைந்
> தேன் மடை திறந்தது எனவே
> செப்பும் முத் தமிழ்,

என்றும்

நம் நாட்டு அறிஞர் அனுபவித்துக் கூறியுள்ளார். இவ்வாறு முதறிஞர் அளவுகடந்து புகழ்ந்து கூறும் காவிய ரஸாமிருதத்தை இக் காலத் தமிழரும் வருங்காலத் தமிழரும் மனமுற மாந்தித் திளைக்கவேண்டும் என்று இக் கட்டுரையில் உலகத்தின் பல்வேறுபட்ட காவியங்களின் கூட்டத்தை, ஸ்வயம்வர மண்டபத்தில் சேடிகள் ராஜகுமாரிக்கு ஒவ்வோர் மன்னனுடைய குணங்களையும் வர்ணித்துக் கூறுவதுபோலச் சுருக்கமாக வர்ணிக்க விரும்புகிறோம்.

காவிய உலகமாகிற உத்தியானத்தில் எந்த மலரின் அழகைப்பற்றி முதன் முதலாகப்பேசுகிறது என்று நமக்குத் தெரிகிறதேயில்லை. கம்பன் சீதையின் அழகை வர்ணிக்கையில்,

அஞ் சொற்கள் கிள்ளைக்கு எல்லாம்
அருளினள் அழகை மாந்தி,
தம் சொற்கள் குழறி, தத்தம்
தகை தடுமாறி நின்றார்,

என்றும்,

இழை குலாம் முலையினளை
இடை உவா மதியின் நோக்கி,
மழை குலாவு ஓதி நல்லார்
களிமயக்குற்று நின்றார்,

என்றும் சொல்லுகிறான். அப்படியே எம்முடைய மனம் காவியக்களஞ்சியமாகிற நறுமலரீட்டத்தின் பேரழகைக்கண்டு ஸ்தம்பித்துவிடுகிறது. இருப்பினும் அதை மெல்லச் செல்லவிடுவோம்.

மகா காவியங்களை நினைத்தோமானால் அவை எம் மனத்தை ஆகருஷித்துக்கொண்டு மலைகள் மீதும், வனமத்தியிலும், கடலிலும், வானிலும், சுவர்க்கத்திலும், நாகலோகத்திலும், அசுர ராக்ஷஸர்களுடைய கம்பீரமான மஹா லோகத்திலும் தீரோதாத்த நாயகர்களுடைய சாந்த சக்தி நிரம்பிய இருதயங்களுக்குள்ளும் அதிவேகமாகப் பாய்ந்து செல்லுகின்றன. நாடகங்களை ஸ்மரித்தோமானால், விக்கிரமார்க்கன் சபைக்கும், ஒலிம்பியாவின் சோலைகளுக்கும், ஆதென்ஸ், லண்டன், பாரிஸ், மதுரை, ரோமாபுரி முதலிய நகரங்களுக்கும், கண்ணுவ ரிஷியின் ஆசிரமத்துக்கும், வால்மீகியின் தபோவனத்துக்கும், பேய்களும் பிசாசங்களும் கொக்கரிக்கும் ஸ்மசானத்துக்கும், ஜூலியெத்தின் கன்னிகாமாடத்துக்கும், ஹொராஸியர் வென்ற யுத்தகளத்துக்கும், அரசனுடைய அந்தகாரம் நிறைந்த அறைக்கும், சித்திரை அருச்சுனனோடு வாழ்ந்த நந்தனவனத்துக்கும் நமது மனது ஓடிவிடுகிறது. கதைகளை நினைப்போமானாலோ மனது இருக்கஸ்தானத்திலிருந்து அமராஜாவைத் தூக்கிக்கொண்டு சீனத்தில் பதுராவின் அரண்மனையில் கொண்டுபோய் விட்டுவிடுகிறது; அமீனா வேடிக்கைக்காரர்களை எண்ணெயில் பொரிக்கிறது; மதனகாம ராஜனோடு ராஜ்ஜியம் ராஜ்ஜியமாய்ச் சுற்றுகிறது; பத்து அரசிளங் குமாரர்களோடு திரைகடல் தாண்டுகிறது; பொக்காஸியோவுடன் பத்து இரவும் விழிக்கிறேன் என்கிறது; சாஸருடைய யாத்ரீகர்களோடு குதிரையேறிச் செல்லுகிறது. ஆனால் முதலில் ஸ்தம்பித்துப்போயிருந்தும் இப்பொழுது இவ்வாறு கட்டுக்கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடும் மனதை அரிதில் நிறுத்தி முறையாகச் செல்லச் சொல்லுவோம்.

முதன் முதலில் வேதங்களையே கவனிப்போம். மனிதஜாதி தேவதுல்லியமாக இருந்த காலத்தில் தோன்றிய வாக்குக்களாகும் இவை. இவைகளுள் ஒவ்வொன்றையும் பற்றி அது மனிதனால் எழுதப்பட்டதன்று, சாக்ஷாத் ஈசுவரனாலேயே திருவாய் மலர்ந்தருளப்பெற்றது என்று அநேகமாய் ஒருவகுப்பினர் கூறுவர். மனிதஜாதி வேதங்களென்று மதித்துப் பிரத்தியேகமாக வைத்திருக்கும் நூல்கள் ஒவ்வொன்றும்—ஒவ்வொரு ஜாதியும் மற்ற ஜாதியாரின் வேதங்களைப் பொய் நூல்களென்று அவமதித்தாலும்—கடவுளின் திருவாக்கு என்று கூறத் தகுந்தவையே. நமது வேதங்களை ஆரியஜாதியின் அவிபக்தமான பிதிரார்ஜித சொத்து என்பர் ஜெர்மானிய பண்டிதர். நிரதிசயமான ஆனந்தத்தை அனுபவிக்கவேண்டுமானால், குறுகிய இருதயங்கள் விரிய வேண்டுமானால், இருளடைந்த மனதில் கோடிசூர்யப் பிரகாசம் பிரவேசித்து அதை ஒளிப்படுத்த வேண்டுமானால், பண்டைய ஆரியருடைய வேதங்களையும் உபநிஷத்துக்களையும் படிக்க; நம்மாழ்வாரின் வாக்கையும் அப்பருடைய அன்பு நிறைந்த தேவாரத்தையும் அனுபவிக்க; யூதநூல்களில் மோஸஸையும் ஸாலொமானின் பேரழகு வாய்ந்த கானத்தையும் பயிலுக; கிறிஸ்துவ நூல்களுள் நான்கு 'சுவிசேஷங்க'ளோடு அவர்களுடைய கடைசிப் புத்தகமான பவிஷ்ய தரிசனத்தையும் ஆழ்ந்து படிக்க! கடவுளிடம் பயம் நிறைந்த பக்தி வேண்டுமானால், முகம்மது நபியின் ஸூராக்களையும் குரு கோவிந்தசிங்கனுடைய சண்டி ஸ்தோத்திரத்தையும் கடகல் துதியையும் சிரத்தையுடன் படித்திடுக! தயையினும் பிரேமையினும் ஆரோகண அவரோகணகீதத்தையும் தங்கள் இருதயமாகிற வீணையில் கேட்க விரும்புகிறவர்கள் என்னையாளுடைய ஐயன் புத்தனுடைய திரிபிடகத்தையும், உலககுருவான வர்த்தமான மகாவீரனுடைய திருவாக்குகளையும் ஸ்ரீபாகவதத்திலுள்ள பாலகோபாலனுடைய திருவிளையாடல்களையும் ஆர்வத்தோடு கேட்கட்டும். அறம் என்றைக்கும் வெல்லும் பாவம் என்றைக்கும் தோற்றேபோகும் என்கிற திட நம்பிக்கை வேண்டியவர்கள் ஜாரதுஷ்டிரனுடைய மணிகள் போன்ற வாக்குகளை ஆழ்ந்து படிக்கட்டும்.

ஆனால் மனிதன் சுவச்சமான தேனையும் கரும்பையும் மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு திருப்தியடைந்துவிடுகிறதில்லை: பல்வேறுபட்ட பக்ஷியங்களையும் பணியாரங்களையும் விரும்புகிறான். ஒரே சுவையை வெகுநேரம் அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆற்றல் அவனுக்குக்கிடையாது—அது அவனுக்குச் சீக்கிரம் தெவிட்டிவிடுகின்றது. அறுசுவையும் சுவையுடன் கலந்த உணவையும் பணியாரத்தையும் அடிக்கடி மாற்றிக்கொண்டு உண்பதே அவனுக்கு மிகுதியான சந்தோஷத்தைத் தருகிறது. அதேமாதிரி செவிபுலனின் சுவையறியும் ரஸிகர்கள் நானாவிதமான சுவைகளும் கலந்தமைந்திருக்கிற நூல்களையே பெரிதும் காமுறுகிறார்கள். அவர்களுக்குத்தான் மனிதஜாதி எத்தகைய விருந்து சமைத்து வைத்திருக்கிறது! ராமாயணமும் (வால்மீகியினதும் கம்பனதும்), பாரதமும் பாகவதமும், சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இலியாதும் ஒதுஸியமும், வினையமும் ஷாஹநாமாவும், டாஸியாதும் எருசலேம் மீட்ட காதையும், சுவர்க்க நஷ்ட காவியமும் தெவிட்டாத இன்னமுதமாய் விளங்குகின்றன. ஆசிரியன் அரிஸ்தோத்தலன், மகாகாவியங்களை விட டிராஜெதி என்று சொல்லப்பட்ட கம்பீர நாடகங்களை சரஸ்வதிதேவியின் சூடாமணியென்று கூறத்தக்கவை என்று சொல்லுகிறான். சிறியதோர் சௌகர்யத்துக்குள் நவரஸங்களையும் பல்வேறுபட்ட மெய்ப்பாடுகளையும் சிறந்த கருத்துக்களையும் ஒன்றித்து, சாமானியமான வாழ்க்கையின் சிறுமைகளையெல்லாம் விட்டுவிட்டு உசிதமான உயர்வுகளைச் சுவையோடு வகுத்துவைத்து, எல்லாவற்றிற்கும் ஜீவகளையையும் ஜீவஉணர்ச்சியையும் ஜீவவேகத்தையும் தந்து சம்பாஷண ரூபமாகக் கற்பித்து வைக்கும் நூலே கம்பீர நாடகமாகும். சாகுந்தலமும் மாலதீமாதவமும், உத்தரராமசரிதமும் மிருச்சகடிகையும் கம்பீர நாடகங்களே. இவற்றுள் சோக ரஸமும் வீர ரஸமும் ஏற ஏற இவற்றின் காம்பீரியம் உயரும். கிரேக்கர்களுள் எஸ்கூலனும் ஸோபோகிளனும் யூரிபெதனும், பிரெஞ்சுக்காரருள் கோர்னேயியும் ராஸீனும், இத்தாலியருள் அல்பியேரியும், இஸ்பானியருள் கால்தெரனும், ஜெர்மானியருள் கதேயும் ஷில்லரும், ஆங்கிலருள் பிளெச்சரும் ஷேக்ஸ்பியரும் மகோன்னதமான வீரநாடகங்கள் எழுதியிருக்கிறார்கள். இவைகளோடு சேர்த்துச் சொல்லக்கூடிய நாடகங்கள் முற்காலத்திலாவது இடைக்காலத்திலாவது தமிழில் எழுதப்பட்டன என்று சொல்வதற்கில்லை. தற்காலத்தில் தான் ஸ்ரீமான் சம்பந்த முதலியாரும் அவருடைய நாடகங்களைப் படித்தபிறகு வேறுசிலரும் ஷேக்ஸ்பியரின் ஆதர்சத்தை வைத்துக்கொண்டு தமிழில் சில நாடகங்கள் எழுதியிருக்கிறார்கள். உயர்ந்த நாடகபரம்பரை இனித்தான் தமிழருள் தோன்ற வேண்டும். ஹாஸிய நாடகங்களிலும் சில நாடகாசிரியர் அரிய வேலைகள் செய்து லோகோத்தரமான பெயர் எடுத்திருக்கிறார்கள். அரிஸ்தோபானன் என்ற கிரேக்கனும், மோலியேர் என்ற பிரெஞ்சுக்காரனும், கோல்த்ஸ்மித், ஷெரிதன் என்ற ஆங்கிலரும் இத்தகைய நாடகம் புனைவதில் இணையற்றவர்கள். குப்பன் பித்தலாட்டங்கள் என்ற பேரோடு மோலியேரின் நாடகம் ஒன்று தமிழிலும் வந்திருக்கிறது. ஷேக்ஸ்பியர் ஹாஸியநாடகம் எழுதுவதிலும் யாரினும் தாழ்ந்தவனல்லன்

என்று காட்டிக்கொண்டிருக்கிறான். ஆனால் இதில் ஒன்று. கிரேக்கரும் பிரெஞ்சுக்காரரும் ஐரோப்பாவிலுள்ள மற்ற நாட்டு நாடகாசாரியரும் கம்பீர நாடகங்களினிடையே ஹாஸிய ரஸத்தைக் கலவாமல், வீர, சோக, பயானக ரஸங்களையே சம்மேளிக்கவைத்து அந் நாடகங்களை இயற்றியிருக்க, ஷேக்ஸ்பியரும் மற்ற ஆங்கில நாடகாசிரியரும் நம் நாட்டுக் காளிதாஸன் பவபூதி முதலியோரைப்போல இவற்றுள்ளும் ஹாஸிய ரஸத்தைப் புகுத்தி வைத்திருக்கிறார்கள். உண்மையில் இவர்களுடைய நாடகங்களுக்கு மிசிர நாடகங்கள் என்றுதான் பெயர் வைக்கவேண்டும்.

பெருங்காப்பிய வகுப்பிலும் நாடக வகுப்பிலும் சேராமல் பலவகையான காவியங்கள் ரஸிகருக்கு விருந்துசெய்கின்றன. இந்த ஸங்கரஜாதி நூல்களுள் ஜீவகசிந்தாமணி, யங் எழுதிய இரவுச் சிந்தனைகள், போப் எழுதிய குந்தலாபஹரணம் (ரேப் ஆப் தி லாக்), கௌபர் எழுதிய கருமம், ஜான்ஸன் எழுதிய மனித ஆசையின் நிரர்த்தகம், கிரே எழுதிய பிரலாபம், காளிதாசன் எழுதிய மேக ஸந்தேசம், உமர் கையம் எழுதிய ரூபாயாத், தாம்ஸன் எழுதிய ருதுஸம்ஹாரம், வொர்த்ஸ்வொர்த் எழுதிய அடனம் (எக்ஸ்கர்ஷன்), என்பன போன்றவை முதற்கொண்டு கோவைகள், தூதுகள், மடல்கள்போன்ற பிரபந்தங்கள் ஈறாகப் பலபல நூல்களைச் சேர்க்கவேண்டும்.

'வேதப் பொருளை விரகால் விரித்து, உலகோர் ஓதத் தமிழால்' திருவள்ளுவனார் உரை செய்த திருக்குறளை எவ் வகுப்பில் சேர்க்கலாம்? அதுவே அறநூல்—அதுவே ராஜதந்திர சாஸ்திரம்—அதுவே இன்ப நூல்! அவரோடு சேர்த்துச் சில ஆசிரியர்களைச் சொல்லவேண்டுமானால்—அபினும் அந்தரம் நீளிது அம்மா!—பேகனையும், கொன்பூஸ், லாவோத்ஸூ முதலிய சீனத்து மகான்களையும், ஸாதியையும், ஹாபிஜையும், கபீரையும், எமர்ஸனையும் தான் சொல்லலாம்.

இதன் பிறகு தனிப்பாடல்களைக் கவனிக்கலாம். ஒவ்வோர் கவியும் ஒவ்வோர் அமயத்தில் பாடிய இவை எண்ணிறந்தன. சில கவிகளினுலேயே மாலைக்கிரமமாகத் தொகுக்கபட்டனவாகும். மற்றும் சில மதுரைச் சங்கம் போன்ற அவையினால் தொகுக்கப்பட்டனவாகும். மற்றவை எழுத்தாளராலும் பிரசுரக்காரராலுமே தொகுக்கப்பட்டனவாகும். பதிற்றுப்பத்து, கலித்தொகை, புறநானூறு, துளிஸ்தான், போஸ்தான் முதலிய இன்சுவை நிரம்பிய பாட்டுக்களை எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாது. இங்கிலாந்து முதலிய மேனாடுகளில் அவ் வக் கவிஞன் பாடிய தனிப்பாக்களை அவனுடைய காவியங்களோடு சேர்த்துத் தொகுத்து அச்சிடுகிறார்கள். அச்சிடும் முறை கண்டுபிடிக்க வெகு நாட்களுக்கு முன்னரே நமது தமிழ்ப் பாக்கள் தொகுக்கப்பட்டுப் போயினமையால், தொகுத்தோர் சிறந்தவை என மதியாத ஒவ்வோர் கவியினுடையவும் பல பாக்கள் இறந்து போயிருத்தல் வேண்டும். ஆனால் மிகுதியாயுள்ளவை அபரியாப்தமான சுகத்தைத் தருவதால் தொகுத்தவருக்கும், இத் தொகை நூல்களாகிற விலையில்லாப் பொக்கிஷத்தை நமக்குப் பதனப்படுத்தித் தந்திருக்கும் நம் பண்டிதர் பரம்பரைக்கும் நாம் என்றும் மறவா நன்றியைச் செலுத்த வேண்டும்.

கணிதம், ஜோதிஷம், ரஸாயனம், யோகம் முதலிய சாஸ்திரங்களைப் பற்றிய நூல்களைப் பற்றி இங்கு நாம் பேசுவதாக உத்தேசிக்கவில்லை: இலக்கிய நூல்களைப் பற்றி மாத்திரம்தான் பேச எடுத்துக்கொண்டோம். ஆகையால் காவியங்களைக் குறித்துச் சொன்னது போதும் என்று இவ்வளவுடன் நிறுத்திக்கொண்டு உரை நடை நூல்களைப்பற்றிப் பேசி இவ்விஷயத்தை முடிப்போம்.

சம்ஸ்கிருதத்திலாகட்டும் தமிழிலாகட்டும் இக்காலத்துச் சுவையைத் திருப்தி செய்யக்கூடிய பழையவசன நூல்கள் கிடையா. பிராமணங்களையும் நடை அழகாயிருந்தாலும் சங்கராசாரியர் முதலிய



பாஷியகாரர்களின் பாஷியங்களையும், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலியோரின் உரையையும், நக்கீரர் அகப்பொருளுக்குச் செய்த உரையையும் வசன நடைக்கு இலக்கியங்களாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சில உபநிஷத்துக்கள் பொருள்செறிந்து கம்பீரமான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் உயர்ந்த, அழகிய, ஒட்டமுள்ள வசன நூல்களைப் பார்க்கவேண்டுமானால் கிரேஸுக்கும், ரோமுக்கும், அரேபியாவுக்கும், பாரஸீகத்துக்கும், நவீன ஐரோப்பாவுக்கும்தான் போகவேண்டும். ஹெரொதோத்தனுடைய சரித்திரத்தின் மழலை மிக இனிமையாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் சரித்திரநடையில் திட்பமும் செறிவும் அனுபவிக்க வேண்டுமானால் தூகுதீதன் என்னும் கிரேக்கனிடமும் தாஸிதன் என்னும் ரோமனிடமும்தான் செல்லவேண்டும். தூகுதீதனுடைய பெலொப்பொனேஸிய யுத்தம் என்ற நூலாகிற விஸ்தாரமான படச்சீலையில் எத்தனை மகான்களுடைய உருவங்கள், எத்தனை சைனியங்களின் வியூகங்கள், எத்தனை சமயங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன! அகேஸிலன், அல்கிபியாதன், கிளேயோன், பீதியன், பிராக்ஸிதலன், ஸாக்ரதன், ஸோபோகிளன், ஸொக்ராத்தன், பிளாத்தன்முதலிய இணையற்ற வீரர்கள், சிற்பிகள், கவிகள், தத்துவக்ஞர்கள் ஆகிய இவர்களின் படங்களையும், இவர்களெல்லவருக்கும் நடுநாயகமாக விளங்கிய ராஜதந்திரியும், தேசபக்தனும், ரஸிகனும், மனித இருதயமாகிற வாத்தியத்தைத் தன் நாவன்மையினால் தன் மனதுக்கிஷ்டமான வழிகளில் முழக்கச் செய்ய வல்ல வாக்மியுமான பெரிகிளனுடைய கம்பீரமான தோற்றத்தையும் அதனுள்ளே கண்டு ஐரோப்பியர் ஆண்மையும் உற்சாகமும் ராஜதந்திர அறிவும் பெற்றுவருகிறார்கள். பாரஸீக பாஷையிலுள்ள மொகலாயர் சரித்திரத்தைப் படித்துவிட்டு தெகின்ஸன் என்னும் பிரெஞ்சுக்காரன் பிற்பட்ட சரித்திராசிரியர்களுக்கெல்லாம் முதனூலாக இருக்கும்படி அழகியதோர் சரித்திரம் எழுதிவைத்திருக்கிறான். ஆனால், மேற்கு உலகையெல்லாம் ஓர் கவிகைக்கீழ் ஆண்டுவந்த ரோமாபுரியின் மகோன்னதமான ஏகாதிபத்தியம் மெல்ல மெல்லச் சாய்ந்து வந்து கடைசியில் உலகெல்லாம் நடு நடுங்கும்படி பூமியில் தகர்ந்து விழும் பிரளயகாலத்து இடியோசை போன்ற ஓசையைக் கேட்க விரும்புகிறவர்கள்—மொங்கோலியாவிலும், துருக்கிஸ்தானத்திலும், குர்திஸ்தானத்திலும், அராபிஸ்தானத்திலும், பாக்திரியாவிலும், பார்த்தியாவிலுமுள்ள பல்வேறு வகைப்பட்ட ஆஸிய ஜாதிகள் அஷ்டதிக்கஜங்களும் நடுங்கும்படி, வானமும் பூமியும் அதிரும்படி, அக்ஷௌஹிணி அக்ஷௌஹிணியாய் ஆஸியாவிலும் ஐரோப்பாவிலும் சென்றதோர் "துமுல"த்தைச் சாக்ஷாத்கரிக்க விரும்புகிறவர்கள்—கிப்பனுடைய ரோம ஏகாதிபத்தியத்தின் தேய்வும் வீழ்ச்சியும் என்ற புராணத்தைப் படிக்கவேண்டும். இன்னும் குரோத் எழுதிய கிரேக்க சரித்திரமும், ஸீபூரும் மோம்ஸெனும் எழுதிய ரோமர் சரித்திரமும், ஹியூமும் கிரீனும் மக்காலேயும் எழுதிய ஆங்கில சரித்திரங்களும், தியேரும் திபெரியும் எழுதிய பிரெஞ்சு ராஜப்பிரளய சரித்திரங்களும் எத்தனையோ ரஸிகர்களுக்கு ஆனந்தத்தையும், ராஜதந்திரிகளுக்கு நல்ல பாடங்களையும் உதாரணங்களையும் தந்துவருகின்றன. ஆனால் சரித்திர ஜாதியில் எம்முடைய மனதுக்கு மிகவும் உகந்த நூல் கார்லைல் எழுதிய பிரெஞ்சு ராஜப் புரட்சி சரித்திரமே. இது தவிர ஐரோப்பியர் இலக்கிய சரித்திரங்களென ஓர் வகை நூல்கள் எழுதிவருகிறார்கள். ஐரோப்பாவிலுள்ள ஒவ்வோர் பாஷையிலும் அவ் வப் பாஷையில் தோன்றியுள்ள நூல்களின் விவரம் நிறைந்த சரித்திரத்தோடு மற்ற பாஷைகளிலுள்ள நூல்களின் சரித்திரங்களையும் ஆசிரியரின் சரித்திரங்களையும் விரிவாகக்காணலாம். தேயின்என்பவன் பிரெஞ்சில் இங்கிலீஷ் இலக்கிய சரித்திரம் எழுதியிருக்கிறான். ஹாலம் என்னும் ஆங்கிலன் மத்திய யுகம் என்று சொல்லப்படுகிற ஓர் ஐநூறு வருஷ காலத்துள் ஐரோப்பாவில் தோன்றிய சிறந்த காவியங்களின் சரித்திரத்தையும், அவைகளின் விமரிசனங்களையும், கற்றோர்க்

ரோர் நல்விருந்தாகும்படி எழுதியிருக்கிறான். இவை மாத்திரமா? இந்தியாவிலுள்ள சமஸ்த பாஷைகளிலும் தோன்றியுள்ள நூல்களின் விவரங்களை அறியவேண்டுமானால் ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், ருஷியம் முதலிய பாஷைகளில் ஏதாவது ஒரு பாஷையைப் படித்தால் போதும். பாலி, பிராகிருதம், பைசாசம், விரஜபாஷை முதலிய தற்பொழுது வழக்கிலில்லாத பாஷைகளின் இலக்கியங்களைக்கூட ஆங்கிலம் முதலிய மேனாட்டுப் பாஷைகளைப் படித்து அறிந்துகொள்ளலாமானால் ஐரோப்பிய கல்விமான்களின் கல்வி அபிமானம் எத்தகையதாக இருக்கவேண்டுமென்று இதைப் படிப்போர் நாம் சொல்லாமலே அறிந்துகொள்வர்.

ஐரோப்பாவில் ஏதாவது ஒரு வழியில் புகழ்பெற்றவர்களுடைய சரித்திரங்கள் வெகு நாட்களாக எழுதப்பட்டுவருகின்றன. வீரர்கள், ராஜதந்திரிகள், அர்த்த சாஸ்திர நிபுணர்கள், தேசபக்தர்கள் முதலிய பல்லாயிரம் மகான்களுடைய சரித்திரங்களை ஐரோப்பிய பாஷைகளில் காணலாம். இத்தகைய நூல்களுள் சிரோநாயகமாக விளங்குவது பாஸ்வெல் எழுதிய ஜான்ஸன் சரித்திரமாகும். சில மனிதர் தங்கள் சரித்திரங்களைத் தாங்களே எழுதியும் இருக்கிறார்கள். இத்தகைய ஆத்ம சரித்திரங்களில் மிகப் பேர்போனவை ஜூலிய கேசரி எழுதிய காலிய சண்டையும், நபோலியன் எழுதிய யுத்த சரித்திரமும், கதேயும் பென்வெனூடோ செல்லினி என்னும் பொற்கொல்லனும் எழுதி வைத்திருக்கும் ஆத்ம சரித்திரங்களும் ஆகும். நபோலியனுடைய வாக்குக்கு அவனுடைய பீரங்கி குண்டுகளின் திண்மையும், லகுதியும் பொருந்தியிருக்கின்றன என்று ஸான்த்-பவ் என்னும் இலக்கணாசிரியன் கூறுவன். இம்மகான்களின் சரித்திரங்களைப் படிக்கும்போது அவர்களுடனேயே வசித்து அவர்களுடைய வாழ்க்கையையும், மனவளர்ச்சியையும் நேரே பார்த்து அநுபவிப்பதுபோல் இருக்கும்.

வியாசங்கள் என்று ஐரோப்பாவில் ஓர் வகை நூல்கள் இருக்கின்றன. அவை ஒவ்வோர் தனி விஷயத்தைப்பற்றிப் பொழுதுபோக்குக்காகவோ, அல்லது அறிவு வளர்ச்சிக்காகவோ, ஒவ்வோர் ஆசிரியன் தான் கண்டதையும் கேட்டதையும் கருதியதையும் சிறியதோர் அளவில் விஸ்தரித்து எழுதிவைத்த பிரபந்தங்கள் ஆகும். அவற்றின் அளவு சுமார் ஓராயிரம் வார்த்தைகள் முதற்கொண்டு நூறு பக்கங்கள் வரையிலும் இருக்கும். இந்த வியாசங்களில் ஹாஸிய ரசத்தைப்பெய்து எழுதுவதில் அடிஸனும், கோல்ட்ஸ்மித்தும், லாம்பும் பேர்போனவர்கள். பேகனுடைய வியாசங்கள் என்னும் அரிய நூல் சொற்செறிவிலும், பொருட்செறிவிலும் திருவள்ளுவரின் வாக்குக்கு ஒப்பிடக்கூடியவை என்று ஏற்கெனவே கூறியுள்ளோம். ஆனால் வியாசங்களில் காம்பீரியமும் பேருணர்ச்சியும் அனுபவிக்க விரும்புகிறவர்கள் எமெர்ஸனிடமும் கார்லைலிடமும் தான் செல்லவேண்டும்.

தற்காலத்தில் ஐரோப்பாவில் மகா காவியங்கள் தோன்றுகிறதில்லை. அவற்றின் ஸ்தானத்தை நாவல் என்று சொல்லப்படும் கற்பனைக்கதைகளே ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன. இத்தகைய கற்பனைக் கதைகளின் முதிர்ச்சியை ஆஸ்டின் என்னும் மாதினிடத்திலும், ஸ்காட்டு, டியூமா, விக்டர் ஹியூகோ, ஹென்றி வுட் என்னும் பெண்மணி முதலியோரிடத்திலும் அனுபவிக்கலாம். இவை தவிர சிறு கதைகள் ஐரோப்பாவில் எழுதப்பட்டு வந்து, அவை நம் நாட்டிலும் ரவீந்திரநாத டாகூர் முதலிய வித்துவான்களால் கையாளப்பட்டுவருகின்றன.

ஆனால் நமது வியாசத்தையும் ஓர் இடத்தில் முடிக்கவேண்டியது அவசியமாதலால் பெரு நூல்களின் மெய்க்கீர்த்தியை இதனோடு நிறுத்திக்கொள்வோம். நமது "பாரதி"யில் அப்போதைக்கப்போது இங்கு கூறப்பட்ட நூல்களைப்பற்றியும், கூறப்படாத அனந்தமான நூல்களைப்பற்றியும், விமரிசனங்களையும், வர்ணனைகளையும் வெளிப்படுத்திவருவோம்.

# ராஜகோபாலன் கடிதங்கள்

இக்கடிதங்களை இதற்குமுன்னர்ப் பல தடவைகளில் வெளியிடத் துவக்கியும் அப்பிரயத்தனம் நிறைவேறாமற்போயிற்று. இவற்றின் பூர்வோத்தரம் பின்வருமாறு: ராஜகோபாலன் என்று நான் புனைபெயர் கொடுக்கிற எனது நண்பன், இருபது இருபத்தைந்து வருஷங்களுக்குமுன், தனக்கு நேர்ந்த சில சம்பவங்களைப்பற்றி எனக்குப் பல கடிதங்கள் எழுதிவந்தான். பிறகு அவன் இருக்கும் இடம் எனக்குத் தெரியாமற் போய்விட்டது. அவன் திரும்பி வருவான் என்கிற ஆசை போய்விட்டதால், அவன் எழுதிய கடிதங்கள் மிகவும் சுவையுள்ளவாகத் தோற்றியபடியால், அவைகளைப் பல்லோரும் படித்து அனுபவிக்குமாறு ஊர்ப்பேர்களை மாத்திரம் மறைத்துவிட்டு வெளியிடத் துணிந்தேன். இரண்டு முறைகளில் அவற்றை வெளியிட்டேன். ஆனால் ஒவ்வோர் தடவையிலும் நாலைந்து கடிதங்கள் வெளிவந்தவுடனே அவனைப்பற்றிய செய்திகள் எனக்கு எட்டி அவன் இப்பிரதேசத்துக்குச் சீக்கிரம் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையை உண்டாக்கின. ஆகையால் அக்கடிதங்களை அப்பொழுது வெளிப்படுத்துவது முறையில்லை என்று நினைத்துக் கட்டிவைத்துவிட்டேன். கட்டிவைத்த தினம் முதற்கொண்டு கொஞ்ச காலத்துக்கு முன் வரையில் அவன் இன்று வருவான் நாளை வருவான் என்று எதிர்பார்த்த வண்ணமாகவே இருந்தும் அவன் வந்தானில்லை. பல சூசகங்களைக்கொண்டு, இனி அவனை உயிரோடு பார்ப்போம் என்கிற எண்ணம் எனக்குச் சுத்தமாய்ப் போய்விட்டது. அவன் இன்னும் உயிரோடிருந்தாலும் கடிதங்களை இனி வெளிப்படுத்துவதில் அவனுக்கு யாதொரு கஷ்டமும் நஷ்டமும்இல்லை. அவைகளிற்கூறப்பட்ட முக்கிய நாயக நாயகிகளது காலம் ஆகிவிட்டது. அவற்றை வெளியிடாமல் வைத்திருப்பதிலும் அவனுக்காவது அவனது சீர்த்திக்காவது யாதொரு லாபமும் இல்லை. ஆனால் அவற்றை இன்னும் மூடிவைத்தால், உலகத்தவரை அவன் கடிதங்களின் சுவையை அனுபவியாமல் தடுக்கும் பாவத்துக்கு உள்ளாவேன் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகையால் எல்லாவற்றையும் யோசித்து முன்தடவைகளில் போலவே ஊர்களையும் பெயர்களையும் மாற்றிவைத்து, மற்ற வகைகளில் எதும் மாற்றாமல் அக் கடிதங்களைப் "பாலபாரதி"யில் வெளிப்படுத்திவரலாமென்று நிச்சயித்துப் பத்திராதிபரின் அனுமதி கேட்டேன். அவரும் என் பேரில் கருணைகூர்ந்து இசைந்தார். ஆகவே இம்மாதத்தில் முதல் நான்கு கடிதங்களைப் பிரசுரிக்கிறேன்.

பதிப்பாசிரியன்.

க. மாசி உச.

நண்ப,

நான் ஒருவருக்கும் சொல்லாமல் இவ்விடம் வந்துவிட்டேன் என்று கேட்கிறாய். ஆனால் நான் வேறு என்ன செய்திருக்க முடியும்? இனிமேல் நான் யாருக்காக ஊரிலிருக்கிறது? பதினைந்து நாள் இருந்துதான் பார்த்தேன். ஆனால் வீட்டில் எதைப் பார்த்தாலும் அம்மா ஞாபகம்தான். எந்த அறையிற் சென்றாலும் அம்மா எதிரே நிற்கிறதுபோலிருக்கும். எங்கே படுத்து உறங்கினாலும் கனவில் அம்மாவின் உருவம் சோகமான முகத்தோடு என்னை உற்றுப்பார்ப்பதுபோல இருக்கும். இத்தனை அன்பை என்பேரில் வைத்திருந்தவள் எப்படித்தான் என்னை விட்டுச்சென்றாளோ? ஊர் எனக்கு விஷமாய்ப் போய்விட்டது. இனிமேல் அங்கே கால்அடி எடுத்துவைக்கமாட்டேன். ஊரை நினைத்தால் என் மனம் பதைக்கிறது. நான் வெளியே சென்றுவிட்டு வீட்டுக்கு வந்தால் வாஞ்சை ஒழுகும் முகத்துடன் என்னை

இனி வரவேற்பவர் யாவர்? என் மனதில் தோன்றும் கவிதையைக்கேட்டு ஆனந்திக்க இனி எவர் உளர்? இனி யாருடைய அந்தரங்க மனோபாவத்தின் உயர்வைக்கண்டு நான் தர்மமும் சாந்தமும் உலகில் இன்னும் இருக்கின்றன என்று களிப்புறுவேன்?

வேண்டாம், எனக்கு ஊர் வேண்டாம் என் மனதிலுள்ள துக்கம் ஒரு நாளும் போகாது. ஆனால் ஊரிலேயே தங்கினால் துக்க எண்ணங்கள் என் நெஞ்சில் எப்பொழுது பார்த்தாலும் உதித்துக்கொண்டே இருக்கும். வேறு ஊர்களையும் வேறு காட்சிகளையும் பார்த்தால் என் மனது ஒரு வேளை சாந்தமடையலாமோ என்னவோ. ஆகையால் இப்படியே சஞ்சாரம் செய்யலாமென்றிருக்கிறேன். ஆனால் இன்னும் ஒருவாரம் இங்கேயே இருப்பேனாகையால் உன் பதிலை இந்த ஊருக்கே அனுப்பு.

இங்ஙனம்:
உன் நண்பன்.

௨

பங்குனி ௫.

நண்ப,

இந்த ஊரைவிட்டு ஒரு வாரத்தில் போய்விடுவதாக உனக்கு எழுதியிருந்தேன். ஆனால் இப்பொழுது இன்னும் கொஞ்சநாளைக்கு இங்கேயேயிருந்துவிடலாமே என்று தோன்றுகிறது. எங்கு போனால் தான் என்ன? என்னுடைய துக்கமூட்டை என்னோடு கூடவேதான் வரப்போகிறது. இந்த ஊரே அநேக விஷயங்களுக்கு நல்லதாக இருக்கிறது. இங்கே எனக்கு எல்லோரும் புதிது. ஒருவரோடும் பழகவேண்டும் என்கிற கட்டாயம் கிடையாது. இதுவரையில் என்னை யார், என்ன, என்று ஒருவரும் கேட்கவில்லை. என்னுடைய சங்கோசம்தான் உனக்குத்தெரியும். ஆகவே, எனக்கு இப்பொழுது அத்தியாவசியமாக வேண்டியதென்று தோன்றுகிற தனிமைக்கு இந்த இடம் மிகவும் தகுதியாயிருக்கிறது.

ஆகையால் நீ எனக்கு எழுதுவதாக இருந்தால் நான் மறுபடி உனக்குத் தெரிவிக்கிறவரையில் இந்த ஊருக்கே எழுதிவா. ஆனால் யாருக்கும் நான் இங்கே இருக்கிறேன் என்று மாத்திரம் சொல்லிவிடாதே.

இப்படிக்கு,
உன் பிரியமான நண்பன்.

௩

பங்குனி உ௫.

பிரிய நண்ப,

நான் இத்தனை நாளாக உனக்கு எழுதாததைப் பற்றி மன்னித்துக்கொள்வாய். நான் உனக்கு எதைப்பற்றி எழுதுவது? எல்லா நாட்களும் ஒன்றுபோலவே இருக்கின்றன. ஊருக்கு அரை மைல் தூரத்தில் ஒரு பெரிய தோப்பு இருக்கிறது. சாப்பிடுகிற வேளைபோக மற்ற வேளையெல்லாம் அங்கேதான் போயிருக்கிறேன். அங்கே போய் நான் என்ன செய்கிறேன் என்று கேட்பாய். ஒன்றும் செய்வதில்லை. ஒரு மாமரம் இருக்கிறது. அதன் அடியில்தான் அனேகமாய் எப்பொழுதும் உட்கார்ந்து கொண்டு வானத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன்.

மனது அந்தர்முகப்பட்டதானால் துன்பங்களெல்லாம் நசித்துவிடுகின்றன என்று வேதாந்திகள் சொல்லுகிறார்கள். என் மனதுக்குச் சென்ற பத்துப் பதினைந்து நாட்களாக பகிர்முகம் என்கிறது கிடையாது. அப்படியிருந்தும் அதன் துக்கம் நீங்கவில்லை. பக்கத்திலிருக்கும் ஓங்கிவளர்ந்திருக்கிற மரங்களும் அவற்றின் நானாவிதமான மலர்களும் என் கண்ணில் படும். தூரத்தில் ஓடும் ஓடை பார்வைக்கு ஒரு நீலக்கோடுபோல அழகுடன் விளங்கும். ஜலம் கூழாங்கற்களின்மீது ஓடுகின்ற இனிய ஓசை என் காதில்விழும். பக்கத்துத் தோப்பில் குயில் கூவுவதும் தூரத்தில் மாடு மேய்க்கும் பிள்ளைகள் மாடுகளை அழைப்பதும் விளையாடுவதும் புல்லாங்குழல் ஊதுவதும் என் காதில் கேட்கும். ஆனால் மனது அவை ஒன்றி



லும் செல்லுவதில்லை. அவற்றின் இனிமையை அனுபவிப்பதில்லை. அதுபாட்டுக்குத் தனக்குள்ளேயே ஏதோ வேலைசெய்துகொண்டிருக்கிறது. நடு மத்தியானம் ஆனதும், சில நாட்களில் அம்மா சாப்பிடாமல் காத்துக்கொண்டிருப்பாள், வீட்டுக்குப்போகவேணும் என்று ஒரு எண்ணம் திடீரென மனதில் எழும். ஆனால் உடனே ஞாபகம் வந்துவிடும். அந்தச் சமயத்தில் நெஞ்சு வெடித்துவிடும்போல இருக்கும். காலமே வில்வமரத்தையும் பவளமல்லிகை மலர்களையும் பார்த்தால், நான் பூஜைக்காக அம்மாவுக்குத் தினம் பறித்துக் கொடுத்துவந்தது நினைவுக்கு வந்துவிடும். யாராவது ஒருதாய் தன் குழந்தைகளிடம் மிருதுவாகப் பேசினால் என் கண்களில் ஜலம் ததும்பிவிடும். அவ்விதம் என்னிடம்பேச இனி எனக்கு யார் இருக்கிறார்கள்?

இரவும் பகலும் இம்மாதிரி நினைவுகள் தான் எனக்கு சகாக்கள். அவைகளும் நானும் இணைபிரிவதில்லை. நான் எங்கே சென்றாலும் அவை என்னோடு கூடவே வருகின்றன, என்ன செய்தாலும் அவை என்னைவிட்டு அகலுகிறதில்லை.

மனிதனுக்கு ஞாபகம் ஒரு பெரிய பாரம். ஈசுவரன் எதற்காக இத்தனை பெரிய பளுவை மனிதன் தலையின்பேரில் தூக்கி வைத்திருக்கிறான்? அன்றன்றைக்கு நடக்கிற சம்பவங்கள் அன்றன்றோடு தீர்ந்துவிடலாகாதா? நேற்றுப் பகலெல்லாம் ஓயாமல் மழைபெய்து சூரியன் என்கிற பேச்சே இங்கே இல்லாமல் செய்து விட்டது. ஆனால் அதை நினைத்துக்கொண்டு சூரியன் இன்று காலமே வாடிய முகத்தோடு வருகிறானா? இல்லை. சுவர்ணமயமான மேகங்களுக்கு மத்தியில் எழுந்து, மலர்களுக்கும், பக்ஷிகளுக்கும், மிருகங்களுக்கும் புதிய ஜீவனைக் கொடுத்துக்கொண்டு என்றும் போலவே மகா காந்திமானாய் விளங்குகிறான். மனிதன் ஏன் அப்படியிருக்கக் கூடாது?

ஆகா, என்ன சொல்லிவிட்டேன்? ஞாபகம் இல்லையானால் மனிதன் என்னத்திற்குப் பிரயோசனம்? என் தாயாரை ஒரு நிமிஷமேனும் மறக்கச் சம்மதிப்பேனா? அவள் என்பேரில் வைத்திருந்த எல்லையில்லாத அன்பின் ஞாபகமன்றோ என்னுடைய செல்வங்கள் அனைத்தினும் முதன்மையானது. நான் சிறுகுழந்தையாக இருக்கும்போது அவள் என்னைச் சீராட்டி வளர்த்ததையும், வயதாக ஆக எனக்கு அறிவும் நல்லொழுக்கங்களும் ஊட்டிய பான்மையையும், என் தகப்பனாருடைய முன் கோபத்துக்கு அவள் தணிந்துபோகும் நீதியையும், அவருக்கு அவள் பக்தியோடு செய்துவந்த சிசுருஷைகளையும், அவர் மகா சமாதியடைந்துவிட்டகாலத்தில் அவள் நெருப்பில் விழுந்த கொடிபோலத் தவித்ததையும், அதுமுதல் அவளுடைய காலம் ஆகிறவரையில் அவருடைய அன்பையும் சேர்த்து அவள் என்னிடம் காட்டிவந்த வாஞ்சையையும் நினைத்துப் பார்க்கும்போது, அவளை நான் இழந்துவிட்ட துக்கத்துக்கிடையிலும்கூட அந்த நினைவுகள் எனக்கு ஒரு அமர்ந்த ஆனந்தத்தைத் தருகின்றன. அவைகளை மறப்பது ஒரு பெரிய ஆஸ்தியை இழப்பதேயாகும்.

இந்த விஷயங்களை எழுத்தில் எழுதியதிலிருந்தே என் மனம் கொஞ்சம் சமாதானமடைந்திருக்கிறது. ஆகையால் இன்று மறுபடியும் மேலே நாட்களில் நிகழ்ந்தவைகளை நினைத்துப் பார்க்கிறேன்.

ராஜகோபாலன்.

---

௪

சித்திரை மீ ௮.

என் நண்ப,

இந்த ஊரின்மீது எனக்கு ஒரு வாற்சல்யம் பிறந்து விட்டது. ஏனெனில் இங்கேதானன்றோ என் மனது துக்க சாகரத்தினின்று ஒருவாறு கரையேறி விசிராந்தியடைந்தது.

இவ்வூரைச் சுற்றியே ஒருவித சாந்தி திகழ்ந்து கொண்டிருக்கிறது. இங்கே ரயில் சந்தடி கிடையாது. ஊருக்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கும்

உ௦-கல். பட்டணவாசத்தில் இருக்கிற பரபரப்பு, அவசரம், தடபுடல் இங்கே கிடையாது. இவ்விடத்து ஜனங்கள் அவரவர்கள் காரியங்களைப் பார்த்துக்கொண்டு ஒருவருக்கொருவர் நேசமாயும் இதமாயும் இருந்துவருகிறார்கள்.

பிரகிருதி தேவியும் இங்கே மிக்க அழகுடன் விளங்குகிறாள். இங்கு வந்தபோது என் மனது தன் துயரத்தையே பாராட்டிக்கொண்டிருந்ததால் பிரகிருதி என்னை லக்ஷியம் செய்யாததுபோலவே இருந்துவிட்டாள். ஆனால் உண்மையில் அவள் என் மனத்தை ஆக்ருஷிக்க இடைவிடாது சமயம் பார்த்துக்கொண்டே இருந்திருக்கிறாள். பத்து நாளைக்கு முன்னே உனக்கு எழுதியிருந்தேனே. அப்படி, அம்மா எனக்கு மேலைநாளில் அன்பினால் செய்துவந்தவைகளை யெல்லாம் நினைத்துப் பார்க்கப்பார்க்க மனதானது ஒரு சிறிது துயரத்தினின்று பிரிய ஆரம்பித்தது. அதுதான் சமயமென்று இயற்கைச் சீமாட்டியும் என்னை வலை போட்டுப் பிடித்துக்கொண்டுவிட்டாள்.

ஆகா! துன்புற்றோருடைய துன்பத்தைத் துடைக்கப் பிரகிருதி தேவிக்கு நிகரான அன்னை யாருளர்? அவள் வாயினால் ஒரு பேச்சுக்கூடப் பேசுவதில்லை. தன்னுடைய வடிவத்தாலேயே நம்மை மயக்கிவிடுகிறாள். அவளுக்குப் பேச்சு என்னத்திற்கு? ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு இரண்டு நாழிகை நேரத்திற்கு ஏதாவது ஒரு திசையைப் பார்த்துக்கொண்டேயிருந்தால் எத்தனை விதமான காட்சிகள் நம் கண்ணெதிரே தோன்றி மறைகின்றன! ஒவ்வொரு நிமிஷமும் ஒரு புதிய சித்திரம்; அத்தனையிலும் புதுப் புது ரூபம்; புதிய புதிய அழகு! இப்பொழுது கலியாண முருக்கமரமானது சமுக மரத்தோடு கொஞ்சுவதுபோலிருக்கிறது. சற்று நேரத்துக்கெல்லாம் அது தன் தணல்போன்ற மலர்களை அந்தப் பக்கத்திலிருக்கும் மாமரத்தினிடம் காட்டச் சென்றுவிடுகிறது. கூந்தற்பனை கைகளை ஆட்டிக்கொண்டு சிரிக்கிறது. இள நீலமாயிருக்கிற இந்த மூங்கிற் போத்துக்கள் வெகு ஒயிலாகப் பரதம் பிடிக்கின்றன. தூரத்திலிருக்கும் ஆலமரம் ஆயிரக்கால் மண்டபம்போலக் கம்பீரமாய் நின்றுகொண்டிருக்கிறது. மரங்களுக்கு மத்தியிலும், ஒவ்வொரு மரத்திலும் கிளையின் இடைவெளிகளிலும் தோன்றுகிற நீல ஆகாயம் எத்தனை வித உருவத்தைத் தான் எடுத்துக்கொள்ளுமோ! மத்தியில் மேகங்கள் உலாவுகின்றன. அவைகள் பூணும் மாறு வேஷங்களுக்கு எல்லையேயில்லை. இப்படியிருக்கையில் நாரைகள் கூட்டம் கூட்டமாய்ப் பறந்து ஆகாயத்திற்கே மாலையிடுகின்றனபோலச் செல்லுகின்றன. மயில்கள் மரத்தினின்று மரத்துக்குத் தாவிச் சிறகை விரித்தாடுகின்றன. சூரியப் பிரகாசம் அங்கங்கே மரங்களின் அடர்த்திக்கு நடுவே ஊடுருவிப் பாய்ந்துவந்து தரையில் ஒளியையும் நிழலையும் ஆயிரம் "மோஸ்த"ரகப் பின்னிவிடுகிறது.

தூரத்தில் குயில் கூவுகின்றது. அதன் குரலுக்குத்தான் என்ன மார்த்தவம்! சோலைக்குள்ளிருந்து கேட்கும்போது பிரம்மானந்தமாயிருக்கிறது. பக்கத்தில் ஒரு மரங்கொத்திப்புள் உச்சமான சுவரத்தில் கூவிக்கொண்டே ஓர் மரத்தைக் கொத்துகிறது. ஆனால் அது எந்த மரத்தைக் கொத்துகிறதென்று அண்ணாந்து பார்த்தாலோ உடனே சத்தத்தை நிறுத்திவிடுகிறது. கருவண்டு ரீங்காரம் செய்துகொண்டே மாமரத்தைச் சுற்றிச் சுழன்றுகொண்டிருக்கிறது. நடு மத்தியானத்தில், நீ இதற்கு முன் கவனித்திருக்கிறாயோ என்னவோ, வெயிலுக்குக் களைத்துப் பட்சிகளெல்லாம் ஓய்ந்துபோன குரலுடன் கூவும்போது, தோட்டத்தில் மற்ற வேளைகளில் இல்லாத சாந்தி அந்த நேரத்தில் ஏற்படுகிறது. காக்கையின் கத்தல்கூட அப்பொழுது இனிமையாகத் தோன்றுகிறது.

இத்தனை அழகுகளையும் கண்ணால் கண்டுகொண்டு இத்தனை விதக் கூவுதல்களையும் காதால் கேட்டுக்கொண்டு வர வர, இந்தப் பத்து நாட்



களில் என் மனது ஒருவாறு தேர்தல் அடைந்துவிட்டது. பிரகிருதி தேவியின் அன்பான கை என்மீது பட்டது. அவளுடைய மணம் கமழ்ந்த மூச்சு என்மீது வீசியது. அவள் என்னைத் தன் மிருதுவான மடியில் வைத்துத் தாலாட்டினாள்—என் சோகம் நீங்கிவிட்டது.

ஆனால் என் அன்னையின் ஞாபகம் மாத்திரம் எனக்கு மறக்கவில்லை. எப்படி மறக்கும்? அஜபாஜபம்போல அது இருதயத்தில் இடைவிடாது இருந்துகொண்டிருக்கிறது. என் எண்ணங்களுக்கெல்லாம் அந்த ஞாபகம் தம்புரு சுவரம்போல அடிநாதமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆ! இப்பொழுது கண்டுகொண்டேன். துக்கத்தைப் போலப் புனிதமானவஸ்துவேறொன்றுமில்லை. நமது மனதைச் சுத்தி செய்வதற்காகத் தான் ஈசுவரன் நமக்குத் துக்கத்தைத் தருகிறான். மனம் பொருமிக் கண்ணீர் விடாதவனுடைய இதயத்தில் இரக்கமும் பொறுமையும் எட்டிப்பார்க்காது.

முன்னே யெல்லாம் என் பந்துக்களையும் நண்பர்களையும் தவிர மற்ற மனிதரைக் கண்டால் எனக்குக் கேவலம் பதுமைகள் போலத்தான் தோன்றும். இப்பொழுது தான் அவர்களும் ஜீவர்கள், அவர்களுடைய இதயமும் சந்தோஷத்தையடையும்போது களிக்கிறது, துக்கத்தையடையும்போது துன்புறுகிறது; மனிதருடைய வருத்தத்தை நீக்குவதைப்போல இன்பம் கிடையாது என்ற உண்மைகள் எனக்குத் தோற்ற ஆரம்பித்திருக்கின்றன. என் விளையாட்டுப் புத்தி போய்விட்டது. எல்லாவற்றையும் சிரத்தாரூபமான மனதோடு பார்க்கும் புத்தி வந்திருக்கிறது. இந்த எண்ணங்கள் என் மனதில் எப்பொழுதும் நிலை பெறும்படி செய்யவேண்டுமென்று சுவர்க்கத்திலிருக்கும் என்தாயாரை நான் எப்பொழுதும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு,
உன் நண்பன்

இன்னும் பதினைந்து நாட்களில் ஊருக்குத் திரும்பி வரலாம் என்றிருக்கிறேன்.

வெ. ரா.

———[௦]———

# உண்மையான கல்வி யாது?

[ ஸ்ரீமான் சுத்தானந்த பாரதியார் எழுதியது ]

"அறிவு, தொழில், உரிமை, ஆக்கம், வளமும்
விறல் நாட் டணியே விளம்பு"

என்றபடி,

கல்வியறிவும், கைத்தொழிலும், சுதந்திரமும், செல்வமும், நீர் நிலவளங்களும், ஒரு நாட்டிற்கு இன்றியமையாத அழகுகளாகும். கல்வியே ஒரு நாட்டின் கண்ணாகும். உலகிலுள்ள எல்லா பாவங்களுக்கும் காரணமான வறுமையும், மடமையும் கல்வியினாலே தான் நீங்கும். தீச்செயல்களின் இடதுகை, மீடியே; வலதுகை அறியாமையே. இவ்விரு பகைவரையும் வென்று மக்களுக்குத் தம்மையறிந்த இன்பம் பரப்புவதே கல்வியின் நோக்கமாகும்.

"ஒவ்வோ ருயிரும் உலகின் வினைக் கணியாய்த்
தெய்வம் படைக்குமெனத் தேர்"

என்றபடி, ஒவ்வொருவரையும் ஒரு நல்வினைக்கு ஆளாகவே கடவுள் படைத்திருக்கிறார். ஒவ்வொருவரிடமும் இயற்கையிலேயே, ஒரு நிகரற்ற சக்தியிருக்கிறது. அந்த சக்தியை யறிவித்து

அதைத் தன் வாழ்க்கைக்குப் பயன்படும்படி செய்வதே கல்வியின் நோக்கம். நமக்குள்ள இயற்கையறிவை, விசாலித்து, அதை சுயேச்சையான ஜீவநதிபோன்று பாயச்செய்வதே கல்விப்பயன். நமது இதயத் தாமரையின் இதழ்களை மலர்ப்பித்து, அதன் மணத்தையும் இனிப்பையும் பரப்பி, அறிவு, தியாகம், பக்தி, தீரம், சுதந்திரம், முதலியவற்றை உண்மையான கல்வி, பயக்கும்.

"அறிவொழுகந்தொழிலோ டாற்றல் சுவைசேர்
அறிவே அறிவுள் அணி"

என்றபடி, ஞானமும், நல்லொழுக்கமும், கைத்தொழில் தேர்ச்சியும், தேகபலமும், சித்திரம், பாட்டு, முதலியவற்றில் ஒரு உருசியும், ஈவதே உண்மையான கல்வியறிவு. இவ்வைந்துமே கல்விக்கு. ஐவுயிராகும். படித்தலும், எழுதலும் எண்ணலும் மட்டும் கல்வியல்ல. இம்மூன்றுமின்றியே உலகில் பல பெரியோர்கள், தங்கள் ஒழுக்கத்தாலும், வீரத்தாலும், பேர்பெற்றுவிளங்குகின்றனர். எண்ணும், எழுத்தும் கல்விக்குச் சாதகமேயொழிய அதன் முடிபல்ல. நம் பாரத வீரசிகாமணியாகிய சிவாஜி மகாராஜாவையும் வேதாந்த மதவெள்ளத்தில் உலகினர் ஆனந்த நீர் ஆடும்படி செய்த, இராமகிருஷ்ணபரமஹம்ஸரையும் பாருங்கள்.

தன்னயம் விடுத்த சமூகத் தொண்டையே கற்றலின் நோக்கமாக மேதாவிகள் மதிப்பர். தன் சமூகத்துக்குத் தொண்டு செய்வதற்கு நல்ல தேகபலம் வேண்டும். ஒரு நோயாளி தன் சமூகத்திற்குப் பயன்படான். அவனால் பலதுயர்கள் மற்றொருவருக்கு விளைகிறது. சோம்பேறிகளும் பிணியாளரே. ஆகலின் நமது தேகத்தையும் மூளையையும் போதிய அளவு வலிமைப்படுத்துவதே உண்மைக் கல்வியாம்

"மெய்யும் அறிவுடனே மேலாம் உறுதி பெறாப்
பொய்க்கல்வி யாதென் புகழ்?"

அறிவு, பலம், இவற்றுடன், ஆன்மாக்கள்மேல் அருளும் பரோபகாரம் செய்ய ஒரு ஆர்வமும், பிறக்கவேண்டும்.

'அருளில் லைத்துள் அடைபடு நூற்குப்பை
இருள்வீட் டடசலே யென்னு'

என்பதுபோல் அருளற்றவன் மனதிலுள்ள புத்தகஞானமெல்லாம் இருள்வீட்டில் அடைபட்ட சாமான் குவியலுக்கு ஒப்பாகும். அது தனக்கும் பயனீயாது? பிறருக்கும் பயன் தராது. அடக்கம், பொறுமை, அன்பு, நன்றி, சீலம், சுத்தம் இவற்றை நம் வாழ்வில் அமைத்து நம்மை இறைவனருளுக்குரிமைப் படுத்துவதே உண்மைக் கல்வி.

கற்றதன் பயனாகத் தன் உணவு, வுடை, முதலிய தேவைகளை, ஒரு பாபமற்ற தொழிலால் அடைய வேண்டும். மனிதன் வறுமையற்றிருப்பதற்குப் போதிய உணவும், உடையும் அடையவேண்டியது இன்றியமையாததே.

"ஆடை யுணவு நல் லாற்றால் அடைந்தக்கால்
ஏழை யுலகி லிலை"

என்றபடி, ஒரு தூயதொழிலால் உணவுடைகளை ஒவ்வொருவரும் அடையின் உலகில் பஞ்சமேயிராது. தன் ஆடையைத்தானே நூற்று நெய்தலும், உணவைத் தானே விளைத் துண்ணலும் தேவைகளைச் சுருக்கிக் கிடைத்ததைக் கொண்டு மகிழ்வதுமே ஒருவனுக்கு நல்வாழ்வை ஈயும். தேவை பெருகப் பெருக ஆசை பெருகும். அதனோடு இடம்பமும், பெருஞ்செலவும் பெருகித் தன் வீண் செலவிற்காக முறையற்ற வழிகளில் பொருள் தேடத் தூண்டி வாழ்வைப் பாபத்தில் ஆழ்த்திவிடும். உலகில் பெரும்பாலர், தம் வயிற்றிற்கு உணவு தேடுவதிலேயே, விலையுயர்ந்த தம் வாழ்வைக் கழித்துப்பிறந்தும் பிறவாதவராகிறார்கள்! உண்பதும், உறங்குவதும், போகிப்பதும்,



ஈனுவதும், பேணலும், பன்றிக்குக்கூடத்தான் அமைந்துள்ள செயல்களாயிருக்கின்றன. மனிதனும் இவற்றிற்காகவே வாழின் அவனை மனிதவிலங்கென்றே சொல்லவேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலான ஒரு தர்மம் மனிதனுக்கு இருக்கிறது. தன் பகுத்தறிவால் நன்மை தீமைகளையறிந்து, தன் வாழ்வை சுத்தப்படுத்திக் கொண்டு, தன்னயம் விடுத்துப், பிறர்க்கென வாழ்ந்து, ஈசன் தனக்கீந்த பணியை யறிந்து, முடித்து, அவனை அடைதலே மனிதனின் அறம். இவ்வறத்தை உணர்ந்தவனே மனிதன். தன் தேவையை எளிதில் அடைந்து, மீதி நேரங்களைப் பரோபகாரத்தில் இடுவதே நாம் செய்யவேண்டியது. நெசவு, நூற்றல், பயிர்செய்தல், மரவேலை, இரும்புவேலை, வியாபாரம், நூலறிவித்தல்முதலிய ஏதாயினும் ஒரு தொழிலைக்கற்று தன் ஜீவனத்தை ஒழுங்கான முறையில் ஈட்டவேண்டியது கல்வியின் ஒரு பயனாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆதலின் கல்வியொடு கைத்தொழிலும் சேரவேண்டும். நாம் செய்யும் கைத்தொழில் நம் நாட்டின் செல்வத்தை வெளியேற்றுதிருக்கும்படி அமைதல் வேண்டும்.

"நாட்டுத் திரவியமந் நாட்டாரே துய்த்திடவே
யீட்டு முயற்சி யினிது" என்றவாறு.

தேசாபிமானமும், தேசப்பணியில் ஆர்வமும், தேசமக்களிடம் அன்பும், கல்வியின்பயனாக உண்டாதல் வேண்டும், வெறும் வயிற்றுப் பிழைப்புக்காகக் கற்கும் கல்வி, நாடகத்தில் நடிக்கும் அரசவேடத்தவனைப்போலும்; சுவையற்ற உணவும், பயனற்ற மரமும், குரலற்ற கானமும் போலாம். நல்ல மனது, மனவுறுதி, அகக்களிப்பு, தியாகபுத்தி, சிறந்த அறிவு, இவை, சமூகவூழியத்திற்கு இன்றியமையாதன. இவற்றின் மூலமாகவே நமது வாழ்க்கையின் பயனை அடையலாம்.

மனிதன், காட்டுமிருகத்தைப்போலத்தனித்து வாழப் பிறந்தவனல்ல. அவன் உலகுடன் அளாவி, தன் ஆயுளான எண்ணெயைத், தொண்டென்னும் திரிக்கு ஈந்து, களிப்பென்னும் ஒளியைப் பரப்பவே பிறந்திருக்கிறான். ஒரு சமூகத்தின் உயர்வு அதிலுள்ள மனிதரின் கல்வியைப் பொறுத்தது. தன் சுற்றத்திற்குத் தக்கபடி தன் வாழ்வை நல்வழியில் செலுத்த மனிதன் கட்டுப்பட்டிருக்கிறான். தன் அறிவால் இயற்கையைத் தன் வசப்படுத்துகிறான். அமெரிக்கக் காடுகளினின்று ஷிகாகோ, நியூயார்க் போன்ற பெரிய ஊர்களை எழுப்புகிறான்; சகாரா வனாந்திரத்தையும் நஞ்சையாக மாற்றுகிறான்; நீராவியை உபயோகித்து காலதூரங்களை வெல்லுகிறான்; வானில் உலாவுகிறான்; நீரில் மிதக்கிறான்; இத்துணை ஜெயம்பெற்றும் இதன் பயனைக்கொண்டு பிறருக்கு உதவாவிடில் அவன் முயற்சிகள் வீணே; முயற்சிகளின் நோக்கம் பரோபகாரமேயாகும். இப் பரோபகார வுணர்ச்சியை வளர்ப்பதே உண்மைக் கல்வி. தன்னுதவியும் கல்விப் பயனின் முக்கிய குணமே. கூடியவரையில் அன்னியநாடு, அல்லது பிற மனிதரின் உதவியின்றி தன் வாழ்வுக்குத் தேவைகளான, உணவு, உடைப், பொருள்களை யடைவது வேண்டும். இராபின்ஸன் குரூஸோ என்பவன் தனிமையான தீவில் தன் தேவைகளைத் தன் முயற்சியாலேயே யடைந்ததும் கல்வியேயாகும்.

ஆதலின், உண்மையான கல்வி நமது இயற்கையான சக்திக்குச் சுதந்திரமீந்து அதைச் சரியான வழியில் செலுத்துவதேயாகும். நமது இயற்கை அறிவினின்று மாறி, காறு, மணல் வனாந்திரத்தில் பாய்வதுபோல், நமது வாழ்வை வீணாக்கி அடிமைத்தொழிலிற்புகுத்தும் படிப்பு, கல்வியாகாது.

"மனப்பாடஞ் செய்ததில் மாண்பில்லை யாமுள்ள
குணத்தாலே மாண்பைக் குறி"

என்றபடி, நூல்களைப் பாடம்செய்வது மட்டும் கல்வியாகாது. கற்றபடி நின்று, நற்குண நற்செய்கையுடையவனே கற்றவனாம்.

புலனை வென்றோனே புலவனாகும் நூல்
பலகை பிரட்டுவோன் ஊன். [கொண்

மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்புலன்களையும், நன்னெறியிற் செலுத்தித் தீநெறியிற் புகாது தடுத்தவனே புலவன். அன்றி நூற்களை மட்டும் பாடஞ்செய்து தருக்கமாடும் செருக்கு மிக்கோன், கற்றும் கல்லாதவனே யாவன். அவன் உயிரில்லா உடலுக்குச் சமானம்.

இராப்பகல் கற்கினும் இல்லையுங் காகிடு நல்
லாராய்ப்போ டாசைவிடாதாங்கு.

ஆசையை அடக்கித் தேவையைச்சுருக்கித் தனக்கு வேண்டியதற்கு மேல் சேர்க்காது அறவாழ்வு வாழ்வதே கற்றுணர்ந்ததற்கு அறிகுறியாகும். இஃதின்றி இரவும் பகலும் உருவேற்றும் புத்தகப் படிப்பு மட்டும் பயன்படாது. ஒரு மாணக்கன் தூயவாழ்க்கை வாழின் அதுவே பெருங் கல்விப் பயனாகும். ஓதலினன்று ஒழுக்கமுடைமை.

ஆதலின் நமது சிறுவர்களைத் தூய வாழ்விற் பழக்குவதற்கு, தூயசுற்றங்கள் உள்ள இடங்களே இன்றியமையாதன.

சுற்றமே ஐம்புலனுள் தோய்ந்து வாழ்க்கைத்
சுற்றமே சுத்தமுறத் துன்னு. [துணையாம்

என்றபடி, நம்மைச் சுற்றியுள்ள பொருள்களின் குணமும், மனிதரின் நடத்தையும் நமது புலன்களின் வழியே நுழைந்து நமது வாழ்க்கையை மாற்றும். வேடன் வீட்டில் வளர்ந்த கிளி வேட்டைப் பேச்சுகளையே பேசும்; வேதியன் வீட்டில் வளர்ந்த கிளி வேதஞ்சொல்லும். தான் பழகும் தோழர், இருக்கும் இடம், புசிக்கும் உணவு, கற்கும் முறை, வாழும் விதத்திற்குத் தக்கபடியே ஒருவனுக்கு இன்பதுன்பங்கள் உண்டாகும். அதிலும் இளமையில் பிடிபட்ட பழக்கங்கள் ஆயுள் முழுதும் நம்மை விடா. ஆதலின் சிறுபிள்ளைகள் கற்கும் இடம் நல்ல, இயற்கைக் காட்சிகளமைந்த சோலைகளாயும், உலகின் தீமைகளற்ற இடமாயும் இருத்தல் வேண்டும். அதன் அருகில் மலை, நதி, வயல் முதலியன விளங்குதல் நலம். சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், வானம், மேகம், மழை, மின்னல், வானவில், மலை, நதி, பயிர்கள், மரங்கள் இவற்றிலெல்லாம் ஒரு தெய்விகத் தன்மையும், பரவசமும் குழந்தைகளுக்குத் தோன்றவேண்டும். இவ்வியற்கை யற்புதங்களே மூறும்மதுக்குப் புத்தகங்களாக விளங்கவில்லையா? பிறந்ததுமுதல் புளியமரப் பொந்திலேயே தவஞ்செய்துவந்த நம்மாழ்வாருக்கு எல்லாம் கடவுள் மயமாகத் தோன்றவில்லையா? மனத்தை யுருக்கிப் பேரின்பம் ஊட்டும் தம் பாசுரங்கள் ஒன்றில் நம்மாழ்வார் சொல்வதை யறிமின்.

"ஒன்றிய திங்களைக் காட்டி
ஒளிதிகழ் வண்ணனே யென்னும்
நின்ற குன்றத்தினை நோக்கி
நெடுமாலே வாவென்று கூவும்
நன்றி பெய்யும் மழை காணில்
நாரணன் வந்தானே யென்றாலும்
என்றினு மையல்கள் செய்தார்
என்னுடைய கோமளத்தையே."

"கரும் பெரும் மேகங்கள் காணின்
கண்ணனென்றே பறக்கும்
பெரும் புலவானிறை காணிற்
பிரானுளனென்று பின்செல்லும்."

என்றபடி சூரியனிலும், சந்திரனிலும், மழையிலும், மேகத்திலும், மலையிலும், கடவுளைக்காணும் கல்வியன்றோ நமக்கு ஆத்ம ப்ரகாசந்தரக்கூடியது! எங்கிலும் கடவுள் காணும் நெஞ்சம் மக்களை நடமாடும் கோயிலாகக் காணுமன்றோ? தெய்விகமான உலகையே ஈசனுடைய கோயிலாகக் காணுமன்றோ? தெய்விகமான காரியங்களில் அம்மனம் பற்றுமன்றோ? ஆதலின் அழகிய இயற்கைப் பொலிவுள்ள விடங்களில் பிள்ளைகள் கற்பது நலம்

" இயற்கையின் புத்தகமே யின்பாக நோக்கின்
பயக்கும் அறனும் பயன்."



இடம்பமான கட்டடங்கள் வேண்டுவதில்லை. சிறு சிறு பர்ணசாலைகளே மாணக்கரும் உபாத்தியாயர்களும் வசிக்கப் போதுமானவை. கட்டடங்களில் விணைகப்போக்கும் பொருள்களைக் கொண்டு எத்தனையோ ஏழைப் பிள்ளைகளுக்கு உபயோகமான கைத்தொழில் கற்பிக்கலாம். வேனிற்காலங்களில் மர நிழல்களிலும், மழைக்காலங்களில் கட்டடங்களிலும் வகுப்புகள் வைத்துக் கொள்ளலாம். அடிக்கடி குழந்தைகளைக் காடுகள், மலைகள், நீர் வீழ்ச்சிகள் முதலிய இயற்கைப் பொலிவுகள் நிறைந்த இடங்களுக்கு அழைத்துக்கொண்டு போய்ப்பலஉண்மைகளைக் கண்டறியும்படி விடுதல் மிக்க நலமாகும். இயற்கையின் மடியில் வளரும் குழந்தைகளே சிறந்த ஞானிகளாயும், கவிகளாயும், சிற்பிகளாயும், பாவலராயும், நாவலராயும், வீரர்களாயும் ஆவார்கள். கிரேக்க தேசத்தில் தோன்றிய யஸன், அபோல்லன், ஒதுஸேயன் முதலியவர்கள் இயற்கை தன் எழிலைப் பரப்பாநின்ற மலைவனங்களிற் பயின்றவர்களே. பாண்டவரும், கிருஷ்ணனும், புத்தனும், இராமனும், இயற்கையின் மடியிலேயே வளர்ந்தார்கள்! நமது மகரிஷிகள் இயல்வனப்புள்ள காடுகளிலேயே சாந்தமடைந்து, அவர்களுடைய சாந்த கானத்தால் உலகை உய்விக்கிறார்கள். இக்காடுகள் பொழிந்த உண்மைகளே வேதங்கள்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் உண்மையான நலத்தை எண்ணினால் அவர்களை இத்தகைய இயற்கையின் மடியில், நக்கஆசிரியனுடைய பொறுப்பில், விட்டுவிடவேண்டும்.

தன்சுகத்திற் கேயல்ல தாய்நாட்டின்
யுன்சேய் பிறப்பென் றுணர், [தொண்டிற்கே

என்றபடியே, குழந்தைகளைத் தனக்குக் கடவுள் கொடுத்த நோக்கத்தை ஒவ்வொரு பெற்றோரும் அறியவேண்டும். பெற்றோரின் மூலம் ஆருயிர் வழிபாட்டிற்காகக் கடவுள் உலகிற்கு அனுப்பிய தூதரென்றே குழந்தைகளை எண்ணவேண்டும். குழந்தைகளைத் தம் சேவகத்திற்காகவே வளர்த்து, வயிற்றிற்கே அடிமையாய் ஆயுள் முழுதும் உழைக்கவிடுவது கொடிய பாவம். சுமார் ஏழு வயதிற்குமேல் பிள்ளைகளைப் பெற்றோர்கள் தம் வீட்டில் வைத்திருக்கக்கூடாது. முன் சொன்ன வகையாகக் கல்வி கற்கும்படி ஒரு ஆசாரியனிடம் விட்டுவிடவேண்டும். தாய்மார்களும் இதற்கு இணங்க வேண்டும். குழந்தைகளின் ஆன்ம வளர்ச்சியைக் கவனிக்க வேண்டும். உடல் வளர்ச்சியை மட்டும் கவனித்தல் பையைக்கருதிப் பணத்தை விடுத்தற் கொப்பாகும். ஏழு வயது முதல் சுமார் இருபது வயது வரையில் குழந்தைகள் கல்வி பயில்வதையே தொழிலாகக் கொள்ள வேண்டும்.

ஆசைபழுக்கில்லா தைம்பொறி
ஆசான் உலகிற்கே யாம்; [செற்றாரே

என்றபடி, பஞ்சேந்திரியங்களையும் அடக்கி ஆசைக்கிடங்கொடாது, விரிந்த அறிவும் சிறந்த நோக்கங்களும், தெய்வபக்தியும் ஆத்மதர்சனமும், கற்பிக்கு மாற்றலும் அகமகிழ்வும், அருளும் ஒப்புரவும் உயர்ந்த குணமும் உடையவனே ஆசானாவன். குழந்தைகளின் உட் கண்களையும் வெளிக் கண்களையும் திறந்துவிடக் கூடியவன் அவனே.

மாணக்கனுக்குக் குருவே தெய்வம். குருவே ஞானப்பால் கொடுக்கும் காமதேனு, இருள்வலி; ஞானவுடலுக்குத் தாய்ப்பால். குருவின் கவலையெல்லாம் குழந்தைகளைப் பயிற்சிசெய்வதிலேயே யிருக்கவேண்டும். அவருடைய தேவைகளையெல்லாம் பொதுஜனங்கள் கவனித்துக்கொள்ள வேண்டியது. பொருளாசையற்றவராயும், தியாகியாயும், தன் தொழிலை அறப்பணியாயும் கொண்டவரே ஆசிரியராகத்தக்கவர். தன் மாணக்கர் வீரராவதே அவர் பரிசு.

இத்தகைய எண்ணங்களுடைய ஆசிரியரிடம் சீடன் பிரம்மசரிய விரதத்தோடு கல்வி பயில வேண்டும்.

அழகு குருவிற்கே யன்புடைமை யீந்தே
தெளிநூலைக் கற்றல் சிறப்பு,

என்றபடி, தன் அன்பையும், உடல் பொருளாவி களையும், குருவின் பணியிலேயே யீந்து நல்ல அறிவைப்பெறச் சீடன் முயலவேண்டும்.

நாடி வணங்கியே நற் சேர்க்கை தொண்
சீடன் மெய் கற்றல் சிறப்பு. [டோடு

தாயும், தந்தையும், சுற்றமும், தெய்வமும் குருவே யென்று எண்ணி வழிபட்டுச் சீடன் கல்வி பயில வேண்டும். சுவை, உறக்கம், அணி முதலிய வற்றிற்கு அடிமைப்படலாகாது. மிதவுணவு மிதவுறக்கங்கொண்டு, சோம்பலை விலக்கி, எப்போதும் வண்டுபோல் சுருசுருப்பாயிருக்க வேண்டும். பணத்தையாவது, போகத்தையாவது தன் கல்வியின் நோக்கமாகக் கொள்ளக்கூடாது. தன் நாட்டுச் சரிதையில் ஒரு பக்கம் பெற முயல வேண்டும். தன் தாய்ப் பாஷை, ஆரியம், ஹிந்தி, கணக்கு, பூகோளம், நாட்டுச்சரிதை, உலகிலுள்ள வீரர் காதை, கைத்தொழில் முதலியவைகளைக் கற்கவேண்டும்.

இத்தகைய உண்மையான கல்வியினால் பிள்ளைகளின் வாழ்க்கை பரிசுத்தமடையும்; நாட்டின் பிணிபகலும்; தரித்திரம் ஓடும்; சுதந்திரம் நாடும். ஆதலின், நடமாடுங்கோயில்காள்! இத்தகைய கல்வி கற்று தேசத்திற்கு பூஷணமாய் விளங்குமின்!

வந்தேமாதரம்.

# இளைஞர்கட்கு ஓர் வேண்டுகோள்

——(೦)——

(ஆரியூர் வ. பதுமநாப பிள்ளை எழுதுவது)

திருமலிந்தோங்கிய இப்பரத நாட்டின் கண் இந்தியப்பிறவி யெய்தப்பெற்ற இளைஞர்காள்! வாக்காலும் மனத்தாலும் மெய்யாலும் வாலறிவனும் வள்ளலை வழுத்திபுய்ந்த வழிபாடுடையோர் வழித்தோன்றிய வாலிபர்காள்! எவ்விடையூறுகள் எதிரில் நிகழ்ந்தாலும், எக்கமெய்திப் பின்னடையாது, இறுதியாயகுறி நிறைவேறும் வரை உறுதிநிலையுற்று, கருமமே கண்ணாக உழைத்து, நற்பயன் கைவரப்பெற்று வாழ்ந்த ஆன்றோர்வழித் தோன்றல்களாய இளஞ் சிங்கங்காள்! "எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவி தான் யாதினுமரிதரிது காண்" எனச் சான்றோரால் அருளிச்செய்யப்பட்டவாறு, ஏனைய பிறவிகளைக் காட்டிலும் இம் மனிதப்பிறவி கிடைக்கப்பெறுதல் அரிதினுமரிது. அதனிலும் பல்வகையாலும் புனிதமும் புகழும் பெருகி வளர்ந்தோங்கப் பெற்றதும், ஏனையநாட்டு அறிஞர் பலரும் பிறவியெடுத்தற்கு பெரு விருப்பமுறுவதும், வளம் பல வாய்க்கப் பெற்றதுமாய இப்பரத நாட்டில், மானிடப்பிறவி யெடுக்கப் பெறுதல் சாலவும் அரிது அத்தகைய பெருமை வாய்ந்த இவ்வாரிய நாட்டின் வாலிபர்கள் ஏனைய நாட்டு இளைஞர்களைக் காட்டிலும் வீரத்திலும், ஞானத்திலும் தாவர சரித்திர தத்துவ ஆராய்ச்சியிலும் முற்காலத்தில் முதன்மை வகித்தது போக இதுகாலை பெரிதும் பின்னடைந்து, கேவலம் சுயநலத்தினையே கடைப்பிடித்துப் பேடிகளாக வாழ்ந்து வருவதும் பெருமை தருமோ!



கட்டிளமையுடைய இளங்காளைகாள்! எங்கணும் அலைந்து திரிந்து, ஆடிப் பாடி, பல்வகை யின்ப துன்பங்களை நுகர்ந்து, உண்டு, உடுத்து, உறங்கி, உலகமாயையில் உழன்று, திளைத்து இறுமாந்து வரும் இவ்விளமைப் பருவம் என்றும் நிலைபெற்று நிற்பதன்று. தொந்தி சரிய, மயிர் வெளிற, தந்த மசைய, இருமல் குமுற, சொற்குழற, இருகாலொடும் பிரிதொரு கால் கொண்டு மெல்ல மெல்லத்தள்ளாடி நடக்கும் முதுமைப்பருவமும் நம்மை வந்தடையும் நாளும் விரைந்து வருவதை விலக்க வியலாது. ஆகலின் இளமைப் பருவம் என்றுங் குன்றா நிலையுடையதென நிச்சயிக்காது, "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்னும் முன்னோரது முதுமொழியை மறவாது, மெய்யன்பு கொண்டு மெய்ப்பொருளுணர்ந்து, அவாவறுத்து, ஆண்டவனிடத்தும் அன்னையினிடத்தும் வழிபாடுற்று, தொண்டு பூண்டு,

நாச்செற்று விக்குள் மேல் வாராமுன் நல்
மேற் சென்று செய்யப்படும், [வினை

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளியவாறு இச்செல்வமும் இளமையும் உடலும் நிலையா என நினைத்து இன்றே—இன்னே—அறஞ்செய விரும்பல் வேண்டும்.

இவையொருபாலிருப்ப, பண்டைக்காலத்தில் அறநூலுணர்த்திய மனுமன்னனாற்பகுக்கப்பட்ட நால்வகை ஆசிரமங்களுள் முதன்மையாக நிலவுவது பிரம்மசரிய ஆசிரமமாகும். இஃதே வாழ்நாட்களின் பிற்காலத்திற்கு வழிகாட்டியாகவும் ஆன்மஞான உணர்விற்கு அணிவிளக்காயும், தத்தமது மனம் தளர்வுற்ற காலத்துத்தலையாய உண்மைவிளக்கி உய்விக்கவல்லதாயும், இம்மையிலும் மறுமையிலும் இன்பமளிக்கவல்லதாயும் இலங்குவது. மற்றும் குருகுலவாசத்தின்பயனாக ஆத்திகம் அன்பு, ஒழுக்கம், இரக்கம், பெரியோர்கட்குக் கீழ்படிதல், பேரின்பம் பெறுவகை முதலியன முற்றும் விளைதலும், பொறாமை, அவா, கொலை, களவு, புலை, பொய், சினம், சிறியோருடன் உறவாடுதல், சிற்றின்ப விருப்பம் முதலியன அறவே ஒழிதலும் அமைவது எளிதும், இயல்புமாம். ஆகலின் ஆன்மஞானமுடைய ஆசிரியன்மாரால் அக்காலத்து ஆத்திகக்கல்வி பயிற்றுவிக்கப்பெற்ற பாலர்கள் பிற்காலத்தில் தாங்கற்றவாறு ஒழுகி, "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்" துணையாய இல்வாழ்க்கையை மேற்கொண்டு, தந்தை தாயரையும் இன்புறவுபசரித்து, அறம்புரிந்து, விருந்தோம்பி, இறுதியாக அழிவில்பெரும்பதத்தையும் அடையப் பெறுவர். அத்தகைய இளைஞரது இருதயம், வீரமும் புனிதமும், அன்பும் அஞ்சாமையும், பிறர்மனையவளைப் பெற்றதாயெனப் பேணும் பான்மையும் இயல்பாகவே அமையப்பெற்றதாகுமாகலின், இக்காலத்து நடந்துவரும் இரங்கத்தக்க தீய ஒழுக்கங்கள் அவர் பால் ஒருகாலும் நிகழா. நிற்ப.

அத்தகைய பெருமை வாய்ந்த பிரம்மசரிய ஆசிரமம் இந்நாட்களில் வெறும் பழங்கதையளவில் முடிந்து, பறந்தொழிந்து விட்டது* பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களின் மனமானது இந்திய நாட்டையும், ஏனைய நாடுகளையும் உருக்குலைத்து முழுவேரறக் கல்விவரும் தற்கால பாழ் நாகரீகத்தின் பயனாக, பொருள் வருவாயையும் நிலையாப் புகழையுமே குறிக்கொண்ட ஆசிரியன்மாரால் குறிப்பிட்ட கால வளவையில், நமது தாய்த் திருநாட்டிற்கு எவ்வகையிலும் பயன்படாத பிறநாட்டுக் கணித முறைகளையும் பொருளாதார வருணனைகளையும் சரித்திரங்களையும் புகட்டப்பெற்று, உண்மை தெரியாது குழம்பிக்கொண்டு, இன்னும் நல்லொழுக்கத்தை நலிவுறுத்திபும், உலகப் பொய்யின்பக் களியாட்டுகளிலும், வீண் ஆடம்பர

---

* சேரமாதேவியிலுள்ள பரத்துவாஜ ஆசிரமம் இவ் ஆசிரியன் அவசியம் என்று கூறும் நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.—ப—ன்.

டாம்பீக நடையுடை பாவனைகளிலும், புகை பிடித்தல் முதலிய தீய ஒழுக்கங்களிலும், பெருவிருப்பத்தை விளைத்துவரும் நடவடிக்கைகளை வலியுறுத்தியும் வரும் சகவாசங்களிற் பழகுதலினின்றும் தடைசெய்யப்படாது விடுத்துவிடப் பெறுதலால், ஆரியநாட்டுச் சிரிய இளைஞருட் பெரும்பாலோர் உலகப் பொய்யின்ப நுகர்ச்சிகளில் போவாவெய்தி, இளமையிலேயே முதுமையுற்று, வீரமழிந்து, தீரங்குறைந்து நோய்வாய்ப்பட்டு, இம்மையிலும் மறுமையிலும் துன்பமேயுற்று வருந்திபுழலும் நிலையுடையோராயினர். அந்தோ! நமது இளைஞர்கள் நாமார்க்குங் குடியல்லோம் எனும் இறுமாப்பொழிந்து, அடிமையினேம், மிடிமையினேம் எனப் பல்லாற்றானும் இடுக்கணுற்று இரங்கவேண்டுவதாயது. நிற்க.

ஏனைய நாடுகள் உடையுடுக்க அறியாது, பகுத்துணர்வின்றி, விலங்கினுந் தாழ்ந்த நிலையொடும் காடுகளில் அலைந்து திரியும் மக்களை வாய்க்கப் பெற்ற அத்தகைய பழங்காலத்தே, செல்வப் பொருளிலும் கல்விப்பொருளிலும் செழிப்புற்றோங்கி, உண்மை நாகரிகத்தில் தலைமையெய்தி வாழும் மக்களை வாய்க்கப்பெற்று, தனிக்கோல் செலுத்தி, பல மொழிகட்குத் தாயகமாகநின்று அடைக்கலம் புகுந்தோர் அன்னியரேனும் அன்னாரை வெறுத்தொதுக்காது அன்புமேலீட்டாற் பெரிது மாதரித்துக் குடியிருக்க இடமுந்தந்துதவிய தயாளதேவியாம் நமது மணித்திருநாட்டன்னை—தண்டமிழரசி—இது காலை அவ் விரக்குன்றி, வளங்குறைந்து, அண்டினவர்களிடத்து அடிமையாயபார்ந்தாக்களையுடையவளாய், தனது அரியணை துறந்து, உரிமையிழந்து, விரிந்த குழலும் அழிந்த மனமும் இழிந்த கண்ணீரும் உடையவளாய் அல்லலுற்று வாடுகின்றனள். நம் தாய் மொழியும் தாய்நாடும் சீர்குலைந்து சிதைந்த சிந்தை கொண்டு அவதிப்படுங்கால், அத்தண்டமிழரசியீன்ற மக்களும் இளைஞர்களுமாய நீங்கள் தேசபாஷாபிமானம் ஒரு சிறிது மற்று, அடிமைக்கல்விப் பயிற்சியில் ஆர்வமும், பிறநாட்டு நாகரிகங்களொடு பேருறவும், உண்டாட்டுகளிலும் களியாட்டுகளிலும் உவகையும் கொண்டு, தாய்நாட்டிலேயே பிறநாட்டினரைப் போல் வாழ்ந்து வருவதும் தன்னலங் கருதாத் தத்துவ ஞானிகள் வழித்தோன்றலாய உங்கட்கு அழகாமோ? அன்றி விரமாமோ? பிரம்மசரியத்தின் வழிபொழுகியதால் அன்னையின் ஆசிர்வாதங்கட்கு ஆட்பட்ட நீங்கள் நவீன நாகரிகத்தின் பயனாக ஆண்டவன் தண்டனைக்கும் அன்னையின் சாபத்திற்குமன்றோ ஆட்பட்டீர்கள்!

ஒரு நாடு தானிழந்த உரிமையை மீண்டும் பெறுவது அந்நாட்டு இளவேறுகளாலேயேயன்றோ? இதாலி, ஜெர்மனி, எகிப்து, சீனு முதலிய நாடுகளும், அவ்வந் நாட்டு மாணவர்களாலேயே மேனிலையடைவிக்கப் பெற்றனவென்பது, அவ்வந் நாட்டுச் சரித்திரவாயிலாக அறியப்படுவதன்றோ? நிற்க. ஐரோப்பிய நாடுகள் சென்ற முறையில் ஒன்றுக்கொன்று பெரும் போர் புரிந்து, மிக்க நெருக்கடியான இடுக்கணுற்ற காலத்து, "புத்தகத்தோடு பழகுதற்கு ஏற்றதருணம் இதுவன்று; வாளொடு பழகி உங்களது உரிமையைக் காத்துக்கொள்ள வேண்டும்," என ஒரு தலைவர் உரைத்தவுடனே அந்நாட்டு வாலிபர்கள் பள்ளியைவிடுத்து, படைகளமடுத்து, தாய் நாட்டிற்காகத் தமது உயிரைத் தத்தஞ் செய்தனரன்றோ? நம் நாட்டுத் தலைவர் உங்களைப் போருக்கு அழைக்கவில்லை. எதிரிகளும் எத்தும் இரக்கவுருவினராம் சாந்தமணியெனும் காந்தியடிகளென்ன, அரசியலறிவும் அளப்பருஞ் செல்வமும் படைக்கப்பெற்ற தேசபந்துதாசரென்ன, அஞ்சா நெஞ்சும் ஆன்மஞானமும் உருவெடுத்தாற்போன்ற விவேகானந்த சுவாமிகளென்ன, இவர்களும் இன்னோரன்ன எண்ணிறந்தோரும் எவ்வகையாலும் பிறவெவர்கட்கும் எவ்வகையிடரும் விளைவியாத தருமத்தொண்டு புரிய முன்வருமாறு உங்களையேயன்றோ கூவி அழைத்தனர்--அழைக்கின்றனர்? அன்னவரது அழைப்பும் அன்னையின் ஓலமும் உங்களது இருசெவியிற் புகவில்லையோ?



இறுதியாக, ஹே பாரதநாட்டு வாலிபர்காள்! தண்டமிழ் நாட்டு மாணவர்காள்! இவ் விளமைப் பருவம் என்றும் பொன்று நிலையுடைத்தன்று. இக் காளைப் பருவத்திடையில் உடல் வளத்தையும் உயிர்க்குறுதியையும் எளிதி லழித்துவிடத்தக்க இடுக்கண்கள் எத்துணையோ வந்தடையும். அவற்றை விரித்துரைக்க இச் சிறு கட்டுரையிலியலாது. அவற்றிற்கு அறிவின் புன்மையாலாட்பட்டுவிட்டு, ஆங்காலமெல்லாம் அவனே இவனே என்றலைந்துவிட்டுச்சாங்காலத்திற் சங்கரா சங்கரா என்பதாற் பயனில்லை, எனும் ஆன்றோர் மொழியை நினையாது, பல்வகைத் துன்பங்களில் வீழ்ந்து, சொற்ப வாழ்நாட்களையுடையோராய் வாழ்ந்து, வீணே இவ்வுலகைத் துறந்து ஒழிந்து விடாது, நமது பண்டைப் பாரதமணித் திருநாட்டன்னையின் பரிதபிக்கத்தக்க நிலைமையை ஒரு சிறிதேனும் ஆழ்ந்து, கூர்ந்து ஆராய்ந்து, தெய்வப்பணியினுந் தேயப்பணியே சிறந்தது என்பதைச்சிந்தித்து, தாய்நாட்டிற்குத் தொண்டு புரியுந் தொண்டர் மணிகளாக முன்வந்து, பாரத தேசத்தை—பைந்தமிழரசியை—பல்வகையானும் முன்னேற்றத்திற்குக் கொணர்ந்து, இளமைப் பருவத்தே இயற்றவேண்டுங்கடனாயபணிசெய்து கிடந்து பண்டையுயர் நிலைமை மீண்டுமடைந்து இருமையினும் பெருமையெய்தி வாழ்வீர்களாக.

# ஸம்ராட் அசோகன்

இஃது வக்கீல் ஸ்ரீயுத பாலசந்த நாநசந்த சஹா மகராஷ்டிர பாஷையில் இயற்றிய

**கற்பனைக்கதையின் பாஷாந்தரம்.**

**(ஆநந்தமடம், சந்திரசேகரன் முதலியன தமிழில் ஆக்கிய ஸ்ரீமான் மஹேசகுமார சர்மா செய்தது)**

## முதல் அத்தியாயம்

### இந்திரபுர முற்றுகை

கலிங்கராஜ்யத்துப் பிரதான நகரமாகிய இந்திரபுரத்தை முற்றுகைபோட்டு நாலுமாதங்களாயின. விஜயலக்ஷ்மீ ஸமேதனுய் வட பாரதநாடு முழுவதிலும் பௌத்த தர்மத்தைப் பிரசாரம் செய்து வந்த அசோகனது மனதில், இப்பொழுது தனக்கு வெற்றி உண்டாகுமா உண்டாகாதா என்னும் சந்தேகம் எழத்தொடங்கியது. வட பாரதத்தின் சிறு சிறு ராஜ்யங்களை வென்று, அவற்றில் பௌத்த தர்மக்கொடியை நாட்டிவிட்டு, பிறகு வலிமைகொண்ட கலிங்க ராஜ்யத்தில் பிரவேசிக்கலாம் என்று சிலர் அசோகனுக்கு எடுத்துக் கூறினர். முதன் முதலில் இந்த யுக்தி சிறந்ததென்று புகழப்பட்டது. இது தூரதிருஷ்டி நிறைந்த யோசனையென்று ஜனங்கள் கருதினர்

சுற்றுப்பக்கங்களிலுள்ள சிறிய சிறிய ராஜ்யங்களை நம் ஆதீனஞ்செய்துகொண்ட பின்னர், தனித்துத் துணையற்றிருக்கும் கலிங்கநாட்டு ராஜ்யத்தை வெல்வது ஒரு பொருட்டாவென்று அசோகனும் அவனது ஆலோசனை நண்பரும் எண்ணினர். ஆனால் இந்திரபுர முற்றுகை ஆரம்பித்து நாலு மாதங்களாகியும், இந்திரபுரத்தார் சரிக்குச் சரி எதிர்த்து நிற்பதையும், குண்டுகளுக்கு மாறு குண்டுகள் எறிவதில் சிறிதும் தாழாமல் நிற்பதையும் அசோகன் கண்டபொழுது, தான் கொண்ட எண்ணம் பிழைபட்டதென்றும் பயனற்றதென்றும் அவனுக்குப் புலப்பட்டது. இந்திரபுரத்தை வெல்வது வேடிக்கையல்லவென்று அவனது படைவீரருக்கும் தோற்றலாயிற்று. காட்டிலுள்ள சிறிய சிறிய ஜந்துக்களைச் சம்ஹாரஞ்செய்து முடித்த பிறகுகூட, கடைசியில் வனராஜனாகிய சிங்கத்தை வேட்டையாடுதல் முதலில் இருந்தது போலவே எப்படி அருமையாயும் அசாத்தியமாயும் இருக்குமோ, அப்படியே இக்காரியமும் இருந்தது. ஆனால் அசோகனது முடிவான லக்ஷ்யமாயிருந்தது பௌத்த தர்ம ப்ரசாரமேயாம். ஆகவே அவன் இந்தக் கஷ்டத்தைக்கண்டு பயந்து நிராசைகொள்பவனல்லன். அசோகனது படைவீரரும் தர்மப்ரசாரமென்னும் மதுவுண்டு வெறிகொண்டிருந்தனர். அவர்கள் இந்திரபுரத்துக் கோட்டைச் சுவருள்ளிருந்து வெளிப்படும் தீ மழையை எதிர்த்து முன்னால் அடியெடுத்து வைக்க இடைவிடாது முயன்றுகொண்டிருந்தனர். ஆனால் இதனால் காரியம் நிறைவேறுவதாகத் தோற்றவில்லை. படைவீரசெல்லாரிலும் முன் அணியத்திருந்தவர் இந்திரபுரத்தின் எதிர்ப்புக்கு இரையாகி மாண்டனர். அப்பொழுதுதான் நாம் க்ஷணத்துக்கு க்ஷணம் பின்னுக்கே போய்க்கொண்டிருக்கிறோமென்று அசோகனது சைன்யத்துக்கு நிச்சயமாயிற்று. முதல் அணியத்திருந்தவர் உயிர் துறந்தவுடனே அவர்களது ஸ்தானத்தில் வந்து சேர்வது இரண்டாம் அணியத்தவர்க்கு முடியாததாயிற்று. கலிங்கர் கோனாகிய மிருகேந்திரன் தன் படைவீரரை உத்ஸாஹப்படுத்திக் கொண்டு மின்னல் வேகத்துடன் இந்திரபுரத்து மதிற்சுவரின்மேல் இங்குமங்கும் பளிச்சுப் பளிச்சென்று தோன்றி மறைவதாகச் சுவரின் கீழிருந்த அசோகனது ஸேநாவீரருக்குக் காணப்பட்டான். அவர்கள் குறிவைத்து எய்வதற்காக இலக்குப் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, அவ்வரசன் முன்னிருந்த இடத்தினின்று எத்தனையோ அடிதூரம் அகன்று போய்விட்டான்.

அக்காலத்து மகத நாட்டின் ராஜதானியாயிருந்தது பாடலிபுத்திர நகரம். அதன்கண் மௌர்ய குலத்தரசர் சிங்காசனமேறிச் செங்கோலோச்சி வந்தனர். அந்நாட்களில் பௌத்த தர்மம் பாரத வர்ஷத்திலே தினே தினே ப்ரபலமாகிக் கொண்டுவந்தது. அதன் சூத்திரத்தை அசோகன் தன் கையில் தாங்கியிருந்தான். பௌத்த தர்ம ப்ரசாரத்தைத் தவிர்த்து அசோகனுக்கு வேறு ஒன்றும் ஆற்றவேண்டுவதாய் இருந்ததில்லை. இதுவே தனது பரம கர்த்தவ்யமென அவன் நிச்சயம் செய்திருந்தான். தர்ம ப்ரசாரத்தின் பொருட்டு ஸம்ராட்-பதம் மிக்க உபயோகமுள்ளதென்பது அவன் கருத்து. இந்த உத்தேசத்துடன்தான் அவன் ராஜபதவிக்குரிய ஐசுவரியத்தை அநுபவித்து வந்தான். இதைத் தவிர்த்து அசோகனை ஸம்ஸாரத்தில் கட்டுண்டிருக்குமாறு செய்யக்கூடியது பிறிதொன்றுமில்லை. அவன் அவிவாஹிதனாய் இருந்தான்—ஸம்ஸாரத்தின் மாயா பாசத்தின் கட்டுகளினின்று விடுபட்டிருந்தான். இந்த ஸம்ஸார வாழ்க்கையில் அவனது அன்பைச் செலுத்துவதற்கு உரிய இடமாய் இருந்தது ஒன்றேயாம். அஃது அவனது உடன்பிறந்தாளாகிய இந்திரை. அவளது தாயார் உலக வாழ்க்கையைத் துறந்துவிட்டாள். அதனால் அவள் தாயில்லாத் துர்ப்பாக்கியவதியாயினள். கூட, அவளது பிதாவும் திடீரென்று பரலோகம் அடைந்துவிட்டான். இதனால் அவள் சொல்லொணாத சோகத்தினால் தவித்துக் கொண்டிருந்தாள். இத்தகைய நிர்ப்பாக்கியமுள்ள இந்திரையே அசோகனுக்கு இச் சம்ஸாரத்தில் எல்லாச் செல்வமுமாய் விளங்கியது. பிதா பரகதியடைந்துவிட்டமையால், பிரிய சகோதரி இந்திரையைப்பற்றிய பெரும்பாரமாகிய பொறுப்பவ்வளவும் அசோகன் மேலேயே விழுந்தது. அவளைத் தகுந்த வரனுக்கு விவாஹம் செய்து தரவேண்டுமென்றும், அது நிறைவேறுகிற வரையில் நியாய நெறியில் நின்று கூடிய மட்டிலும் ஸம்ராட்-பதத்தை தர்மப்ரசாரத்தின் பொருட்டு வஹித்துவர வேண்டியதென்றும் அதன் பின்னர் ஆத்மாநந்தம் அடையவேண்டிப் பிக்ஷுவாகி வானப்ரஸ்தாசிரமத்தை மேற்கொள்வதென்றும் அவன் தீர்மானித்திருந்தான்.

நாலு மாதம் கழிந்துவிட்டன; அப்பொழுதும் கலிங்கர்கோன் மிருகேந்திரன் அசோகனது ஜயம் சாயும்படி விட்டானில்லை. அதற்கு மாறாக, நாளுக்கு நாள் அவனது வலிமை வளர்ந்துகொண்டும், அசோகனது குறைந்துகொண்டும், வந்தமை அசோகனுக்குத் தெரியாதிருக்கவில்லை. வாள் வலிகொண்டு எந்த ராஜ்யத்திலும் பௌத்த தர்மப்ரசாரம் பண்ணுவது அவனுக்கு விருப்பமாயில்லை. அதிகாரபலத்தைக் கொண்டே ஒருவனை ஒரு தர்மத்தில் ப்ரவேசிக்கச் செய்யுமிடத்தே அவன் கண்முன் வாள் பளிச்சிட்டுக் கொண்டிருக்கும் வரையில் தான் அவன் அந்த தர்மத்தில் நிலைத்திருப்பான் என்பதை அசோகன் நன்கு அறிந்திருந்தான். ஆனால் இந்திரபுரத்தை முற்றுகையிடுவதற்கு வேறு சில காரணங்கள் இருந்தன. தர்ம ப்ரசாரத்தையன்றி ஒரு பெரிய அவமானம் மகத ராஜ்யத்துச் சேனையின் உள்ளத்தைக் கொழுந்துவிட்டெரியச் செய்துகொண்டிருந்தது. இவ்வுண்டாகிய அவமானம் அரசிளங்குமாரனாகிய விதசோகன் என்பவனை மாத்திரம் பாதிப்பதன்று; மற்று, ஸமஸ்த பௌத்தர்களையும் புண்படுத்துவதாயிருக்கிறதென்று ஸம்ஸார விரக்தர்களாகிய பௌத்த பிக்ஷுக்கள் தீவிரமாயும் அநியாயமாயும் படைவீரருக்கு உபதேசிக்கலாயினர். அக்காலத்தே ஸம்புஷ்டாசார்யன் என்பான் பௌத்த பிக்ஷுக்களின் ஸங்கநாயகனாயிருந்தான். அவன் பௌத்த தர்மத்தை விரைவில் உந்நதியடையச்செய்யவேண்டுமாயின் குமார விதசோகனுக்குக் கலிங்க தேசத்து ராஜகுமாரியை விவாஹம்செய்துவைப்பது அவசியமென்று ராஜமாதாவாகிய புத்திமதி தேவிக்கு உபதேசம் செய்திருந்தான். அது நிறைவேறும்படியான முயற்சியைச் செய்யுமாறு ராஜமாதா புத்திமதி அசோகனை ஏவினாள். இந்திரபுர ராஜ்யத்தின் அழுத்தமான வைதிக தர்ம நிஷ்டையும் ஸநாதந தர்மத்தில் அதற்குள்ள அமோகமான சிரத்தையும் அக்காலத்தே பாரதநாடு முழுவதிலும் பிரஸித்தமாயிருந்தன. அக்காலத்தே இந்திரபுரம் ஸநாதந தர்மத்தின் கேந்திர ஸ்தானமாய் விளங்கியது. ஆங்கு ஸநாதந தர்மத்தினருக்கு விசேஷ பிரதிஷ்டை உண்டாயிருந்தது. இதை அசோகன் அறிவான். மிருகேந்திர ராஜன் தன் மகளைப் பௌத்த தர்மத்தைச்சேர்ந்த ராஜகுமாரனுக்கு ஒருகாலும் கொடுக்கமாட்டானென்று அவனுக்கு நிச்சயமாய்த் தெரியும். இந்தச் சரீர சம்பந்தம் உண்டாவதனால் கலிங்க ராஜ்யம் அநாயாஸமாய்த் தன் தார்மிக அதிகாரத்துக்குள்-எல்லைக்குள்-வந்துவிடுமென்று அசோகன் கருதினானாயினும், இவ் விவாஹத்துக்கு மிருகேந்திர மன்னன் ஒருபோதும் ஸம்மதிக்க மாட்டானென்று அவனுக்குத் தெரிந்தது. ஆகவே அவன் ராஜமாதாவை ஸமாதானஞ்செய்ய முயன்றான். அதன்மேல் ராஜமாதா புத்திமதி, "என் சக்களத்தி மகனாயிருப்பதனாலல்லவோ நீ என்னை ஒவ்வொன்றிலும் அவமானம் செய்துவருகிறாய்!" என்று அவன் மீது சீறினாள். மாற்றாந் தாயாகிய புத்திமதிதேவி எவ்வளவு இரும்பு நேர் நெஞ்சமுடையவளென்பது அசோகனுக்குத் தெரியும். அரமனையிலே கலஹம் உண்டாக இடங்கொடுக்கவும் அவனுக்கு இஷ்டமில்லை. அத்தகைய அநர்த்தம் ஒன்றும் விளையாதிருக்க வேண்டியே

அவன் தன் மாற்றாந்தப்பியாகிய விதசோகனுக்கு ராஜகுமாரியாகிய பிரணயினியைத் தருமாறு மிருகேந்திர ராஜனை யாசித்தான். மன்னன் மிருகேந்திரனும் அற்பசொற்பமான தருமோன்மத்தனல்லன். அவன் பின்வருமாறு அசோகனுக்குச் செய்தி சொல்லி அனுப்பினான்—"நீயோ நாஸ்திகன்; ஸநாதந பாரதவர்ஷத்தில் வசித்துக்கொண்டு நீ அதைக் களங்கப்படுத்திய வண்ணமாய் இருக்கிறாய். பகிஷ்காரத்தினால் களங்கமுற்ற கருமுகத்தைத் தாங்கி, பரமோஜ்ஜ்வலமாகிய இந்திரப்ரத்து ராஜவம்சத்துடன் விவாஹ ஸம்மந்தம் செய்துகொள்ள வேண்டுமென்னும் அவ்வளவு உச்சமான அபீஷ்டம் கொண்டதுமன்றி, அதை நீ எனக்குத் தெரிவிக்கவும் ஸாஹஸித்தது, இந்த மிருகேந்திரனை அவமானப்படுத்தியது போலும்! குள்ளநரி பெண்சிங்கக்குட்டியை அடையவிரும்புவதாகிய வலையில்விழுவது க்ஷேமமன்று! இதை அறிந்து ஒழுகுவதே புத்திமானுக்கு லக்ஷணம்," என்று. இந்தச் செய்தி பாடலிபுத்திரத்தில் வந்து சேர்ந்ததோ இல்லையோ, அந்த க்ஷணமே அசோகனது சேனை இந்திரபுரத்தை நோக்கி நடக்கலாயிற்று. விவகாரம் இந்திரபுரத்தாரோடு நடக்கவேண்டியிருந்தமையால், சேனாதிபதியின் மீதே சகல பாரத்தையும் சுமத்துவது அசோகனுக்கு உசிதமென்று தோற்றவில்லை. ராஜமாதா புத்திமதி தேவியும் அசோகன் இந்திரபுரத்தின்மீது படையெடுத்துச் செல்லட்டும், அவனுக்குத் துணையாக விதசோகனும் போகட்டும், என்று தன் ஆஜ்ஞாரூபமான இச்சையை வெளிப்படுத்தினாள். அதற்கிணங்க, அசோகன் தன் அரும்பெருஞ் சேனையோடுகூட இடையூறின்றி இந்திரபுரத்தின் எல்லையைப் போயடைந்தான். அப்பொழுதே மிருகேந்திரன் திடுக்கென்று கண் விழித்துக்கொண்டான்.

இத் தகைய சங்கடம் விரைவிலேயே வரப்போகிறதென்று ஏற்கனவே மந்திரி விசாகாநந்தன் புத்திக்குத் தோற்றியிருந்தது. அப்பொழுது அவன் மிருகேந்திரனோடு "தாங்கள் சொல்லியனுப்பிய அவமானமுண்டாக்கத் தக்க வார்த்தைகளைக் கேட்டு அசோகன் சும்மாஇரான். வட்டியும் முதலுமாய் அவ் அவமானத்தைத் தீர்த்துக்கொள்ள அவன்சிறிதும் தவறமாட்டான்" என்று எச்சரிக்கையும் செய்திருந்தான். அதற்கு உத்தரமாக மிருகேந்திரன் "அப்படி நேருமானால், நமக்கும் நம்முடைய தோள் வலியைக் காட்டுவதற்கு ஏற்ற தருணம்வாய்க்குமே" என்றான். இவ்வாறு கூறியது வீரலக்ஷணத்துக்கு உரியதாயிருப்பினும், ராஜநீதியறிவும் தூரதிருஷ்டியுமுடைய புருஷனுக்குப் பொருந்தினதாயில்லை. ஆயினும் விசாகாநந்தன் அஜாக்ரதையாயிராது, பட்டணத்தின் கோட்டை மதிற்சுவர்களைப் பலப்படுத்தி, அவற்றையும் பாதுகாக்க வேண்டி தீரர்களான படைவீரர்களை ஏற்படுத்தியிருந்தான். குண்டுகளும் மருந்தும் சேகரித்துப் பதனமான விடத்தில் சேமித்து வைத்திருந்தான். தன மந்திரி இத்துணை முயற்சி செய்வதைக் கண்டு மிருகேந்திரன் அவனைப் பரிஹஸித்தான். இப்பொழுதோ, தன் பரிஹாஸம் எவ்வளவு அநுசிதமானதென்றும், அஸந்தர்ப்பமானதென்றும் மிருகேந்திரன் அறிந்துகொண்டான். உடனே அவன் இருமடங்கு உத்ஸாஹத்துடனே சத்துருவை எதிர்க்கக் கச்சை கட்டினான்.

எவ்வளவுக்கெவ்வளவு அசோகனது சேனை மடிந்ததோ அவ்வளவுக்கவ்வளவு இந்திரபுரத்து வைதிக க்ஷத்திரியர்களின் உள்ளம் பூரிக்கலாயிற்று. இருதரத்துப் படைகளும் தர்ம மதத்தினால் வெறிகொண்டிருந்தன. அப் படைவீரர் தங்கள் உயிர்களைத் துரும்பெனக் கருதிப் போர் புரியலாயினர். ஆனால் வெற்றியின் தராசுக்கோல் மிருகேந்திரன் பக்கமாகவே சாய்வதாய் இருந்ததென்பதற்குரிய லக்ஷணம் ஸ்பஷ்டமாய்க் காணப்பட்டது. இதுகாறும் வெல்லற்கரிய தென்று கருதப்பட்டுவந்த அசோகனது சேனை இந்திரபுர



யுத்தத்தில் தன் பெயரையும் பிரக்யாதியையும் இழக்குமாறு ஒருவேளை நேரிடவும் கூடுமோ வென்று ஒவ்வொரு விசாரிலனான பௌத்தனுக்கும் அச்சமும் ஐயமும் உண்டாகத் தலைப்பட்டது. அசோகனது சைனியத்தில் ஆயிரக்கணக்கான வீரர் போர்க்களத்தில் நாளும் வீழலாயினர். காயப்பட்ட வீரருக்கு வேண்டிய உபசரணையும் பணிவிடையும் சரிவர நடைபெறும்படி செய்ய முடியவில்லை. மரித்தவரின் உத்தரக் கிரியைகள் நடக்கக்கூடவில்லை. இதனால் சுற்றுப்புறத்துக் காற்று கெட்டுப்போகலாயிற்று. அதன் பயனாய் அசோகனது சைனியத்தில் பயங்கரமான கொள்ளை நோய் தோன்றலாயிற்று. ஒரு பக்கத்தில் இந்திரபுரத்து வைதிகரின் தாக்குதல், மற்றொரு பக்கத்தில் கொள்ளை நோயின் கொடுமை, இவ்விரு சங்கடமுமாகிய பாக்கு வெட்டிக்குள் அகப்பட்டுக்கொண்டு தவித்தது அசோகனது சைனியம். இத் தகைய நிலைமையே இன்னம் சில நாள் இருந்துவருமானால், பௌத்த சேனை யவ்வளவும் அப்படியே அழிந்துவிடுமோ என்னும் அச்சம் அசோகனுக்கு உண்டாகத் தலைப்பட்டது. சந்தி செய்துகொண்டு தன்னைத் தாழ்த்திக்கொள்வது அசோகனைப் போன்ற மானச் செல்வனாகிய ஆண்மகனுக்கு எப்போதும் உடம்பாடாகமாட்டாது. சந்தி செய்யும் யோசனையோடு வெற்றி பெறாமலே ராஜதானியாகிய பாடலிபுத்திரத்துக்குத் திரும்பிப் போவதென்னும் எண்ணம் உண்டாகுந் தோறும் அசோகனுக்கு ஆயிரம் தேள் கொட்டியது போல் வேதனை உண்டாயிற்று. ஆனால் இப்பொழுது அவனுக்கு வரப்போவது வெளிப்படையாய் விளங்கலாயிற்று. இதையே விடாப்பிடியாய்ப் பாராட்டுவதனால் இனி விளையப்போவது இன்னதென்று அவன் அறிந்துகொண்டான். காலமோ மிகவும் பிரதிகூலமாய் விட்டது. இன்னது செய்வது, இன்னது தவிர்ப்பது என்று ஒன்றுமே அவன் புத்திக்குத் தோற்றவில்லை.

அர்த்த ராத்திரி வேளை. காயப்பட்டவர்கள் பெருமூச்சு விட்டுப் புலம்புவதும், பிணங்களைப் பிடுங்கித் தின்னப் பதுங்கியிருக்கும் கோட்டான்களின் அநிஷ்டசூசகமான கத்துதலும் தவிர வேறெவ்வித சத்தமும் காவற்காரரின் குரலோசையைத் தடுத்து நிற்கவில்லை. அழுகிய சவங்களினின்று துர்க்கந்தம் வீசிக்கொண்டிருந்தது. நாள் முழுவதும் நடந்த சண்டையினால் பூமியானது இரத்தம் தோய்ந்து வழுக்கலாய்ப் போயிருந்தது. காவற்காரர் மூக்கை அழுத்திப் பிடித்துக்கொண்டு மெல்ல மெல்ல இங்குமங்கும் நடந்துகொண்டிருந்தனர். அசோகனது பாசறையில் இன்னமும் விளக்கு பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்தது. அசோகன் ஏதோ ஆழ்ந்த விசாரத்தில் மூழ்கி யிருந்தான் -- இன்றளவும் அவன் எத்தனையோ யுத்தங்களில் போர் புரிந்துண்டெனினும் அவனது மலர்ந்த முகத்தில் சிந்தையின் பிரபுத்துவம் இன்று போல் என்றும் உண்டாயிருந்ததில்லை. அச் சமயம் அவனது மிகுந்த பரிகாசமுள்ள நண்பனுக்குக்கூட, இவன்தான் அசோகன்—மலர்ந்த முகமுடைய அசோகன்--என்று எளிதில் அறிந்துகொள்ளமுடியாது. அவனது சிந்தாகுலமான முகமண்டலத்தில் சிறிது நேரத்துக்குப் பின் ஒரு வகை உறுதிப்பாடு அல்லது அமைதியின் குறி தோற்றியது. இதற்குள் ஏதோ ஒன்று கீழே விழுவதுபோன்ற சத்தம் கேட்டது. அசோகன் பாசறையினின்று வெளியே வந்து பார்க்கையில், எதிரிலுள்ள காவற்காரன் வழுக்கலான தரையில் அடி சருக்கி விழுந்திருக்கக்கண்டான்.

அசோகன்: "மோஹனா, அடி படவில்லையே?"

மோஹனன் (எழுந்துகொண்டே தாழ்மையாய்): "இல்லை மஹாராஜா, சும்மா கால் சருக்கி விட்டது."

"சிற்றப்பாவின் பாசறையில் இன்னும் விளக்கு எரிகிறதா!"

"ஆமாம், மஹாராஜா, மந்திரியார் இன்னும் விழித்துக் கொண்டிருக்கிறார். பெரிய பெரிய சைன்னிய அதிகாரிகள் இப்பொழுதுதான் அவருடைய பாசறையிலிருந்து வெளியில் வந்து கொண்டிருக்கிறார்கள், மகாராஜாவுக்கு திருவுள்ளமானால்—"

"ஆமாம், அவரை என் பாசறைக்கு அழைத்து வா."

மோஹனன் தலைகுனிந்துவணங்கி அந்தக்ஷணமே மந்திரி ராதாகுப்தனது பாசறையை நோக்கிச் சென்றான்.

கால் நாழிகை நேரத்துக்குள் மோஹனன் ராதாகுப்தனை அசோகனது பாசறைக்குள் அழைத்துக்கொண்டு வந்தான். மந்திரி ராதாகுப்தனைப் போல் அவ்வளவு இராஜநிஷ்டையுள்ளவன் அக்காலத்தில் ராஜ்ய முழுமையிலும் வேறொருவனுமில்லை. பௌத்தர்களின் பாடலிபுத்திர நகரத்தில், பௌத்தர்களின் ஸாம்ராஜ்யத்தில், அசோகனைப் போன்ற அழுத்தமான பௌத்தன் ஸிங்காசனத்தில் வீற்றிருக்கையில், பிரதான மந்திரியின் பிரதிஷ்டை பெற்ற ஸ்தானத்தில் ராதாகுப்தனைப்போன்ற ஸநாதநதர்மி அமர்ந்திருப்பது மிக்கஆச்சரியமாயிருந்தது. அசோகனைத்தவிர்த்து ஏனைய பௌத்தர் எல்லோரும் அவனைப்பகைத்து வந்தனர். ராஜமாதா புத்திமதி அவனது அழிவின் பொருட்டுச் செய்த முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல. ஸப்புஷ்டாசார்யனும் ராதாகுப்தனது உயிரைப்போக்க எத்தனையோ கபடசூழ்ச்சிகள் செய்திருந்தான். ஆயினும் ராதாகுப்தன் இவ் வாபத்துகளிலிருந்து இவ்வளவு காலம் தப்பிச் சுகமாய் வாழ்ந்துவந்தான். இப்பொழுது மந்திரிக்கு அறுபதாம் வயது ஆரம்பம். ஆனால் அவனது பகைவர்கள் அவனது செய்கைகளை எவ்வளவு நுட்பமாய் ஆராய்ந்து பார்த்தும், அவனது ஸ்வதர்மநிஷ்டைக்கு முன் ராஜநிஷ்டை தாழ்வுற வேண்டியிருந்ததென்று காட்டக்கூடிய நிதர்சனம் ஒன்றேனும் கிடைக்கவில்லை.

விருத்தனாகிய ராதாகுப்தன் பாசறையில் அசோகனுக்குச் சமீபத்தில் வந்து நின்றான். அசோகன் அவனை உட்காரும்படி ஓர் ஆஸனத்தைக் காட்ட, அதில் அமர்ந்து ராதாகுப்தன், "மஹாராஜா, இவ்வளவு இரவு கழியும் வரையில் தாங்கள் விழித்திருப்பீர்களென்று நான் எண்ணவேயில்லை," என்றான்.

அசோகன் வியாகுலத்தோடு கூறுகிறான், "சிற்றப்பா, தங்களுக்கு இந்த வயதில், இச்சமயத்தில், கஷ்டம் கொடுப்பது மிகவும் அநுசிதம். ஆனால் நான் என்ன செய்வேன்? நாம் இங்கே எந்த நோக்கத்துடன் வந்தோம்? இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது? பகைவரின் எதிர்ப்பினாலும், ரோகத்தின் கோலாஹலத்தினாலும் தினந்தோறும் ஆயிரக் கணக்கான உயிர்கள் மடிந்து போகின்றன. இப்படி உயிர்ச் சேதமாவதை இன்னும் எத்தனை நாள் பார்த்துக்கொண்டிருப்போம்? சிற்றப்பா, தங்கள் கட்டளைப்படி நடந்துவரும் மனிதத் தன்மைக்கடாத இந்த நரவதத்தைத் தாங்கள் எப்படிப் பார்த்துப் பொறுத்துக்கொண்டிருக்கிறீர்கள்? பிராணனைவிட மிகப்பிரியமான நம் ஜனங்களையே அழித்து, அநேக வீரரின் இரத்தத்தைச் சிந்தச் செய்து, அநியாயமாய் இந்திரபுரத்தில் பௌத்த தர்மக்கொடியை நாட்டுவது உண்மையான எந்த பௌத்தனுக்கு—கௌதம புத்த பகவானது எந்த உண்மையான சிஷ்யனுக்கு—விருப்பமாயிருக்கும்?

ராதாகுப்தன் பெருமூச் செறிந்துகொண்டு, "மஹாராஜா, சமயம்மிக்க நெருக்கமாய்விட்டது—தங்கள் பிதாவின் காலம் முதற்கொண்டு ராஜபீடத்துக்குத் தொண்டு புரிந்து வந்திருக்கிறேன் ஆனால் இப்படிப்பட்ட கடினமான சந்தர்ப்பத்தை இப்பொழுதுதான் கண்டேன். ஆயிரக் கணக்கானவரின் இப் படுகொலையைப் பார்த்தும் இக் கண்கள் இந்தக் கிழவயதில் ஏன் இன்னும் குருடாய் விடவில்லை? சரீரத்தில் இப்பொழுது அந்தத் தேஜஸ் இல்லை; இல்லாவிடில் இந்திரபுரத்து மதில்மேற் சென்று இமைப்பொழுதில் பகைவரைச் சங்கரித்துவிடுவேனே," என்றான்.

"சிற்றப்பா, இது தங்களுடைய வீண் எண்ணமே. தங்கள் சைனியத்தில் வீர சூரர்களுக்கென்ன குறைவா? இன்றுவரை வெல்லற்கரியவர் என்று புகழ்பெற்றுள்ள என் படைவீரர் உயிரைப் பொருட்படுத்தாமல் போர்புரிந்து கொண்டிருக்கிறார்கள்; ஆனால் இந்திரபுர சேனைக்குக் கோட்டைச் சுவரின் பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த சௌகரியம் நமக்கில்லை. நம்மைப்போல் அவர்களுக்கு அன்னபான கஷ்டமில்லை. நோயும் நலிவும் அவர்களை அடியோடழிக்கக் கச்சை கட்டிக் கொண்டிருக்கவில்லை. இதுதான் காரணம் இன்று மிருகேந்திரனுக்கு வெற்றி உண்டாகுமென்று தோன்றுவதற்கு."

அசோகனுக்கு ஏதாவதொரு விடை கூற வேண்டியிருக்கிறதே என்ற எண்ணத்துடன் ராதாகுப்தன், "இன்று அவனுக்கு வெற்றி, நாளை நமக்கு வெற்றி, இதற்காகச் சிந்திப்பதில் பயனில்லை," என்றான்.

"சிற்றப்பா, இந்த முகந்துடைக்கும் வார்த்தைகளைக் கூறவேண்டாம். தங்கள் வாயிலிருந்து வரும் இரண்டு இனிய வார்த்தைகளைக் கேட்டு என் வியாகுலத்தை ஆற்றிக்கொள்ளலாமென்னும் கருத்துடன் நான் தங்களை அழைக்கவில்லை. தங்கள் அநுபவம் நிறைந்த புத்திமதியே எனக்குத் தேவை. எப்பொழுது என் சேனை உத்ஸாஹத்தோடும் தேஜஸ்ஸோடும் கூடியிருந்ததோ, எப்பொழுது பட்டினியால் உண்டாகும் வாதைகளை அது அநுபவியாமலிருந்ததோ, எப்பொழுது அது நோயினால் அழுத்தப்படாமல் வெற்றி பெறுவோம்,விஜயக்கொடி நாட்டுவோம்,என்னும் நம்பிக்கை கொண்டிருந்ததோ, அப்பொழுது ஸித்தியாக முடியாதிருந்த காரியம், இப்பொழுது நோயால் மெலிந்து, கஷ்டத்தால் ஏங்கி, இடுக்கணுற்று உயிர்தப்பிப் பிழைத்திருக்கும் படைவீரரால் முடியுமென்று கூறுவது, சிற்றப்பா தங்களுக்கு எவ்வாற்றானும் அழகல்ல. இந்தத்தர்ம யுத்தத்தை எவ்வாறு நான் முடிவுக்குக்கொண்டுவர வேண்டுமோ சொல்லுங்கள். என் கண்களுக்கு முன் நடப்பதாகிய இந்த நரஹத்தியைப் பார்த்திருக்க என்னால் முடியாது," என்று கம்பமுற்ற குரலோடு அசோகன் கூற, அவனை ராதாகுப்தன் இவ்வாறு ஸமாதானப்படுத்தலாயினான்:

"மஹாராஜ, வாஸ்தவமான நிலைமை எனக்குத் தெரியாதிருக்கவில்லை. ஆனால் நான் வேலைசெய்யும் உத்தியன்தானே. விசாரம் செய்யாமல், விளையப்போவது யாதென்று கருதாமல், எந்தக் காரியம் நமக்கு இடப்படுகிறதோ, அதைச் செய்யவேண்டியதுதானே நமது கடமை. முழு மனதையும் செலுத்தி அதைச்செய்ய நாம் ஏன் முயலவேண்டும்?—"

"என்ன? நான்—அசோகன்—மகத தேசத்து மன்னனல்லவா? என்னுடைய பிரபுத்துவம் என் பிரஜைகளின்மேல் செல்லாதா? ஆளுகைக் காரியத்தில் என்னுடைய அபிப்பிராயத்துக்கு யாதும் மதிப்பில்லையோ? இந்த யுத்தத்தை நடத்துவது என் கைக்குள் இல்லையா? சிற்றப்பா, தாங்கள் இப்படி ஏன் சொல்லுகிறீர்கள்? தங்களுக்கு இஷ்டமானால், நாளைக்கே சந்திசெய்து—"

"மஹாராஜ, யுத்தம் செய்வதல்லவோ அசோகனது வேலை. சந்திசெய்வது அசோகனது காரியமல்லவே! யுத்தத்தில் வெற்றிபெறுவதே அசோகனது வேலை! வெல்லப்பட்ட பிரதேசங்களிலே ஏற்றத் தாழ்வுகள் செய்வது அசோகனது ஆற்ற

னுக்குட்பட்டதன்று. மஹாராஜ, காலம் கஷ்டமாய்க்கொண்டுவருகிறது. என்னை மன்னித் தருள வேண்டும். அசோகனைப்போலும் நியாயசீலனும், பிரஜாஹிதகற்பரனும், சூரனும், ராஜநீதிஞ்ஞனும், ஸாக்ஷாத் ஸ்ரீராமபிரானுக்கு நிகரானவனும் ஆகிய அரசனை அடையும் பாக்கியத்தைப் பெற நாங்கள் கொடுத்து வைக்கவில்லை. மகத தேசம் அவ்வளவு புண்ணியம் செய்யவில்லை.

"நான் பாடலிபுத்திரத்தின் பட்டாபிஷிக்தனை பார்த்திவனாயிருக்கையில் தாங்கள் ஏன் இப்படிக் கூறுகிறீர்கள்?"

"இன்று என் முன் மகத நாட்டு ஸிம்ஹாஸனத்தில் ஸத்குணசீலனாகிய அசோகன் வீற்றிருக்கிறானென்று யாவரே கூறத் துணிவர்? பாடலி புத்திர நகரத்தின் ராஜ்ய சூத்திரம் பௌத்த பிக்ஷுக்களின் கையிலல்லவோ இருக்கிறது? மகத நாட்டுப் பெரும் ஸாம்ராஜ்யத்தின் கடிவாள வார் ராஜகுலோத்பன்னனாகிய அசோகன் கையிலன்று, க்ஷாத்திராகிய பிக்ஷுக்களின் அதிகாரத்திலல்லவோ இருக்கிறது! அரசியல் ஆணைகள் பௌத்த பிக்ஷுக்களிடத்தினின்று புறப்படுகின்றன. அசோகன் அவற்றை நிறைவேற்ற வேண்டியவனாயிருக்கிறான்! மகாராஜா, பௌத்தபிக்ஷுக்கள் தங்களைத் தம் கையில் அடக்கிய சூத்திரப்பாவை யென்றல்லவோ மதித்திருக்கின்றனர்! சரீரத்தில் பிராணன் எது வரையில் தங்கியிருக்கிறதோ, அதுவரையில் யுத்தம் புரிவதே தங்கள் வேலை. சந்திபாகிய சிக்கல் முக்கலில் தாங்கள் ஏன் சிக்கிக்கொள்ள வேண்டும்?—"

ராதாகுப்தனுக்கு அதன் மேலே ஒன்றும் பேச முடியவில்லை. அவன் தொண்டையை அடைத்தது அவனுக்குண்டாயிருந்த ஆவேசம்.

"சிற்றப்பா, தாங்கள் சொல்வதன் கருத்து எனக்கு விளங்குகிறது. எனக்கு ராஜ்யத்துடன் சிறிதும் சம்பந்தமில்லை. உலக விஷயத்தில் நான் உதாஸீனனாயிருக்கிறேன். தர்மப்ரசாரத்தைத் தவிர்த்து வேறு எக்காரியத்தின் பொருட்டும் நான் எனது அதிகாரத்தின் உதவியை வேண்டுவதில்லை; அன்றியும் வீணான ராஜ்யாடம்பர விவகாரங்களில் மனதைச் செலுத்துதலும் எனக்குப் பிடிக்கவில்லை. மாதாபுத்திமதிதேவிக்கு ராஜ்யத்தை ஆளுவதில் நிரம்ப அவா இருக்கிறது. குமார வீதசோகனை ஸிம்ஹாஸனத்தில் ஏற்றுவிப்பதற்கு அவர் செய்த முயற்சிகளெல்லாம் வியர்த்தமாயின. ஆகவே நம்முள் பரஸ்பரம் வீண் கலஹம் உண்டாகாதிருக்க வேண்டுமென்னும் எண்ணத்தினால் நான் புத்திமதி தேவியின் இச்சைக்கு மாறாக ஒன்றும் செய்யாதிருக்கிறேன்," என்று மிக்க அமைதியுடன் கூறினான் அசோகன்.

ராதாகுப்தன்: "அதனாலேதான் அன்புமிக்க அசோகனது அரசியல் முறை அநியாயமுற்றதாயிருக்கிற தென்னும் அபகீர்த்தி பரவியிருக்கிறது."

"சிற்றப்பா, ராத்திரி வெகு நேரமாய்விட்டது; நான் நாளைக்கு என்ன செய்யவேண்டுமோ, அதைச் சொல்லுங்கள் இப்பொழுது. இந்த நர ஸம்ஹாரத்தைக் கண்டு நடுங்குகிறது என் நெஞ்சம். இப்படிப்பட்ட சமயத்தில் சரியான யோசனை சொல்லக்கூடியவர் தங்களைத் தவிர்த்து வேறே யார் இருக்கிறார்கள்? சிற்றப்பா, சொல்லுங்கள் நான் என்ன செய்யட்டும்? தாங்களே தெளியச் சொல்லி என் சிந்தையைத் தீர்க்கவேண்டும்."

மந்திரி ராதாகுப்தன் தழதழத்த குரலில் கூறலுற்றான்:—"என் மீது தங்களுக்குள்ள நிஷ்டையைப்பற்றித் தங்களிடம் நான் மிகக் கடமைப் பட்டிருக்கிறேன். தாங்கள் என்னைப் போன்ற ஸநாதனதர்மியினிடம், பௌத்த தர்மத்தின் பக்தத்துவேஷியினிடம், அவனது ஸ்வதர்மஸ்தர்களுடனேயே நடந்துவரும் யுத்த சம்பந்தமாய் யோசனை கேட்டு என்னுடைய கௌரவத்தை அதிகப் படுத்திவிட்டீர்கள். ஸ்வாமி (எஜமானன்)



காரியத்தைப் பக்தி சிரத்தையுடன் செய்வதைவிட மேலான மற்றொரு தர்மம் எனக்கில்லை. மகாராஜராகிய தேவரீரது க்ஷேமத்தைக் கருதுவதைத் தவிர்த்து எனக்கு வேறு சுகமில்லை. மஹாராஜா, நாளைக்கே தாங்கள் சந்தி செய்ய வேண்டாம்."

"அப்படியானால், இன்னமும் ஆயிரக்கணக்கானவர்களைப் பலி கொடுக்கட்டுமா?"

"நாளை ஒரு நாள் மாத்திரம் தாங்கள் எப்படியாவது கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள்—ராஜமாதா புத்திமதி தேவியையும் அவரது ஆலோசனை நண்பரையும் நாளைக்கு அவசியமாய்ச் சொல்லியனுப்பி இந்திரபவன குஹைக்கு வரவழையுங்கள்—"

அசோகன் இடையில் தடுத்துக் கூறலானான்: "அவர்கள் எப்படிச் சொல்லுகிறார்களோ அப்படிச் செய்வோம்—இதுதானே தாங்கள் சொல்வது? இல்லை யில்லை, மக்களின் உயிர் இப்படி அநியாயமாய் என் கண் முன்னே சேதமடைந்து வருகையில் அவர்களது யோசனையை எதிர் பார்த்திருக்க எனக்கிஷ்டமில்லை—அதனால் யாதொரு பிரயோஜனமும் உண்டாகுமென்று தோற்றவில்லை."

"மஹாராஜா, நான் என்ன சொல்லுகிறேனென்பதை முதலில் கேளுங்கள்—நாளை இரவு எல்லோரும் இந்திரபவன குஹையில் ஒன்றாய்க் கூடும்போது அவர்களுக்கு முன்பாக யுத்தவிஷயத்தைப் பிரஸ்தாபம் செய்யுங்கள்—சந்திக்கு அநுகூலமாய் அவர்கள் அபிப்பிராயப்படும் பக்ஷத்தில் உத்தமமே; இல்லாவிட்டால் தங்களிஷ்டப்படி காரியம் நடத்துவதில் தாங்கள் ஸ்வதந்திரமுள்ளவர்களாகவே யிருக்கிறீர்கள்."

"அவர்களுடைய அபிப்பிராயம் சந்திக்கு அநுகூலமாய் ஒருகாலும் இராது. ஆயினும் தங்கள் இச்சைப்படியே அவர்களுக்கு ஆளனுப்பி நாளை இரவு இந்திரபவன குஹைக்கு அவர்களை வரவழையுங்கள். ஆனால் யுத்தத்தை என்ன விதமாய் முடிவுக்குக் கொண்டுவரலாம்?"

அமைச்சன் ராதாகுப்தன் வெட்கிப் போய் நடுக்கமுற்ற குரலில் குணுகுணுத்துக் கொண்டு "சந்தியைத் தவிர்த்து வேறு வழி இல்லை," என்றான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் பாடலிபுத்திர நகரத்தை நோக்கித் தூதர் புறப்பட்டனர்.

அசோகனது சித்தம் சிறிது ஸமாதானம் அடைந்தது; நித்திரையும் தன் அதிகாரத்தை அவன் மேல் செலுத்திற்று.

(தொடரும்)

---

மனிதன் எல்லோருடைய அபிப்பிராயங்களையும் பின்பற்ற வேண்டியதில்லை: இயற்கையோடு இணங்கி நல்வழி நிற்பவரின் அபிப்பிராயத்தையே பின்பற்ற வேண்டும்.

* * *

எப்பொழுதும் சந்துஷ்டியோடிரு: பிறரால் வரும் சாந்தியை யாவது, பிறருடைய உதவியை யாவது தேடாதே: மனிதன் தன் பலத்தைக் கொண்டே நிமிர்ந்து நிற்க வேண்டும்.

* * *

தீய எண்ணங்களுக்கு ஒரு பொழுதும் இடங்கொடாதே: எப்பொழுதாவது சிறிதேனும் இடங்கொடுத்துவிட்டால் பின் தடுமாற்றமின்றி நன்மையை நாடுதல் கஷ்டமாய்விடும்.

மார்க்கஸ் ஒளரேலியன்.

ஸ்வர்க்கவாசி

# சி. சுப்பிரமணிய பாரதி

## ஞாபகம்

(காசி பட்டு பீதாம்பர வியாபாரம் ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி ஐயர் பாடியது)

வேணி வலி குன்றினள், விளங்கு பல பாடையின் விதங்கள் வலி குன்றின, விறல்
நாணி வலி குன்றின ளருந் தமி ழணங்கு கவி நாவலர் நலிந்தனர், துயர்
காண வரு மாதவரும் யோகியரும் நொந்தனர்கள், கம்பன் முதலான கலை தேர்
பாணினி வியாத னுயர் கும்ப முனி யொத்த நம் பாரதி மடிந்த பொழுதே! (௧)

கல்வியு மயர்ந்தன, கலைத் திற மயர்ந்தன, கலைத் திற முணர்ந்த பெரியோர்
சொல் லுறுதி வீழ்ந்தன, சுதந்திர சுதேச வழி சோர்வுகொடு சாய்ந்தன, சுடர்
வில் லுமிழு வீர மொழி மேதை கவிவாணர் சிர மேவு மணிவேத சரபர்,
மல்ல லெம் பாரதி மடிந் துல கிழந் தமரர் வா னுலகு சென்ற பொழுதே! (௨)

தேசாத குமாரரொடு பாண்டவர் இருந் தனைய சிறை நிலை யுறைந்து, தமிழின்
இசை ரச மெழுந் துலக மெவணு முயிர் தந் தடிமை யினி பொறிபு மென்ற சமயம்,
அசுர வழி கண் டமரர் அவனி வர வெண்ணி யவ னடையு மொரு சந்தி னனைதி,
புசுர கலை கண்டவ புராதன புரோகித ப்ரதான புலவோர்கள் புலியே! (௩)

ஆணவ மழிந் தடிமை யேறி யறமோடு கலை யாவு மறதிக்கு ளாக,
சாணளவு குப்பி டெரிதா யுறையு நந் தமிழர் தங்க ணிலை கண்டு தளர்வாய்,
பூணு மழகார் கவிகளா லுயி ரெழுப்பி யவர் புத்தி நிலை தந்த புலவோய்!
மாணுடைய பாரதி மகா கவிகளுக்கு ளுயர் யானவர் மதிக்கு முரவோய்! (௪)

உன் தமிழர் வாழி! உயர் உன் தமி ழுணர்ச்சி வர! உன் தமிழ ராட்சி யுலவ!
அன்புடைய மாகவிஞ, ஆரிய குலத்து மணி ஐய, நின் கீர்த்தி அமர!
இன்ப முறு யானிட ருமிவ் வுலகு மெவ் வுலகு மிரவி மதி யுள்ள தனையும்
பொன் பொறி யினித்த மொழி நந் தமி ழணங் காவில் புத்திருடன் பொலிகவே! (௫)

# லைலி மஜனூன்

## ஓர் சிறு கதை

[ப]

(வ. வே. ஸுப்ரஹ்மண்ய ஐயர் எழுதியது)

[உலகத்தில் சில கதைகள் நித்திய யௌவனமாயும் சர்வாந்தர்யாமியாயும் இருந்துகொண்டு கோடானுகோடி மனிதர்களுடைய மனதில் காதல், கதம், பயம், சோகம் முதலிய பேருணர்ச்சிகளை உண்டாக்கி வருகின்றன. இந்த லைலி மஜனூன் அத் தகைய கதைகளின் ஜாதியைச் சேர்ந்தது. இது அராபியாவிலும் பாரஸீகத்திலும் பலபலப்பட அலங்கரித்துச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இவற்றுள் மிகவும் பேர்பெற்ற கற்பனை கலி ௪௨௮௧-ல் இறந்துபோனதாகக் கூறப்படும் நிஜாமி என்னும் மகா கவியால் பாடப்பட்டதாகும். இங்கு நாம் செய்யும் கற்பனை அவனது கற்பனையினின்று பல இடங்களில் மாறுபட்டிருக்கும். ஆனால் கதைகளுக்கு அவரவர்களுடைய சுவைக்கும் ஆற்றலுக்கும் தக்கபடி புதிய உருவங்கள் கொடுப்பது ஆசிரியருக்குத் தொன்றுதொட்டு வந்திருக்கும் உரிமையாகும். அவ் வுரிமையைக் கையாடியதைக் கண்டு அறிஞர் வெகுளமாட்டார்கள் என்பது திண்ணம். எம் கற்பனை சுவையுடன் செய்யப்பட்டிருக்கிறதா அல்லது இல்லையா என்ற பிரசினையைக் கதாப்பிரியர்களும் ரஸிகர்களும் தான் நிர்ணயிக்க உரியவர்கள்.]

(௧)

நஜத் பாலைவனத்தினிடையே, கடலில் காணப்படும் தீவுகள்போல, அங்கங்கே நீர்வளம் பெற்றுத் திகழும் ஓயஸிஸ் என்று சொல்லப்படும் ஜீவபூமிகளுள் ஒன்றில் இன்று ஒரு பெரிய கொண்டாட்டம். இபனே ஸலாமுடைய கூடாரம் தரையிலிருந்து துவஜ ஸ்தம்பம் வரையில் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. தரையில், நீல வானத்தையும் இளம் பசும் புல்லையும் பழித்ததாய், கைக்குப் பஞ்சு போலவும் பட்டுப் போலவும் மிருதுவாயிருக்கிற, துருக்கிஸ்தானத்துப் பெண்கள் நெய்த, உயர்ந்த இந்திர நீல ஜமக்காளம் விரித்திருக்கிறது. கூடாரத்தின் மூங்கில் தூண்களெல்லாம் பலவேறு வர்ணமுள்ள பட்டுத்துணிகளால் மூடப்பட்டு வைரத் தூண்கள் போலவும் கோமேதகத் தூண்கள் போலவும் மாணிக்கத் தூண்கள் போலவும் ஜ்வலிக்கின்றன. மேலே கூடாரத்தின் உட்புறம் பச்சைப் பசும் பட்டால் போர்த்தப்பட்டிருக்கிறது. அதனிடையே, சபா மண்டபத்தின்மீது, செம்பவள வல்லியையும்விடச் சிவந்த பட்டால் செய்த விதானம் விளங்குகிறது.

காலமேமுதல் வாத்தியங்கள் கோஷித்துக் கொண்டிருக்கின்றன. காயக ஸ்திரீகள் குயில் போன்ற குரலில் பாடிக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு புறம் ஆட்டக் கச்சேரி நடந்து கொண்டிருக்கிறது. ஜீவபூமியில் சேர்ந்துள்ள ஜனங்களெல்லாம் இந்தக் கூடாரத்தில் கூடியிருக்கிறார்கள். எல்லோரும் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். ஏனெனில், அராபியாவின் தாரகை என்று எல்லோராலும் புகழ்ந்து சொல்லப்பட்ட லைலிக்கு இன்று கலியாணம் நடைபெற இருக்கிறது.

இந்தக் கோலாகலத்தினிடையில், இந்த ஆனந்தக் கடலின் மத்தியில் ஒரு பிராணி துக்காதிக்கத்தால் மனம் பொருமிக் கொண்டிருக்கிறது

என்றால் யார் ஆச்சரியப்படமாட்டார்கள்? அந்தப் பிராணியும் கலியாணப் பெண்ணான லைலிதான் என்று சொல்லுவோமானால் யார் நம்புவார்கள்? ஆனால், அது நிஜமே. லைலி ஆழம் காணமுடியாத துக்கக் கடலில் மூழ்கிப் போயிருக்கிறாள்.

இபனே ஸலாம் அந்தப் பிரதேசங்களிலுள்ள யாவரினும் பணக்காரன். அவனிடத்திலிருந்த ஒட்டகைகளுக்கும் குதிரைகளுக்கும் நீகிரோவ அடிமைகளுக்கும் தாதியருக்கும் கணக்கே யில்லை. மணற் காடுகளிலுள்ள ஒவ்வொரு பாதையிலும் அவனுடைய காரியஸ்தர்களும் ஆட்களும் துருக்கி ஸ்தானத்துக்கும், பாரஸீகத்துக்கும், எகிப்துக்கும், ஸீரியாவுக்கும், வியாபாரார்த்தமாகப் போனவண்ணமாயும் அவ்வூர்களினின்று திரும்பியவண்ணமாயும் இருப்பார். அவனுடைய உண்டியல் பெர்ஷியிருந்து ஆஸ்திராகான் வரையிலும் உள்ள எந்த ஊரிலும் செலாவணியாகும். இப்பேர்ப்பட்ட தனவந்தனுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்று எத்தனையோ அராபியப் பெண்கள் தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். அவனுக்கு மனைவியானால் அத்தனை செல்வத்தையும் ஆளலாமன்றோ?

ஆனால் லைலி அவ்விதம் நினைக்கவில்லை. மனதில் அன்பில்லாமல் அந்தச் செல்வத்தை வைத்துக் கொண்டு என்ன செய்கிறது? அவள் தன் இருதயத்தைத்தன் பாலிய சிநேகிதனான காயிஸ் என்பவனுக்குத் தத்தம் செய்துவிட்டிருந்தாள். இனி இபனே ஸலாமுக்குக் கொடுக்க இருதயம் ஏது?

காயிஸ் லைலீயின் பாலிய சிநேகிதன் என்றோம். அவனுடைய தகப்பனான ஸைது ஓம்ரியும், லைலியினுடைய தகப்பனும் மிகுந்த நண்பர்கள். நஜத் மணற் பிரதேசத்திலுள்ள இரண்டு அராபிய குலங்களுக்கு இவர்கள் தலைவர். பாலைவனத்தில் வசிக்கவோ முடியாது. அம் மணற் சாகரத்தினிடையிலுள்ள ஜீவ பூமிகளுக்குச் சென்றால்தான் மனிதனுக்குப் பேரீச்சம்பழமும் மிருகங்களுக்குப் புல்லும் அகப்படும். ஒரு ஜீவபூமியில் இரண்டு மூன்று மாதங்களுக்குமேல் ஒரு கூட்டம் தங்க முடியாது. சில பசு நிலங்களில் நாலைந்துநாள் சேர்ந்தாப்போல் தங்குவதே கடினமாகிவிடும். மனிதனுக்கும் மிருகங்களுக்கும் தீனி தீர்ந்து போய்விடும். பசு நிலத்தில் இனிச் சாப்பாட்டுக்கு ஒன்றும் அகப்படாது என்று கண்டதும் அராபியர் தங்கள் ஒட்டகைகள், குதிரைகள் முதலியவற்றை ஓட்டிக்கொண்டு இன்னொரு பசுநிலத்துக்குச் செல்லுவார்கள். வருஷம் முன்னூற்றறுபத்தைந்து நாட்களுக்கும் இவர்களுக்கு இதுவேதான் காரியம். இடையிடையே வியாபாரத்துக்காகக் கூட்டமாய்ப் போகும் பிரயாணிகளைத் தாக்கி இவர்கள் அவர்களிடமுள்ள விலையுயர்ந்த பொருள்களைப் பறித்துக்கொள்ளுவார்கள். தாங்களும் மற்றோரால் தாக்கப்படுவார்கள். இப்பேர்ப்பட்ட அராபியர் கூட்டத்தில்தான் லைலியும் காயிஸூம் பிறந்து வளர்ந்தார்கள்.

காதல் வளரும் வழியை யாரால் கண்டுபிடித்துச் சொல்லலாகும்? கண் எல்லோரையும் பார்க்கிறது; காது பேசுவோர் வார்த்தைகளை எல்லாம் கேட்கிறது; வாய், காரியம் இருக்கிறதோ இல்லையோ, பலரிடத்திலும் பேசுகிறது. ஆனால் கண்ணானது ஒருவரைப் பார்க்கும்போது மற்ற யாரைப் பார்க்கும்போதும் அடையாத இன்பத்தை அடைகிறது. அவர் பேசுவது சாமானிய விஷயமானாலும், அவருடைய குரலில் விசேஷமான இனிமை யிராவிட்டாலும், அவருடைய வார்த்தையைக் காது தேவாமிர்தத்தைப் பருகுவதுபோலப் பருகுகிறது. அவரிடத்தில் பேசும்போது வாய் குளறுகிறது; நாக்கு கொஞ்சுகிறது; இதெல்லாம் அன்பின் அடையாளம். ஆனால் இவ் அன்பு எப்படிப் பிறக்கிறது என்றாலோ, அது தேவ ரகசியம்—மனிதரால் சொல்ல முடியாது. அவ்விரண்டு அராபியக் கூட்டங்களிலுமுள்ள குழந்தைகள் எல்லாம் ஒன்றோடொன்று விளையாடும்போதும், சாப்பிடும்போதும், தூங்கும்போதும்,ஒரு ஜீவபூமியை விட்டு இன்னொரு ஜீவபூமிக்குப் போகும் போதும் எப்பொழுதும் கூடவேஇருக்கும்.ஆனால் காயிஸ்இருக்கும்போதுதான் லைலி பூரண குதூகலத்தோடிருப்பாள். பிரயாணப்படும் போது அவன்தான் அவள் ஏறும் ஒட்டகக்குட்டியைப் பிடித்துக்கொள்ளவேணும். பிரயாணம்போகும்போது அவளுடைய ஒட்டகம் அவனுடைய ஒட்டகத்தோடு ஜோடியாய்ப் போகவேணும். கூடிக் கூடிப் பேச என்னதான் சமாசாரம் இருக்குமோ? இருவரும் எப்போது பார்த்தாலும் பேசிக்கொண்டே யிருப்பார்கள். தங்கு மிடங்களில் ஒரு ரோஜாச்செடியைக் காயிஸ் கண்டுவிட்டானானால் அன்றைக்கு அது மொட்டைதான். ஒருவரை எடுக்கவிடமாட்டான். எல்லா மலர்களையும் தானே பறித்து மாலை கட்டி லைலியின் கழுத்தில் போட்டுவிடுவான். அந்த மாலை கழுத்தில் விழுந்ததும், கண்ணன் மாலையைப் பெற்ற சத்தியபாமைக்குக் கூட அத்தனை செருக்கு இராது—லைலிக்கு அத்தனை கர்வம் உண்டாகிவிடும். காயிஸ் என்மீது இவ்வளவு அன்போடிருக்கையில எனக்கு யார் நிகர் என்று நினைப்பவள் போலப் பார்ப்பாள்.

லைலிக்குக் காயிஸின்பேரில் உள்ள அன்பு எவ்வளவோ அதற்குப் பன்மடங்கு கொண்டதாகும் காயிஸூக்கு லைலியின்பேரில் உள்ள காதல். லைலியாவது மற்றப் பையன்களோடு விளையாடாதிருக்கமாட்டாள். ஆனால் காயிஸூக்கு லைலி இருந்தால்தான் விளையாடமுடியும். அவள் இல்லாத விளையாட்டில் அவன் சேரவேமாட்டான். உலகம் முழுவதும் அவளுடைய இரண்டு விழிகளுக்குள் அடங்கிவிட்டன என்பது அவனுடைய நினைவு போலும்!

வயது வளர வளர இருவருக்கும் அன்பு வளர்ந்தே வந்தது. இருவரும் வயதிலும் உருவத்திலும் குலத்திலும் ஒருவருக்கொருவர் இணையாகவே இருந்ததினால், லைலியைக் காயிஸூக்குத்தான் விவாகம் செய்து தரவேண்டும் என்கிற விஷயத்தில் அவ்விரு குடும்பங்களும் ஒரே அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தன. அவர்களுடைய அனுசரர்களாகிய பத்து ஜனங்களும் அவ் அழகிய யுவதி யுவாக்களுடைய விவாகத்தைக் கண் குளிரப் பார்க்கவேணும் என்கிற ஆசையோடு கண்ணைத் தீட்டிக்கொண்டிருந்தார்கள்.

கடைசியாக ஒருநாள் இருவருடைய தாய் தந்தையரும் ஒன்று கூடி அடுத்த ஆறுவது மாதத்தில் ஒரு நல்ல முகூர்த்தத்தில் அவர்களுக்கு விவாகத்தைச் செய்துவைத்துவிடுகிறது என்று நிச்சயம் செய்துகொண்டார்கள். காயிஸூக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவில்லை. ஆனால், அன்பு நிறைந்திருப்பினும் லைலிக்கு ஏதாவது விலை உயர்ந்த பொருள்கள் சுல்கமாகத் தரவேண்டும் என்று அவனுக்கு விருப்ப முண்டாயிற்று. ஆகையால், அவளிடம் தன் சகோதரியை அனுப்பி அவளுக்குச் சீராக என்ன வேண்டும் என்று கேட்டுவரச் சொன்னான்.

"காயிஸின் அன்பு ஒன்றே எனக்குப்போதாதா, பாதிமா? எனக்குச் சுல்கமும் வேண்டுமோ? ஆனால் காயிஸ்ஸே விரும்பித் தருகிறேன் என்னும் போது மறுப்பதும் அழகில்லை. எனக்கு நெடு நாளாய்ப் பாரஸீகத்துக் கிளிப்பிள்ளையும், இந்தியா தேசத்து மான்குட்டியும் வளர்க்கவேண்டும்என்று ஆசையாக இருக்கிறது. முடிந்தால் இவை இரண்டையும் எனக்கு வாங்கித் தரச் சொல்லு,' என்றாள் லைலி.

அதற்குப் பாதிமா, "அப்படியே சொல்லுகிறேன், லைலி; கலியாணம் இன்னும் ஆறு மாதமிருக்கிறது. அதற்குள்ளும் அகப்படாமற் போய்விடுகிறதா!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

காயிஸுக்கு லைலியின் விருப்பம் தெரிந்ததும் அதைப் பூர்த்தி செய்விப்பதற்காகத் தன் தந்தையனிடம் செலவு பெற்றுக்கொண்டு ஒரு வியாபாரக் கூட்டத்தோடு சேர்ந்து பாரஸீகம் நோக்கிப் புறப்பட்டுவிட்டான். லைலி கேட்ட பொருள்கள் அராபியா பாலை வனத்தில் கிடையா வானதாலும் வியாபாரிகள் இவற்றைக் கொண்டுவருகிற வழக்கமில்லை யானதாலும் காயிஸ் இவற்றுக்காக நேரே போகவேண்டிய தாயிற்று.

உ

காயிஸ் போய்க் கொஞ்ச நாட்களுக் கெல்லாம் அவனுடைய தகப்பனும் தாயும் திடீரென இறந்துபோய்விட்டார்கள். தலைவன் இறந்து போய்விட்டதால் அவனுக்குக் கீழ்ப்படிந்துள்ள பத்தாக் கூட்டமும் அராபியர் கூட்டமும் கலைந்து போயின. லைலியின் தகப்பனுக்கும் கஷ்டங்கள் வந்துவிட்டன. அவன் சுபாவத்தில் செலவுகாரன். தானம் செய்வதிலும், வேட்டைகளிலும், உற்சவங்கள் கொண்டாடுவதிலும் மக்கா ஷரீபுக்குத் தன் பரிவாரங்களோடு ஹஜ் செல்லுவதிலும் பொருள்களை ஏராளமாய்ச் செலவு செய்வான். செலவு செய்பவர்களுக்குக் கடன் வாங்குவது இயற்கை யன்றோ? ஆகையால் நாளுக்கு நாள் அதிகப்படும் செலவுகளுக்காகத் தலை கால் தெரியாமல் கடன் வாங்கிவந்தான். ஆனால் வாங்கும் கடன்களுக்கு ஏதாவது ஒரு நாள் பதில் சொல்லித் தீரவேண்டியதன்றோ? பல ஆண்டுகளாக ஏறிவந்த கடன்களுக்காகக் கடன்காரர்கள் அவனை நெருக்க ஆரம்பித்தார்கள். கடன்கள் சொத்துக்கு மேல் ஏறிவிட்டன. என்ன செய்வான் பாவம்? லைலியின் கதி என்னவாகும் என்று மனம் பொருமிக்கொண்டு, வேறு வழி ஒன்றும் தோன்றாததால், இபனே ஸலாமிடம் மொத்தமாய்த் தொகை வாங்கிச் சில்லரைக் கடன்களைத் தீர்த்துவிட்டு இனிச் செட்டாக இருந்து இபனே ஸலாமின் கடனையும் தீர்த்து விடலாம் என்று நிர்ணயித்து அவன் இருக்கும் இடம் சென்று அவனைக் கடன் கேட்டான்.

இபனே ஸலாம், “கொடுக்கிறேன், ஆனால் ஈடு என்ன தருவாய்?” என்று கேட்டான்.

“ஈடுதானே? என் குதிரை, ஒட்டகை, கூடாரம், முதலிய சகலத்தையும் ஈடாக வைக்கிறேன். ஹைஹீல் சுல்தானுக்கும் எறியாது சுல்தானுக்கும் சண்டை நடக்கும் போல் இருக்கிறது: என் ஆட்களோடு எறியாது சுல்தான் சேனையில் சேர்ந்து போர் செய்தேனானால் வெற்றி நிச்சயம். ஹைஹீல் கொள்ளையில் இப்பொழுது உன்னைக் கேட்கும் கடனைவிடப் பத்து மடங்கு கொண்ட கடனைக்கூட ஊதித் தள்ளிவிடுவேன்,” என்றான் லைலியின் தகப்பன்.

“ஹைஹீல் கொள்ளையை நம்பிக் கடன் கொடுக்க முடியுமா, உஸேன்? ஆனால், ஒன்று செய்வாயானால் நீ கேட்கும் தொகையை உனக்கு இனாமாகக் கொடுத்துவிடுவேன்,” என்று இபனே ஸலாம் சொன்னான்.

“எனக்கு இனாமாக ஒன்றும் வேண்டியதில்லை: ஆனால் நீ கடன் கொடுப்பதாக இருந்து, நீ விரும்பும் காரியமும் என்னால் ஆகக் கூடியதாயிருந்தால் சந்தோஷத்தோடு செய்வேன்,” என்று உஸேன் கர்வத்தோடு சொன்னான்.

இபனே ஸலாம்: “உன்னால் முடியாததை நான் கேட்பேனா? உன்னுடைய மகளான லைலாவின் மீது நான் மோகங் கொண்டிருக்கிறேன்: அவளை எனக்கு விவாகம் செய்துகொடுப்பாயானால் உனக்கு வேண்டியிருக்கிற கடனையும் கொடுப்பதோடு என்னுடைய அளவற்ற பொருளையும் அவளுக்கே ஸ்திரீதனமாக வைப்பேன்.”

உஸேன்: “எதையோ கேட்டுவிட்டாயே, ஸலாம்! லைலியைக் காயிஸுக்குக் கொடுத்து விடுகிறது என்று இறந்துபோன அவனுடைய தகப்பனும், நானும் நிச்சயம் செய்துகொண்டிருக்கிறோமே: அதை எப்படி அழிப்பேன்? லைலியின் தங்கை லைலியைவிட ரூபவதியாக இருக்கிறாள்: அவளைக் கேள், உனக்குச் சந்தோஷத்தோடு கொடுக்கிறேன். அவளுக்கு நீ சொல்லும் ஸ்திரீதனம் அத்தனையும் கொடுக்க வேண்டாம். எனக்குத் தற்பொழுது வேண்டிய தொகையை மாத்திரம் கடனாகக் கொடுத்து உனக்கு இஷ்டமான பொருளை ஸ்திரீதனமாய்த் தரலாம்.”

இபனே ஸலாம்: “இருதயம் என்ன, பொன் தங்கமா, எந்தப் பெட்டியில் வேணுமானாலும் வைத்து மூடலாம் என்பதற்கு? லைலியின் மீது விழுந்திருக்கிற காதல் வேறொருத்தி மீது எப்படி விழும்? எனக்கும் நேரமாகிறது. உனக்கு இஷ்டமானால் லைலியை எனக்குக் கொடுத்து உனக்கிஷ்டமான பொருளைப் பெற்றுக் கொள். இல்லையாகில் என்னிடம் கடனுக்காக வர வேண்டாம் என்று வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.”

இந்தக் கண்டிப்பான பதிலைப் பெற்றுக்கொண்டு உஸேன் வீட்டுக்குச் சென்றான். யாருக்கும் லைலியைக் காயிஸைத் தவிர வேறொருவருக்கும் கொடுக்க இஷ்டமில்லை. என்னவந்தாலும் வரட்டும், சொன்ன வார்த்தையும் தவறுவதில்லை, லைலி காதலியாதவனுக்கு அவளைக் கொடுப்பதுமில்லை என்று நிச்சயித்துக் கொண்டு ஒரு மாத மிருந்தார்கள். ஆனால் நாளுக்கு நாள் கடன்காரர்களுடைய நிர்ப்பந்தம் அதிகரித்தே வந்தது. கெடுச் சொல்லிச் சொல்லி உஸேனுக்கு நாக்குத் தேய்ந்தது. முகமும் சின்னதாய்ப் போய்விட்டது.

உபத்திரவங்கள் ஒரு அளவுக்கு மிஞ்சிப் போய்விட்டால் மனிதன் எப்பேர்ப்பட்ட நிர்ணயமாயிருந்தாலும் அதை மறந்து விடுகிறான். அப்படி யிருக்க, பெண் குழந்தையின் காதலைப் பற்றியா பிடிவாதமாய் நிற்கப் போகிறான்? உலகத்தில் எல்லாப் பொருள்களிலும் உயர்ந்தது சுத்தமான, அனன்னியமான அன்பு. அதிலும் ஸ்திரீகளுக்குக் காதலேதான் ஜீவநாடி. இருந்தும், மனிதன் பெண் மக்களின் காதலைஎத்தனை அலக்ஷியத்தோடு மிதித்து விடுகிறான்! இந்த விஷயத்தில் உஸேனை மிகக் கெட்டவன் என்று சொல்லக் கூடாது. எத்தனை தகப்பன்மார் அவனைப் போல் ஸலாமினுடைய விருப்பத்துக்குச் சம்மதியாமல் திரும்பியிருப்பர்? எத்தனை பேர் வேறு ஒரு சுலபமான வழி இருக்கையில் அவனைப் போல் கடன்காரர்களிடம் முகத்திடி பட்டுக்கொண்டு ஒரு வருஷ காலம் இருந்திருப்பார்? ஆகையால், அவனைக் கெட்டவன் என்று சொல்லுவதில் என்ன பயன்? இப்பொழுது லைலியை இபனே ஸலாமுக்குத் தான் கொடுக்கவேண்டியது என்பதற்கு அவன் பல காரணங்களும் சொன்னான். “மூன்று வருஷ காலமாய்க் காயிஸ் இருக்குமிடமே தெரியவில்லை. (அப்பொழுது காயிஸ் போய் மூன்று வருஷமாகிவிட்டன). அனேகமாய் அவன் இறந்தே போயிருப்பான். அப்படியே அவன் உயிரோடிருந்தாலும் ஆறு மாதத்தில் நிக்கா நடத்துவதாக இருந்து இப்பொழுது மூன்று வருஷம் காத்தாகிவிட்டது. அவனுக்காக எத்தனை நாள் லைலியைக் கன்னிகை யாக வைத்துக் கொண்டிருக்கிறது? ஸலாமுக்கும் தாய் தந்தை உற்றார் உறவினர் ஒருவருமில்லை. இப்பொழுதே தன் ஆஸ்தியெல்லாம் நமது லைலாவுக்குச் சுல்கமாகத் தந்துவிடுகிறேன் என்கிறான். வயதிலும் இளைஞன்: ஆயுட் காலத்தில் இன்னும் எத்தனையோ பொருள் தேடுவான். எல்லாவற்றினும் மேலாக, நமது லைலாமீது பிராணப் பிரேமை வைத்திருக்கிறான். இல்லாவிட்டால் ஆஸ்தி அத்தனையும் இப்பொழுதே கன்னியா சுல்கமாகத் தரச் சம்மதிப்பானா?”

லைலியின் ஆற்றாமையைத் துடைக்க இத்தனை காரணங்கள் போதாவா என்று உஸேனும் அவனுடைய மனைவியும் உறவினரும் நினைத்தார்கள். ஆனால் லைலியோ? அவளுக்காகப் பேசுவோர் எவருமில்லை. காயிஸுக்காகப் பரிந்து பேசுவோர் ஒருவருமில்லை. அவளுடைய அளவிடமுடியாத காதலை வெளியிட்டுச் சொல்லவோ அவளுக்குத் தைரிய

யில்லை. தகப்பன் பேச்சைக் கடைசி வரையில் பிடிவாதமாய் நின்று தட்டவோ அவளுக்குத் இடமில்லை. ஆனால், ஸலாமை விவாகம் செய்து கொள்ளுகிறேன் என்று அவள் வாயால் சொன்னவளே அல்லள். பெண்கள் சுபாவத்திற் கேற்ப, நம்முடைய இஷ்டத்தை நிறைவேற்றக் கடவுள் ஏதாவது ஒரு வழி பிறப்பியாது போவாரா என்று ஒரு மூட நம்பிக்கை மாத்திரம் மனதில் வைத்துக்கொண்டு, ஆம் என்னமலும் மாட்டேனென்னமலும் பரம துக்காக் கிராந்தையாயிருந்தும் மௌனமாயிருந்துவிட்டாள். இந்தச் சம்பிரமத்தில்தான் நாம் முதலில் சொன்ன விவாக உற்சவம் நடை பெற்றது.

விவாகத்துக்குப் பூர்வாங்கமெல்லாம் ஆகிவிட்டது. காஜியும், "இப்பொழுது உனக்கு நிக்காஹ் செய்ய இருக்கிற லைலிக்குக் கன்னியா சுல்கமாக என்ன கொடுக்கிறாய்?" என்று சம்பிரதாய ரீதியாய் இபனே ஸலாமைப் பார்த்துக் கேட்க, அவன், "தற்பொழுது எனக்குச் சொந்தமாயுள்ள ஒட்டகைகள், குதிரைகள், ஆடு மாடுகள், வியாபாரச் சரக்குகள், தங்கம் வெள்ளி நாணயங்கள், ஆயுதங்கள், தாச தாசிகள், முதலிய சமஸ்தமான சொத்துக்களையும் என் லைலாவுக்குத் தானமாகக் கொடுத்துவிடுகிறேன். எங்கெங்கு தேசாந்தரங்களில் என்னுடைய வியாபாரச் சரக்குகளும் நிலுவைகளும் இப்பொழுது இருக்கின்றனவோ அவை யெல்லாமும் இந்த லைலாவுக்கே சொந்தமாகக் கொடுத்துவிட்டேன்," என்று சொன்னான்.

இப்படிச் சொல்லி முடித்தானோ இல்லையோ, "ஹைறயீல் படை!" "ஹைறயீல் படை!" என்ற சத்தம் தண்ணில மனைத்திலும் எல்லாப்பாகங்களினின்றும் ஏக காலத்தில் கிளம்பிற்று. நிசம் தான். ஒரு வருஷத்திற்கு முன் எறியாது சுல்தானோடு சேர்ந்து ஹைறயீல் சுல்தானைத் தாக்கப் போகிறேனென்று ஸலாமினிடம் உஸேன் சொன்ன வார்த்தை பரதேசித் தபால் மூலமாகச் சென்று ஹைறயீல் சுல்தானன நவ்பல் காதில் விழுந்துவிட்டது. அவன் சினத்தோடு பொங்கித் தன் ஆட்களை யெல்லாம் சேர்த்துக்கொண்டு உஸேனைத் தேடிவந்து, கடைசியாக இந்தக் கண்ணிலத்தில் அவனைக் கண்டு பிடித்து விவாக சமயத்திலேயே அவனுடைய கூடாரத்தைத் தாக்கினான்.

லைலிக்கு நிக்காச் சடங்கு இவ்வாறு தடைப்பட்டதில் சந்தோஷமாய் விட்டது என்று நாம் சொல்லவே வேண்டியதில்லை. ஸலாமுக்கும் அது சந்தோஷம் தந்தது என்றால் படிப்போர் ஆச்சரியப்படுவார்கள். உண்மை என்ன என்றால், காயில் மகாதீரனென்று எங்கு பார்த்தாலும் பேர்வாங்கியிருந்தான். ஸலாமும் தைரியத்திலும் பலத்திலும் யாருக்கும் தோற்றவனல்லனாலும், அவனுடைய ஏராளமான செல்வத்தினால்தான் அவனுக்குப் பேர் வந்திருந்ததே ஒழிய அவனுடைய தீரத்தைப்பற்றி ஒருவருமே பேசுவதில்லை. ரூபவதிகள் தீரர்களுடைய அன்பைத்தான் மதிப்பது வழக்கமாதலால், இந்தப் போரில் தீரத்தைக் காட்டினால் லைலிக்குத் தன்மீது உண்மையான காதல் பிறந்து விடுமென நினைத்து இந்தப் போர் தோன்றினமை பற்றி ஸலாம் சந்தோஷமே பட்டான். அவனுடைய ஆட்கள் ஜீவபூமியில் குழுமியிருந்தார்கள். அவனும் கம்பலை பிறந்ததும் மணப்பந்தரினின்று எழுந்து, "லைலா, இந்தச் சத்துருக்களை வென்று உன் தகப்பனையும் உன்னையும் காத்துப் பிறகு உன்னை மணந்து கொள்கிறேன், அதுவரையில் விடையளிப்பாய்," என்று லைலியிடம் சொல்லிவிட்டு, துக்கமும் நாணமும் பயமும் நிறைந்திருந்தும் முன்னிலும் அதிக அழகுடன் விளங்கிய அவளுடைய ஒளியைக் கள் குடிப்பவன் போலக் கண்ணால் பருகி விட்டு, ஆஜானுபாகுவான தன் குதிரை மீது ஏறிக் கத்தியும் கேடயமுமாய்ச் சத்துருக்களின் கூட்டத்



தில் புகுந்து, இருபக்கமும் வாளால் வீசி மதுரை வீரன் போல் விளங்கினான். சண்டையைப் பற்றி அதிகமாய் வர்ணிப்பதில் காரியமில்லை. இரண்டு சத்துருக்களும் ஒருவருக் கொருவர் தோலாமல் அடலும் வீரியமும் சாமர்த்தியமும் காட்டினார்கள். நவ்பலினுடைய மகன் உஸேனுடைய கூடாரத்தைச் சூறையாடினான். அவன் செல்லுமிடமெல்லாம் ஸலாமினுடைய ஆட்களின் தலைகளும் உஸேனுடைய ஆட்களின் தலைகளும் உருண்டன. காலொடிந்த ஆட்களும், கையொடிந்த ஆட்களும் கணக்கில்லாமல் விழுந்து கிடந்தார்கள். ஹைறயீல் ராஜ குமாரன் வீராதி வீரர்களையெல்லாம் பருந்துகளுக்கு இரையாகக் கொடுத்துக்கொண்டு போர்க்களத்தில் கறங்கு போல் சுழன்றான். ஆனால் இபனே ஸலாம் தன் ஆட்களில் மிகவும் தீரமானவர் ஒரு ஐம்பது பேரை அழைத்துக்கொண்டு ஹைறயீல் படையின் பின்புறத்துக்கு வளைந்து சென்று அங்கேயுள்ள காவற்படையைச் சாமர்த்தியமாய்த் தாக்கினான். திரும்பிப் போகும்வழியைச் சத்துரு அடைத்துவிட்டான் என்று தெரிந்ததும் ஹைறயீல் படையில் கலக்கம் உண்டாகிவிட்டது. ஆட்கள் நாலாபக்கமும் சிதறி ஓடத் தலைப்பட்டார்கள். ஹைறயீல் அரசிளங் குமரன் அனுசரர்களின்றிச் சத்துருக்களுக்கிடையே தனியே நின்றவனாகிவிட்டான். ஸலாம் உடனே குதிரைமீது வந்து அவனெதிரே நின்று, "தனியேநிற்கிறோமேஎன்று பயப்படவேண்டாம்; மற்றவர் ஒருவரும் உன்னைத் தாக்கமாட்டார்கள்; ஹடோ! எல்லோரும் பின்வாங்குங்கள்! என்னோடு நீ தனிப்போர் புரிந்து வென்றாயானால் உன்னை எதிர் ஜாமீனின்றி சகல மரியாதைகளுடனும் உன் ஊருக்கு அனுப்புகிறேன்," என்றான். அரசகுமாரன் சம்மதித்தான். இருவரும் சாமர்த்தியவான்கள். குதிரையும் குதிரையும் மோதின. கேடயங்கள் ஒலித்தன. வாட்கள் வெயிலில் சூரியன்போல் மின்னின. அரசிளங் குமரனுடைய வாள் மின்னல் வேகத்தோடு விழும். ஆனால் ஸலாமினுடைய கேடயம் அதனிலும் வேகமாய் வந்து அதைத் தேக்கிவிடும். பின்னவனது வாள் யமனுடைய சூலாயுதம் போலத் தாக்கும். ஆனால் ஹைறயீல் குமாரனுடைய சர்மம் அதையே எதிர் பார்த்துக் காத்திருந்ததுபோல் அதை வெகு லாகவமாகத் தடுத்துவிடும். இவ்வாறு பதினைந்து நிமிஷம் வரையில் இந்தக் கத்திப்போர் நடந்தது. கடைசியில் அரசிளங் குமரனுடைய கேடயம் வெட்டுண்டு ஒடிந்துபோயிற்று. அதே நிமிஷத்தில் இபனே ஸலாமின் வாள் அவனை இரு துண்டாய்ப் போட்டுவிட்டது.

ஸலாமினுடைய படையும் உஸேனுடைய படையும் ஜயபேரிகை முழக்கின. ஆனால், சிரமப்பட்டுப் பெற்ற வெற்றியைப்பற்றி ஒருவருக் கொருவர் தன்யவாதம் பேசிக்கொள்ள ஆரம்பிக்கக்கூட இல்லை, அதற்குள் ஒரு அம்பு வந்து ஸலாமின் மார்பில் தைக்க அவன் கீழே விழுந்துவிட்டான். அவ் அம்பின் வரலாறு என்ன என்றால், தனிப்போர் நடக்கையில் மற்றெல்லாரும் சும்மா இருந்ததைப் பார்த்து, ஓடிப் போன ஹைறயீல் வீரரிற் சிலர் அரசிளங் குமரனைத் தேடிக் கொண்டு போர்க் களத்தை நோக்கித் திரும்பி வந்தார்கள். எல்லோரும் வாட்போரைக் கவனித்திருந்ததால் அவர்களைக் கவனிப்பாருமில்லை, தேக்குவாருமில்லை. கடைசியில், அரச குமாரன் விழுந்துவிட்டான் என்று கண்டதும் அவர்களுள் ஒருவன் கையிலுள்ள வில்லைக் குழைய வாங்கி அக் கொடிய அம்பை இபனே ஸலாமுடைய மருமத்தில் எய்துவிட்டான்.

௩

மணப் பந்தல் பிணப் பந்தலாகிவிட்டது. பிரேதங்களை யெல்லாம் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டு, காயமுண்டவர்களுக்குச் சிகிச்சை செய்ய ஹகீம்மாரை ஏவிவிட்டு, உஸேனவன் ஸலாமை நல்ல படுக்கையில் படுக்கவைத்து இரண்டு கூட்டங்களுக்குள்ளும் மிகத் தேர்ந்த

ஹக்கீம்கள் இரண்டு பேரைத் தருவித்து அவனுடைய காயத்தைப் பார்க்கச் சொன்னான். வெகு நேரம் கை பார்த்துவிட்டு அவர்கள் தகுந்தபடி பார்த்து வந்தால் ஸலாம் அனேகமாய்ப் பிழைத்து விடலாம் என்று சொல்லி, அம்பைப் பிடுங்கி இரத்தத்தைக் கட்டும் மூலிகைகளைப் பிரயோகம் செய்தார்கள். ஸலாமுக்கு வேண்டிய சகல உபசாரங்களும் லைலி செய்தாள். அவனுக்குத்தானே விசுறுவாள். தன்கையாலேயே ஆகாரம் கரைத்துக் கொடுப்பாள். வைத்தியர் சொல்லும் ஒழுங்கின்படி உள்ளுக்கு ஔஷதமும் கொடுத்துக் காயத்தில் தைலமிட்டுக் கட்டும் கட்டுவாள். ஆனால் சௌக்கியமாவது போல வந்து கடைசியில் இபனே ஸலாமுக்கு இசிவு கண்டு ஜன்னியும் பிறந்துவிட்டது. இனிப் பிழைக்க மாட்டானென்று ஏற்பட்டுவிட்டது. பிரக்ஞையோடிருக்கும்போதே அவன்காஜியையும் லைலியையும்பக்கத்தில் வரச் சொல்லி, லைலியைப் பார்த்து "என் பேரில் அன்பு உனக்கு இல்லாதிருந்தும் எனக்காக நீ பட்டது போல இத்தனை பாடு வேறு யாரும் படமாட்டார்கள். லைலா, உன்னை மணந்துகொண்டு உன் மீது எனக்குள்ள காதலைக் காட்டி உன் இருதயத்தில் என் மீது அன்பு பிறக்கும்படி செய்ய வேண்டும் என்றிருந்தேன்; கொடுத்து வைக்காத பாவியாகப் போகிறேன்," என்றான். அதற்கு லைலி, "அண்ணா தாங்கள் இத்தனை சௌரியம் காட்டி என்னையும் என் தகப்பனையும் காத்த போது நான் இவ்வளவு கூடச் செய்யாவிட்டால் என்னைப் போல் நன்றி கெட்டவள் யார் இருப்பள்? இப்பொழுதும் தாங்கள் நம்பிக்கையை விடவேண்டாம். வைத்தியரை மறுபடியும் வருவித்துத் தங்களைப் பிழைப்பிக்க என்ன வழி இருந்தாலும் அது செய்துவிடுவோம்," என்றாள். ஸலாம் அது கேட்டுத் தலை யசைத்துக் கொண்டு, 'இனிப் பிழைப்பது ஏது? உலகில் என்னுடைய ஓட்டம் ஆகிவிட்டது," என்று சொல்லிவிட்டு, காஜியைப் பார்த்து, "காஜி சாகிப் இன்னும் ஐந்து நிமிஷங்கூட என் உயிர் நில்லாது காலமே என் பொருளெல்லாம் லைலாவுக்குத் தத்தஞ் செய்கிறேன் என்று சொன்னேனன்றோ? அதை இப்பொழுது பூரணப் பிரக்ஞையோடு காயம் செய்து விடுகிறேன். என்னுடைய சகல பொருள்களும் எனக்கு இப்பொழுது சகோதரியாய்ப் போய்விட்ட லைலாவுக்குச் சொந்தம் என்று குழறிக்குழறி மெல்லச் சொல்லிவிட்டு அப்படியே உயிரற்றுப் போய் விழுந்து விட்டான்.

லைலியின் இஷ்டப்படி உஸேனும் இபனே ஸலாமின் படைத்தலைவர்களும், கணக்கர்களும் அவனுக்கு வெகு விமரிசையாகச் சாமக்கிரியைகள் நடத்தி, அவனுக்கு மிக அலங்காரமாக ஓர் சமாதியும் கட்டிவைத்தார்கள். அவன் மரணத்துக்காக லைலி ஆராத்துயரமடைந்தாள். இத்துணை தீரமும் தயாளமும் உள்ளவன் எந்த இருதயத்தைத்தான் இளக்கமாட்டான்?

உஸேனுடைய கடன்களெல்லாம் தீர்ந்துவிட்டன. கொஞ்ச நாள் கழித்து உஸேனும் இறந்துபோய்விட்டான். இபனேஸலாமினுடைய ஆஸ்திக்கும், உஸேனுடைய ஆஸ்திக்கும் லைலியே பாத்தியஸ்தியாகிவிட்டாள். கடைசிக்காலத்தில் ஸலாமுக்கு லைலிசெய்த சுசுருஷைகளைப் பார்த்து அவனுடைய ஆட்களெல்லாம் லைலியிடம் மனப்பூருவமான பிரபு பக்தி செலுத்தத் தலைப்பட்டார்கள்.

௪

லைலியின் மனதைவிட்டுக் காயிஸின் நினைவு என்றைக்கும் அகன்றிருக்கவில்லை. அவள் தகப்பன் உயிரோடிருக்கையில், "இத்தனை சொத்துக்களை வைத்துக் கொண்டு கன்னிகையாக ஏன் காலம் கழிக்கவேணும்? நல்ல புருஷனைப்பார்த்து உனக்கு நிக்காச்செய்து வைக்கிறேன்," என்று எத்தனையோ தடவை சொல்லிப் பார்த்தான். ஆனால், அவள் காயிஸினிடம் சென்ற இருதயம்



வேறு யாரிடமும் செல்லாது என்றே சொல்லி வந்துவிட்டாள். ஊரில் காயிஸ் செத்து எத்தனையோ நாட்களாகி விட்டது என்பார்கள். துருக்கி ஸ்தானத்தில் நிக்கா செய்துகொண்டு சுகமாக இருக்கிறான் என்று சொல்லுவார்கள். எங்கேயோ அடிமையாக அகப்பட்டுக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறான் என்ற வதந்தியும் உலவும். ஆனால் லைலியின் மனதில் மாத்திரம் இதெல்லாம் பொய்யாகத்தானிருக்கும் என்ற குருட்டு நம்பிக்கை ஆழமாகப் பதிந்திருந்தது. இது மாதிரி சமாசாரங்கள் எத்தனை விவரமாகவும் உறுதியாகவும் சொல்லப்பட்டாலும் அவள் மனதில் அவை நுழைகிறதேயில்லை. ஆகையால் தன்னுடைய வியாபாரக் கூட்டங்களுக்கும் காரியஸ்தருக்கும் காயிஸ்ஸைப்பற்றி என்ன சமாசாரம் கேள்விப்பட்டாலும் புலம் அகப்படுகிற வழியில் தீர விசாரித்து, தெரியவரும் விஷயங்களுக்கு அப்போதைக்கப்போது ஆள் அனுப்பிவர வேண்டும் என்று ஆக்ஞாபித்திருந்தாள்.

தங்கள் எசமானியின் ரூபலாவண்ணியத்திலும் யௌவனத்திலும் நற்குணத்திலும் மாறாத அன்பிலும் ஈடுபட்டு அவ் ஆட்கள் காயிஸ்ஸைப் பற்றிய சமாசாரத்தை மிகவும் ஜாகரூகர்களாகத் தானே விசாரித்து வந்தார்கள். அங்கங்கே நிச்சயமான சமாசாரம் அகப்படுவது போல இருக்கும். ஆனால், நெருங்கிப்போய் பார்த்தால் ஒன்றுமே இராது. இப்படி அவளது பல கூட்டங்களும் எண்ணிறந்த தடவை ஏமாந்து போய்விட்டன. ஆனாலும் அவை முயற்சியையும் ஆசையையும் விடாது தேடியே வந்தன.

இப்படி இருக்கும்போது ஒருநாள் லைலி இருக்குமிடத்திற்கு ஒரு பக்கிரி வந்தான். வழக்கமாக நடத்த வேண்டிய மரியாதைகளெல்லாம் அவனுக்கு நடத்திவிட்டு, நல்ல விருந்துமிட்டு அவன் சாப்பிட்ட பிறகு இளைப்பாறிக் கொண்டிருக்கும் போது லைலி அவனிடம் வந்து, "பக்கிரி சாகிப்! தாங்கள் அனேகம் இடங்களெல்லாம் பார்த்திருப்பீர்களே, ஏதாவது விநோதங்கள் பார்த்திருந்தால் சொல்லவேணும்," என்று கேட்டாள்.

அதற்கு அவன் சொன்னான்: "என்ன விநோதமிருக்கிறது? மனிதன் எங்கு பார்த்தாலும் ஒரே மாதிரி இருக்கிறான். ஒருவரோடொருவர் சண்டை சச்சரவு, மோசம், நாசம், கம்பளி வேஷம், இது தான் நம் கண்ணை எங்கு பார்த்தாலும் தாக்குகிறது. இருந்தாலும் இப்பொழுது ஒரு விநோதம் என் நினைவுக்கு வருகிறது. ஹெஜாஜில் ஒரு ஜீவ பூமியில் ஒரு வேடிக்கை பார்த்தேன். அங்கே ஒரு இளமைந்தன் இருந்தான். மிகவும் ரூபலாவண்யவான். ஆனால் கிழிந்த வஸ்திரம் ஒன்று தரித்துக் கொண்டு அன்னம் ஆகாரத்தையே லக்ஷியம் செய்யாதவன்போல உலவிக்கொண்டிருந்தான். அதில் என்ன விசேஷமென்றால், வேய்ங்குழல் பிரம்மானந்தமாய் வாசிக்கிறான். அவன் குழலை எடுத்து ஊதத் துவக்கினதும், புலிகளும், சிங்கங்களும், மான்களும், பறவைகளும் அவனைச்சூழ்ந்துவந்து அசைவற்று உட்கார்ந்து விடுகின்றன. அவனுடைய கஜல்கள் எத்துணையோ கிழவனை என் மனதையும் பறித்துத் தின்றுவிட்டன. அவன் போகுமிடமெல்லாம் சிங்கமும் புலியும்கூட நாய்க்குட்டிகள் போலத் தொடர்ந்து செல்லுகின்றன. ஒரு கிளி ஒன்று அவன் தோளைவிட்டு இறங்குவதே இல்லை. இந்த மாதிரி சங்கதி வேறெங்காவது நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?

கிளி என்று பக்கிரி சொன்னதும் லைலியின் இருதயத்தில் ஒரு வாள் வெட்டு விழுந்தாற்போலாகிவிட்டது. ஆனால், சுதாரித்துக்கொண்டு "வேறெங்கும் நான் இம்மாதிரி வேடிக்கை கேள்விப்பட்டதில்லை. அவன் யார் என்று விசாரித்திருப்பீர்களே. அவன் பேர் என்ன, அவன் பூர்வோத்தரம் என்ன, எல்லாம் தெரிந்தால் சொல்ல வேண்டும்," என்று லைலி கேட்டாள்.

அதற்குப் பக்கிரி, "அவன் பேர் அந்தப் பிரதேசத்திலே ஒருவருக்கும் தெரியாதாம். ஆனால், அவனை எல்லோரும் மஜனூன்—பைத்தியம்—என்று கூப்பிடுகிறார்கள். அவனைப் பற்றிப் பலர் பலவிதமாய்ச் சொல்லுகிறார்கள். ஆனால், பெரும்பான்மையோர் அவனுக்கு ஆசைப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்கிறார்கள். யாரோ ஒருத்தி அவனை நிக்கா செய்துகொள்ளுகிறேன் என்று சொல்லிவந்து கடைசியில் வேறொரு பணக்காரன் மேல் ஆசைவைத்து, நமது மஜனூனை ஏதோ ஆகாததும் போகாததும் சொண்டுவர தூரதேசத்துக்கு அனுப்பிவிட்டாளாம். அவைகளை அவன் மிகச் சிரமப்பட்டுத் தேடிக்கொண்டுவந்து, அவள் இருக்குமிடத்துக்கு ஒரு நாள் பிரயாணத்துக்குள் வந்துகொண்டிருக்கும்போது அவள் அந்தப் பணக்காரனை நிக்கா செய்துகொண்டுவிட்டாள் என்று அங்கிருந்து வந்தவர்கள் சொன்னார்களாம்; அவ்வளவுதான், அங்கேயே அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாம்; அவனும் அப்படியே புறப்பட்டு ஊரெல்லாம் சுற்றி வருகிறானாம்," என்று சொல்லி முடித்தான்.

நள்ளிரவில் திருடர் புகுந்து வாயில் துணியை அடைத்து விட்டு சதைசதையாய் வெட்டினால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது லைலிக்கு. ஆனால் இவ் வார்த்தைகளைக் கேட்டதும் மனதில் குமிழிவிட்டு எழுந்திருக்கும் துக்கத்தையும், காயிஸ்ஸை அனேகமாய்க் கண்டுபிடித்துவிட்டோம் என்கிற நம்பிக்கையிற் பிறந்த பரபரப்பையும் பல்லைக் கடித்துக்கொண்டு அடக்கிக்கொண்டு, பக்கிரிக்கு வந்தனை வழிபாடுகள் செய்தனுப்பிவிட்டு, அவள் தன் காரியஸ்தர்களை வரவழைத்து, "இன்றிரவு மக்காவுக்கு ஹஜ் போவதற்காகச் சகலத்தையும் ஆயத்தம் செய்க!" என்று ஆக்ஞாபித்து விட்டு, தன் அறைக்குத் தனியே சென்று கட்டிவைத்திருந்த மடையைத் திறந்துவிட்டுக் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கினாள்.

"ஆ காயிஸ்! உன் நிலையை நினைக்க என் மனம் துடிக்கிறதே! அத்தனை நாடு தேசதேசாந்தரங்களெல்லாம் சுற்றிவந்தவன், இன்னும் ஒரு நாளைய பிரயாணம்தானே, நாங்கள் இருந்த இடத்திற்கு வந்து என்னதான் நடந்திருக்கிறது என்று பார்த்திருக்கக்கூடாதா? என் அன்பின் ஆழம் உனக்குத் தெரியாதுபோயிற்றே? பாவி, என்ன சொல்லுகிறேன்? உன் அன்பின் ஆழம் அன்றோ எனக்குத் தெரியாமற் போயிற்று? ஒரு கிளிக்காகவும், மான் குட்டிக்காகவும், பாவி, உன்னை வனவனாந்தரங்களெல்லாம் தாண்டி அனுப்பினேனே! உனக்கு என் பேரில் இருந்த அன்பு, எனக்கு உன் பேரில் இருந்திருந்தால், தகப்பனுக்கு எத்தனை அதிகமான கஷ்டம் வந்திருந்தாலும் இபனே ஸலாமோடு மணப்பந்தரில் உட்கார்ந்திருப்பேனா? அதைவிட உயிரையே விட்டிருக்கமாட்டேனா? இந்த மூன்று வருஷங்களில் என்ன என்ன கஷ்டப்பட்டாயோ! திரும்பி வரும்போது என்ன என்ன நினைத்துக்கொண்டு வந்தாயோ! என்ன மனக்கோட்டைகள் கட்டியிருந்தாயோ! அத்தனையையும் உடைத்து விட்டு, பாவி, லைலிக்குக் கண் நெற்றியிலே என்று சொல்லுவதுபோலவே அழவும் அழுகிறேனே! ஆனால், ஐயனே! நான் உன்னைத்தவிர வேறு யாருக்கும் என் இருதயத்தைக் கொடுத்தவள் அல்லள். அன்று நவ்பலின் படை எங்களைத் தாக்காதிருந்தால், ஸலாமுடன் நிக்காச்சடங்கு பூர்த்தியாகியிருந்தால் அன்றோடு என் வாழ்க்கை முடிந்துவிட்டிருக்கும். அன்று விஷம் வாங்கிக்கொண்டு செத்துவிடுவது என்றிருந்தேன். இந்த உடலை உன்னைத் தவிர வேறு ஒருவரும் தீண்டக்கூடாது என்று அத்தனை உறுதியாக இருந்தேனே. நீ இவ்விதம் ஆகிவிட்டாயே! உன்னுடைய அளவற்ற காதலை அனுபவிக்கக் கொடுத்து வையாத பாவியாய்ப் போய்விட்டேனே! என் செய்வேன்!" என்ற இவைபோன்ற எண்ணங்களெல்லாம் லைலியின் மனதைத் துருவின. அன்று இரவெல்லாம் அவள் தூங்கவில்லை.



பொழுது விடிந்ததும் கூடாரங்களைப் பெயர்த்துக்கொண்டு எல்லோரும் மேற்கு நோக்கிப் புறப்பட்டார்கள். போகும் வழியெல்லாம் மணற் காடு முடிவற்ற கடலைப் போல் கண்ணுக்கெட்டிய வரையில் பரந்திருந்தது. நடுப் பகலில் சூரியனுடைய வேகம் தாங்க முடியாது. வெள்ளை மணலுக்கும், சூரியப் பிரகாசத்துக்கும், வானத்திலுள்ள வெண் மேகங்களுக்கும், அந்தப் பாலைவனமானது உலகமே தழல் விட்டு எரிவது போன்ற உணர்ச்சியைத் தரும். தங்குவதற்குத் துளிநிழலிராது. கூடாரத்தை நிறுத்தித்தான் பகற்பொழுதைப் போக்குவார்கள். நாலு நாள் ஐந்து நாள் பிரயாணத்தில் ஒரு பசுநிலம் அகப்பட்டால் அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்தாம். அதில் கொஞ்சம் ஆசுவாசம் செய்துகொண்டு நாலைந்து நாள் தங்கி, பேரீச்சம் பழங்கள், நல்ல தண்ணீர், ஒட்டகை மோர் முதலிய எல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு மறுபடியும் புறப்படுவார்கள். புறப்பட்டாலோ மறுபடியும் அதே பாலைதான், அதே கொடுமைதான், அதே தவிப்புத்தான்.

இவ்வாறு அனேக காதங்கள் வந்துவிட்டார்கள். வரும் வழியில் அகப்படும் வியாபாரக் கூட்டங்களிடம் லைலி பேச்சுக் கொடுத்துக் காயிஸின் சங்கதியை விசாரிப்பாள். காயிஸ் என்றால் ஒருவருக்கும் தெரியாது. ஆகையால் மஜனூன் என்றே பெயர் சொல்லிக் கேட்பாள். மஜனூன் என்று தன் நாவால் சொல்லும்போதும், அவர்கள் வாயால் கேட்கும்போதும், அவர்கள் அவனுடைய பைத்தியத்தைப் பற்றிப் பரிகசிக்கும்போதும், அவளுக்கு நெஞ்சு வெடித்துப்போகும். இருப்பினும் விசாரிக்காமல் தீருமா? கிடைக்கும் சமாசாரங்கள் ஒரு நிலைப்பட்டவையாய் இரா. சிலர் பைத்தியம் முற்றிப்போய்விட்டது அவனுக்கு என்பார்கள். சிலர் அவன் சாகுந்தருவாயில் இருக்கிறான் என்பார்கள். சிலர் 'லைலா, லைலா' என்று கத்தின வண்ணமாக இருக்கிறான் என்பார்கள். கேட்கும் சமாசாரங்களெல்லாம் லைலியின் மனதை மேலும் மேலும் சித்திரவதை செய்வது போலிருந்தன.

கடைசியாகப் புலம் தெரியும் வழிகளால் சென்று சென்று லைலியின் கூட்டம் காயில் இருந்த ஜீவ பூமிக்கும் வந்துவிட்டது. நெஞ்சு படபட என்று அடித்துக் கொள்ளவும், மனம் ஆசையினாலும் பயத்தினாலும் பறந்துகொண்டு முன் செல்லவும், லைலி இரண்டு பணிப் பெண்கள் பின் தொடர அந் நிழலடர்ந்த நிலத்தினுள் பிரவேசித்தாள்.

நிசமாகத்தான் அப்படி இருந்ததோ, அல்லது அவள் மனதுக்கும் கண்ணுக்கும் தான் அப்படித் தோன்றினதோ, மற்றெங்கேயும் கண்டிராத சாந்தி அந்தப் பசு நிலத்தில் இருப்பதாக அவள் நினைத்தாள். அந் நிலம் வியாபாரக் கூட்டத்தார் வழக்கமாய்ப் போய்வரும் பாதைக்கு ஒரு இரண்டு நாள் பிரயாணம் அப்புறம் தள்ளியிருந்தது. அங்கே காணப்பட்ட பட்சிகளும் மிருகங்களும் மனிதக் கூட்டத்தைக் கண்டு பயப்படாமல் ஏதேச்சையாயிருந்தன. செடிகளும் மரங்களும் செழித்து வளர்ந்திருந்தன. மனித சஞ்சாரம் குறைவாகையால் பழங்களும் காய்களும் அபரிமிதமாயிருந்தன. புல்லும் முழங்கால் உயரம் வளர்ந்து மந்தமாக அடிக்கும் காற்றில் ஒயிலுடன் வளைந்துகொடுத்துக் கொண்டிருந்தன. ஜீவபூமி முழுவதும் நிச்சப்தம் தனிஅரசு செலுத்திக்கொண்டிருந்தது.

லைலியும் அவள் தோழிகளும் சத்தம் செய்யாமல் சென்றார்கள். போகும் வழியில் ஒரு மரத்தில் லைலி என்னும் எழுத்துக்கள் அன்றுதான் வெட்டப்பட்டன போலப் பச்சையாய்க் காணப்பட்டன. அதைக் கண்டதும் லைலியின் கண்களினின்று நீர் கர கர வென்று வந்துவிட்டது.

அப்புறம் நாலடிகூட எடுத்துவைக்கவில்லை. அங்கே ஒரு மரத்தடியில் நன்றாகப் பெருக்கி வைத்திருந்த தரையின்மீது ஒரு உருவம் படுத்திருந்ததைப் பார்த்தாள். திடீரென நின்றுவிட்டாள்.

அங்கே படுத்திருந்தவன் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் உடம்பில் எலும்பும் தோலும் தவிர வேறு ஒன்றுமில்லை. உடம்பெல்லாம் வெளுத்துப்போய்க்காய்ச்சல் வந்திருப்பது போலப் பள பளப்பாய்க் காணப்பட்டது. முகம் குழந்தையின் முகம்போலத் தெளிந்திருந்தது. உதட்டில் ஒரு புன்னகையின் சாயை தெரிந்தது போலிருந்தது.

நன்றாக உற்றுப் பார்த்ததும் லைலிக்கு அவன்தான் காயிஸ் என்று தெரிந்துபோய்விட்டது. அவனை அந்த நிலைமையில்தான் அனேகமாய்ப் பார்ப்போம் என்று நினைத்து மனதை அதற்கேற்றபடி அவள் பக்குவப் படுத்திக்கொண்டிருந்தபோதிலும், அந் நிலைமையில் அவனை நேரிற் கண்டபோது அவளுக்குத் தாங்கவில்லை. இடி யுண்ட சர்ப்பம்போல விழுந்துவிட்டாள். அவளுடைய தோழிகள் அவளோடு ஒரு வார்த்தையும் பேசத் துணியவில்லை. அந்த நிமிஷத்தில் அக் கன்னிகையின் இள நெஞ்சில் எழுந்த புயற் காற்றை யாரால் வர்ணித்துச் சொல்ல முடியும்? உலகமெல்லாம் சுவர்க்கமாய்த் தோன்றும் குழந்தைப் பருவத்தில் நாட்களையெல்லாம் தேனீக்களைப்போலச் சுவைக்கும் இன்பத்தின் அளவினாலேயே தாங்கள் இருவரும் அளந்துவந்ததை எண்ணிப் பொருமினாள். அழகிலும் சௌரியத்திலும் காயிஸுக்கு ஒருவரும் நிகரில்லை என்று அக் காலத்தில் அடிக்கடி தன் காதில் வார்த்தைகள் விழும் போதெல்லாம் தனக்கு உண்டான ஆனந்தத்தை நினைத்து, இப்பொழுது அவன் இருக்கிற நிலைமையோடு சேர்த்துப்பார்த்து மனமுடைந்தாள். தங்க ளிருவருக்கும் விவாகம்செய்து வைக்கும் நாளைத் தன் தகப்பனும் காயிஸின் தகப்பனும் சுற்றத்தார் கூட்டத்தில் நிச்சயித்துக் குறித்த அன்றைக்குத் தன் மனதில் எழுந்த நிரதிசய ஆனந்தத்தை நினைந்து வெதும்பினாள். காயிஸ் தனக்கு என்ன வேணும் என்று கேட்டனுப்பின தினத்தன்று தன் மனதில் எழுந்த கர்வத்தை நினைத்து இப்பொழுது சாம்பினாள். "ஐயோ! எதற்காகக் கிளியும் மானும் கேட்டேன்! இப்படி முடியு மென்று தெரிந்திருந்தால் கேட்டிருக்க மாட்டேனே! பாவியேன் நானே உன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டேனே!" என்று கதறிக் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கினாள். பிறகு அப்படியே மூர்ச்சித்துப் போய்விட்டாள்.

தோழிகள் துக்கத்தால் விம்மிக்கொண்டு அவளுக்குச் சைத்தியோபசாரம் செய்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம், புரண்டு புரண்டு கொடுத்துக்கொண்டு, இடையிடையே தடைப்பட்ட தூக்கம் தூங்கிக்கொண்டிருந்த காயிஸின் பக்கத்தில் ஒரு கிளி வந்து உட்கார்ந்தது. அவன் வாயை முத்த மிடுவது போல முத்தமிட்டு 'லைலா' 'லைலா,' என்று மிருதுவான குரலில் கூவிற்று.

"லைலாவா! என் ஆசைக் கண்ணாட்டிக்கு என் பேரில் இரக்கம் வந்துவிட்டதா? எங்கே வந்திருக்கிறாள்?" என்று சொல்லிக்கொண்டு எழுந்திருந்தான். ஆனால் லைலி எதிரிலில்லை. வேறு ஒரு புறத்தில் மூர்ச்சை போயிருந்தாள். "வழக்கம் போல இன்றைக்கும் என்னை ஏமாற்றிவிட்டாயே, லைலா!" (காயிஸ் தான் கொண்டுவந்த பாரஸீகக் கிளிக்கு லைலி என்று பேர் வைத்து, அதைத் தன் லைலியை அழைப்பது போலவே செல்லமாய் லைலா என்று அழைத்துக்கொண்டிருந்தான்.) "நாளைக்கு நீ என்னை ஏமாற்ற முடியாது, இன்றைக்கே அல்லா ஹூத் தஆலா என்னை அழைத்துக்கொள்ளப் போகிறான். ஐயோ, கடைசியாக என் லைலாவை ஒரு முறைகூடப் பார்க்காமலே போகிறேனே!" என்று கிளியைப் பார்த்துச் சொன்னான். இதைக்



கேட்டதும், லைலியின் தோழிகள் தாங்கமாட்டாமல் முன்னிலும் அதிகமாகக் கண்ணீர் பெருக்கிக்கொண்டு லைலியை மூர்ச்சையினின்று எழுப்ப முன்னிலும் அதிகமாகப் பரபரந்துகொண்டு முயன்றார்கள்.

காயிஸ் தனக்குள்ளே, ஆனால் வாய்விட்டு, சொல்லுவான்: "லைலாவை யாவது நான் பார்க்கிறதாவது! இப்பொழுதெல்லாம் இபனே ஸலாமோடு சுகமாய்க் காலம் கழித்துக்கொண்டிருப்பாள். என்னுடைய நினைவும் அவள் மனதிலிருக்குமோ? ஆஹா! இந்தப் பைத்தியம் பிடித்த மனது என்ன நினைத்துவிட்டது? லைலாவும் என்னை நினைக்காமல் இருப்பாளா? இருக்கமாட்டாள்! இருக்கமாட்டாள்! அவள்தான் என்ன செய்வாள்? நான் திரும்புகிற அன்றைக்குத்தானே அவளுக்கும் அவனுக்கும் நிக்கா என்று சொன்னார்கள். மூன்று வருஷம் எனக்காகக் காத்திருந்தாளே? அவள் பேரில் குற்றமே யில்லை. எல்லாம் விதி, விதி, கிஸ்மத்!" என்று சொல்லிவிட்டுத் தலையில் கையால் அடித்துக் கொண்டான்.

அதற்குள்ளும் லைலி மூர்ச்சை தெளிந்து எழுந்து அவனுக்கெதிரே வந்து, அவன் பேசிய கடைசி வார்த்தைகளுக்குப் பதில் சொன்னாள். "காயிஸ்! காயிஸ்! உனக்காக நான் மூன்று வருஷந்தானா காத்திருந்தேன்? இன்னும் காத்திருக்கிறேன், காயிஸ்! உன்னைத் தேடிக்கொண்டு இருநூறு காதம் வந்திருக்கிறேன்—என்னைச் சற்று முக மெடுத்துப் பாரேன்!" என்று கதறினாள்.

காயிஸ் அவளைப் பார்த்தான். ஆனால், புத்தி பேதப்பட்டுப் போயிருந்ததாலும் சுரம் மேலிட்டுப் போயிருந்ததாலும் அவன் அவளை இன்னாரென்று தெரிந்துகொள்ளவில்லை. ஆகையால் அவளிடம், "நீ யாரம்மா? நல்ல வேளையாய் அல்லா உன்னை இந்தச் சமயத்துக்குக் கொணர்ந்துவிட்டான். என் உயிர் போய்க்கொண்டிருக்கிறது; சற்று நேரத்துக்கெல்லாம் போய்விடும். உயிர் போனதும் என்னை இங்கே புதைத்துவிட்டு, உனக்குத் தெரிந்தவர் யாராவது கிழக்கேபோனால் காயிஸ் இங்கே இறந்து போய்விட்டான் என்று லைலாவிடம் சொல்லியனுப்ப வேணுமம்மா,' என்றான்.

லைலிக்குத் தாங்கவில்லை. "காயிஸ்! காயிஸ்! என்னை உனக்குத் தெரியவில்லையா? இங்கே பார். நான் உன் லைலா இல்லையா?" என்று சொல்லி மனம் சுக்கு நூறானாள்.

அதற்குக் காயிஸ் அவளைப் பாதாதிகேசம்வரையில் ஏறிட்டுப் பார்த்து, தலையை மெதுவாக அசைத்துக்கொண்டு, "லைலாவா, நீயா லைலா? லைலாவை நீ பார்த்ததில்லைப் போலிருக்கிறது. மூன்றாம் பிறைக்காவது, சரற்காலத்து நிலவுக்காவது, புனர்வசு நக்ஷத்திரத்துக்காவது அவளுடைய அழகு வருமா? இந்தியா தேசத்துக் குயிலும், கிளியும், புல்புலும் பேச்சுக்கு அவளிடம் பிச்சை வாங்கவேண்டும். அவளுடைய கண்ணாகிய சந்திரிகையிலேயே ரமித்துவந்த எனக்கு அவளைப் பார்க்கும்போதெல்லாம் "கண்ணினால் காதல் என்னும் பொருளையே காண்கின்றோம்" என்றே தோன்றும். ஆகாரத்தினால், செல்வத்தினால் எனக்குப் பலம் வரவில்லை. அவளுடைய அன்புதான் எனக்கு அத்தனை வன்மை தந்தது. ஆ! அவள் இப்பொழுது எனக்கு இல்லை! எனக்கு இல்லை! ஒரு கொடியில் இரண்டு மலர்கள் பூத்துப் பார்த்தோர் மனதைக் களிக்கச் செய்தன. ஒன்று வாடி வதங்கிக் கொண்டிருக்கிறது. மற்றதாவது வாடாமல் மலர்ந்திருக்கும்படி அல்லா அருள் புரியட்டும். அம்மா! நான் முன்னே சொன்னேனே அவ்விதம் லைலாவுக்குச் சொல்லி யனுப்பவேண்டாம். நான் இறந்துபோனேன் என்று கேட்டால் அவள் உயிர் தரியாள். ஆகையால், என் உயிர் போனதும் என் உடலைப் புதைத்துவிட்டு உன் வழியே செல்லுவாய்," என்று குழறிக் குழறிக்கொண்டு பெருமூச்சுகளுக் கிடையே சொல்லி அயர்வினால் நிறுத்திவிட்டான்.

லைலிக்குச் சகிக்கவே யில்லை. "யாரு மில்லாத இந்த வனாந்தரத்தில் தனியே யிருந்து தவித்துக் கொண்டு இப்படி ஆகிவிட்டாயே, காயிஸ்! இந்த ஆறு வருஷமாக உன்னைத் தேடாத இடமில்லையே. எங்கெங்கே தேடினேன்! யாராரை அனுப்பினேன்! எத்தனை பொருள் செலவிட்டேன்! உன்னை நினைந்து எத்தனை கண்ணீர் விட்டேன்! எத்தனை இரவுகள் தூக்கமே இன்றிக் கழித்தேன்! எனக்கு நல்ல பொழுதேது, நல்ல இரவேது? இப்பொழுதுதான் ஒரு மாத மிருக்கும், ஒரு பக்கிரி—ஸல்லல்லாஹு வஸல்லல்லம்—அவன் நன்றா யிருக்க வேணும்—நீ இந்தப் பக்கத்தில் இருக்கிறாய் என்று சொன்னான். அன்றைக்கே இவ்விடம் நோக்கிப் புறப்பட்டு விட்டேன்," என்று சொல்லிக்கொண்டே வந்தாள். அந்த நிமிஷத்தில் காயிஸ் அவளை வெறிக்க வெறிக்கப் பார்த்தான். லைலி பயந்து போய், "ஜீது, ஓட்டமாய் ஓடிப்போய் நமது ஹகீமை அழைத்து வா," என்று ஒரு தோழியை அனுப்பிவிட்டு, காயிஸின் கன்னத்தில் கை வைத்துப் பார்த்தாள். மழுவாய்க் கொதித்தது. ஆனால், அவளுடைய கை பட்டதும் காயிஸுக்குச் சுயப் பிரக்ஞை சற்று வந்தது.

"லைலா! லைலா! நான் நினைத்தேன், என்னை நீ கைவிட மாட்டாய். எங்கே, இன்னும் அருகில் வா. ஆ! என் லைலா தான்! நீ எப்படி வந்தாய் இங்கே? என்னை ஏன் இத்தனை நாள் விட்டுவிட்டுப் போயிருந்தாய்? என் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்," என்று சொன்னான்.

ஆனால், திரை மூடுவதுபோல உடனே மறுபடியும் பிரக்ஞை போய்விட்டது. "லைலாவுக்கு என்னைப் பிடிக்கவில்லை. மான் கொண்டுவருவதற்கு மூன்று வருஷமா? நன்றாய் வேணும் காயிஸ்! உனக்கு நன்றாய் வேணும்," என்றிவ்வாறு பிதற்றத் துவக்கினான்.

"என்ன செய்வேன்! என்ன செய்வேன்! ஹகீம் வந்துவிட்டானா பார், அர்ஜமந்து" என்று தோழியிடம் சொல்லிக்கொண்டு, துவண்டுபோய்க் கீழே சாயும் காயிஸின் உடலை லைலி தாங்கிக்கொண்டாள். அவன் வாயினின்று, "ஆ, லைலா! தனியாய்ச் செல்லுகிறேன். ஆனால், மேலுலகத்தில், மேலுலகத்தில் உன்னை—அடைவேன்," என்ற வார்த்தைகள் வந்தன. அத்தனைதான். லைலியின் மடியிலேயே பிராணனை விட்டுவிட்டான்.

லைலி வேடன் கையால் அடிபட்டு விழுந்த ஹம்ஸ பக்ஷிபோல விழுந்துவிட்டாள். கலையை இழந்த பிணையைப் போலக் கதறினாள். அந்த நிர்மானுஷ்யமான வனத்தில் அவனைத் தேடிப் பிடித்தும் அவள் வரும் வழி யெல்லாம் கட்டிக் கொண்டு வந்த மனக் கோட்டை காற்றாய்ப் பறந்து போய் விட்டது.

லைலி அங்கேயே காயிஸை அடக்கம் செய்தாள். தன் ஆட்களைக் கொண்டு அடக்கம் செய்த இடத்தில் உன்னதமான ஸமாதி ஒன்று கட்டினாள். தன் செல்வத்தை யெல்லாம் தர்மத்துக் கென்று வாகுப் ஆக எழுதி வைத்துவிட்டுச் சன்னியாசினியைப் போல் கொஞ்ச காலம் கழித்து வந்து கடைசியில் காயிஸை நினைந்துகொண்டே உயிரை விட்டாள்.

மேலுலகத்தில் இரண்டு காதலர்களும் சந்தித்துக்கொண்டு அழியாத ஆனந்தத்தை அனுபவிக்கிறார்கள் என்பதில் சந்தேக மில்லை. இவ்வுலகத்திலும் மாறாத அன்புக்கு இவர்களுடைய பேரை விட உயர்ந்த உதாரணம் கிடையாது.

—(o)—

# மக்களும் தேசமும்

—(o)—

(தமிழ்க் குருகுல வித்தியாலயத்தின் உபாசாரியரான ஸ்ரீமான். தி. ரா. மகாதேவ ஐயர் எழுதுவது)

மக்களைப் பெறுவதேன்? மக்களாலாகும் பயன் என்? மக்களுக்குப் பெற்றோர் செய் தக்க உதவி யாது? என்னும் வினாக்களும் அவற்றின் விடைகளும் மனுஷ்யவர்க்கத்தின் வாழ்க்கைக்கே மூலமாயுள்ளன. எனினும் அவை நம் இந்தியப் பெற்றோர் மனதில் நிகழ்வன வாய்க் காணப் படவில்லை. மக்களைப் பெறுவிடத்து மட்டும் கவலை தோன்றுகிறதைக் காண்கிறோம். ஆனால் அக் கவலையுங்கூட மக்களைப் பெற்றபின் பெற்றதனாலாய பயனைக் கருதாது மறைகின்றது.

மக்களைப் பெற்றுவிடுவதையே ஓர் சிறந்த கருமமாக எண்ணியிருக்கின்றோம். வம்சக் கொடி என்றாலும் அறாமல் வளர்ந்துகொண்டே போகவேண்டு மென்பதில் மட்டும் மிகுந்த ஆசை கொண்டிருக்கிறோம். ஸர்வ ஜந்துக்களும், புல்பூண்டுகளும், தம் இனத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பதைப் போல மனிதரும் மக்களைப் பெறுவது ஓர் தர்மந்தான். என்றாலும் அத்தருமம் வெறும் உடல் பெருக்குவதிலேயே அறிவு கொண்ட மானிடருக்கு முடிவு பெறாது.

வம்சவல்லி வளர்ந்து கொண்டே செல்வதற்கு மக்களைப் பெறுதல் எவ்வாறு அவசியமோ அவ்வாறே வம்சத்தின் உத்தம குணங்களும் சிறந்த தர்மங்களும் சுபாவ உணர்ச்சிகளும் வளர்ந்தோங்குவதற்கு அவசியம். ஒவ்வொரு வம்சத்திற்கு முரியதாக சில நற்குணங்களும் தர்மங்களும் சுபாவங்களும் உண்டு. அக் குணங்களும் தர்மங்களும் சுபாவங்களும் அவ் வம்சத்தின் நலத்திற்கே யல்லாமல் ஜாதி சமூக வாழ்க்கையின் நலத்திற்கும் ஓர் அம்சமும் காரணமுமாகும்.

ஆகவே இந்திய ஜாதி இடையறாது பெருகுவதற்காக மட்டிலும் அல்ல நாம் மக்களைப் பெறுவது. இந்திய ஜாதியின் தனிப் பெருங் குணங்களையும் தெய்விக தர்மங்களையும் சுசீல சுபாவங்களையும் பெருக்குவதற்காகவே நாம் புதல்வரைப் பெறுவதாய் அறிய வேண்டும். அவ்வறிவுதான் நம் இந்திய ஜாதியை உலக நலத்திலும் பெருமையிலும் உணர்ச்சியோடு ஓர் அம்சமாயும் காரணபூதமாயு மிருக்கச் செய்யும். நாம் மக்களைப் பெற்றும், நம் பழம் பெருங் குணங்களும் தர்மங்களும் சுபாவங்களும் மறைந்து போய்விடுமானால் இந்திய ஜாதி உயிரடங்கியதென்றே சொல்லலாம். இவ்வறிவும் உண்மையும் இந்தியப் பெற்றோர் மனதில் நிலவாமை யாற்றான் நம் ஜாதி ஆகிருதியில் முப்பது கோடி பருமனாயிருந்தும் சிறப்பும் கீர்த்தியுமுற்ற உலக வாழ்க்கையில் தனக்கோர் தனியிடங் கொள்ளாது தயங்கி நிற்கின்றது.

தாம் அரும்பாடு பட்டுத் தேடி வைக்கும் பொருளைத் தமக்குப் பின் அடைதற்கு மக்களை விரும்புவோரையும், தம் செல்வத்தை ஈட்டி வளர்த்தற்காக மக்களை வளர்ப்போரையும், தம் அந்திய காலத்திற்கு உதவுவாரென வெண்ணி மக்களை வேண்டுவோரையும் நாம் எங்கணும் காண்கிறோம். ஆனால் தம் வம்சம், சமூகம், ஜாதி தேசம், இவைகளின் கல்வி அறிவையும், நற்குண தர்மங்களையும், கீர்த்திப் பிரதாபங்களையும், வீரதீர சாமர்த்தியங்களையும், வைராக்கிய ஞான சம்பத்துக்களையும், தேடிப் போற்றிப் பேணி வளர்த்தற்காக மக்களை இச்சிக்கும் பெற்றோரைக் காணுத லரிதாகிவிட்டது. நம் ஜாதி ஜோதி இழந்து, உரு மாறி, விகாரமடைந்தற்கு இதுவே காரணமாகும்.

மண்ணிலும், பொன்னிலும், புகழிலும், சிறந்த மக்களை வெறும் மண்ணுக்கும், பொன்னுக்கும், கூலிக்கும், கூழுக்கும் பெற்றோர்கள் வளர்த்து விடுகின்றனர். ஆதலாற்றான், மக்கள் கும்பிட்டுக் கூத்தாடியும், கைகட்டி வாய் புதைத்தும், நடித்து நயம் பேசியும் பிழைக்கும் வழியிலேயே சோர்ந்து விழுகின்றனர். இத்தகைய மக்களும் காலத்தின் கொடுமையால் பெற்றோர்களாகி விடில், அந்தோ, அவர் மக்களின் கதியை என்னென்று கூறுவது!

இப் பாழுங் கதி நம் ஜாதியைச் சுற்றிக்கொண்டிருக்கும் இத் தருணம் நாம் தப்பி வெளியேற வழி யாது? மக்களின் வாழ்க்கையைக் குறித்துப் பெற்றோர்கள் ஆழ சிந்தனை செய்தல் வேண்டும். மக்கள் வளர்த்தலைச் சிறந்ததோர் கடமையாகக் கொள்ளல் வேண்டும். அண்டை அயல் நாட்டார் தம் மக்களை வளர்க்கு முறைகளை உற்று நோக்கி ஆராய்தல் வேண்டும். மக்களின் பயிற்சியே ஜாதியின் எழுச்சி. ஆதலால் ஜாதியின் எழுச்சிக்கு மாறான மார்க்கங்களினின்றும் மக்களை விலக்கல் வேண்டும். புத்திரனால் "புத்" என்னும் நரகத்தினின்றும் கரையேறலாம் என்பதை யாவரும் நம்பியுள்ளார்கள். ஆனால் அது பரலோக வாழ்க்கைக்கே யுரியது, இகலோக வாழ்க்கைக் கல்ல என்கிறார்கள். ஆதலாற்றான் நமது மக்கள் நம்மை இகலோக அவஸ்தைகளினின்று கரையேற்ற வலாதவர்களாய்ப் பரிதாப முகத்துடன் நம்மை நோக்கி நிற்கின்றனர். நம்மை நம் மக்கள் பரலோக நித்தியானந்தத்திற் குரியவர்க ளாக்குவதுபோக நாம் அவர்களை வளர்க்கும் முறையால் இகலோக துன்பத்திற்கும் பழிக்கும் நிலையிடமாக்கி வைக்கின்றோம். நம்முடன் சேர்ந்து தாமும் நரக வாழ்க்கையிலிறங்கும் நம் மக்களா நம்மைப் பரலோக நற்கதிக்கு ஆளாக்க வல்லவர்கள்? அது எங்ஙனம் சாத்தியமாகும்? ஆகாது. ஆதலால், நம் பரலோக வாழ்க்கைக்கு நலஞ்செய விருக்கும் நம் மக்கள் இகலோக இன்ப வாழ்க்கையை விளைவிக்க வல்லவராதல் வேண்டும். இதை நம்பி அவ்வாறு அவரைப் பயிற்றல் வேண்டும். "வரப் புயரக் குடி யுயரும், குடி உயரக் கோலுயரும், கோல் உயரக் கோனுயரும்" என்றாற்போல, மக்களைப் பண்படுத்தும் வழி திருந்த, மக்கள் உயர்வர், தேசஇன்பமும், உலக இன்பமுமுயரும், பரலோகமோக்ஷமும் சாத்தியமாகும் என்று மனதார உணரவேண்டும்.

இவ் வுணர்ச்சி சென்ற சில வருஷங்களாக நம் தேசத்தின் சில பாகங்களில் ஒரு சிறிது பரவிவருகிறது. அது பலவிதமான உருக்கொண்டு வளர்கின்றது. நம் தென் தமிழ் நாட்டிலும் சில சூட்சும ரூபங்களை அது எற்றுக் கொண்டுளது. அவைகளில் ஒன்று தேசிய கல்வியின்மீது ஜனங்களுக்குப் பிறந்திருக்கின்ற பேரார்வமாகும்

# கம்ப ராமாயணம்

(ஸ்ரீமான் வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர் எழுதுவது)

## க. உபோற்காதம்

கம்ப நாட்டாழ்வார் எழுதிய திவ்விய கிரந்தமானது முப்பத்தைந்து தலைமுறைகளாகத் தமிழருக்கு ஆனந்தத்தைத் தந்துவருகிறது. இந்த ஆயிரத்தைம்பது வருஷங்களில் எத்தனை மேதாவிகள் கம்பனுடைய ராமாயணத்தை ஆராய்ந்திருப்பார்கள், எத்தனை பேர் பிரசங்கித்திருப்பார்கள், எத்தனை பேர் தமக்குள் தாமே படித்து ஆனந்தபரவசர்களாகியிருப்பார்கள்! ஒவ்வொரு தலைமுறையிலும் கம்ப ராமாயணம் பிரசங்கிப்பதில் சிறந்தவர் என்று கீர்த்தி பெற்றவர் அனேகர் இருந்திருக்கிறார்கள். வேறெந்தக் காவியத்தையும்பற்றி இத் தகைய தனிப் பெயரை வித்துவான்கள் பெற்றதாகவாவது விரும்பியதாகவாவது நாம் கேட்டதில்லை. இப்பொழுதுகூட, சிலப்பதிகாரம் பிரசங்கிப்பதில் சிறந்தவர் என்றாவது மணிமேகலை சொல்லுவதில் சாமர்த்தியம் நிறைந்தவர் என்றாவது வித்துவான்களைப் பற்றிப் புகழுவதில்லை. ஆனால் கம்பனுடைய ராமாயணத்தைப் பிரசங்கிப்பதையே ஒருவர் தமது காரியமாக வைத்துக்கொண்டால் மனிதர் அவர்களுக்கு, அவர்களுடைய புலமைக்கும் சொற்பொழிவுக்கும் தக்கபடி, தனி மரியாதை செலுத்துகிறார்கள். அவர்களும் கம்ப ராமாயணப் பிரசங்கி என்கிற பெயரை ஆசையோடே விரும்புகிறார்கள்.



ராமாயணம் புண்ணிய கதையாகையால் கதையை உத்தேசித்துப் பக்தர்கள் அதற்குத் தனி மரியாதை செலுத்துகிறார்கள் என்று சொல்லப்படலாம். ஆனால் வில்லிப்புத்தூரார் பாரதத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது, ஆரியப்ப புலவர் என்னப்படுகிற அனதாரிப் புலவரின் பாகவதத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது, கச்சியப்பருடைய ஸ்காந்த புராணத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது யாருக்கும் கியாதி வந்து நாம் கேட்டதில்லை. ஆகவே இந்தப் புகழும் புகழிலுள்ள விருப்பமும் கம்பன் எழுதிய காவியத்தின் சிறப்பைத்தான் காட்டுகின்றனவே ஒழிய கதையின் சிறப்பைக் காட்டவில்லை. கம்பனுடைய ராமாயணமானது மற்ற கவிகள் எழுதிய ராம சரிதைகளையும் தமிழில் எழுதப்பட்ட இதர காவியங்களிற் பெரும்பாலனவற்றையும் கூட 'வெயிலிடைத் தந்த விளக்' கொளி போலாக்கிவிட்டது.

இதுமாத்திர மில்லை. கம்ப ராமாயணமானது ஹோமர் எழுதிய இலியாதையும், விர்க்கிலியன் எழுதிய எனயிதையும், மில்டனுடைய சுவர்க்க நஷ்டம் என்ற காவியத்தையும், வியாஸ பாரதத்தையும், தனக்கே முதனூலாக இருந்த வால்மீகி ராமாயணத்தையுங்கூட பெருங்காப்பிய லட்சணத்தின் அம்சங்களுள் அனேகமாய் எல்லாவற்றிலும் வென்றுவிட்டது என்று சொல்லுவோம். இவ் விமரிசனத்தைத் தொடர்ந்து வாசிப்போருக்கு எமது இவ் அபிப்பிராயத்தை மெய்ப்பிக்க முயலுவோம்.

## உ. ரசனைச் சுவை

காவிய இலக்கணத்தை நிர்ணயிப்பதில், பாரத தேசத்து இலக்கண ஆசிரியர், நமக்குத் தெரிந்த மட்டில், விவரியாமல் விட்டு விட்ட சில அமிசங்களை மேனாட்டு இலக்கண ஆசிரியர் விஸ்தாரமாக விவரித்திருக்கிறார்கள். நம் நாட்டு இலக்கண ஆசிரியர் பொருள் யாப்பு அணிகளைப் பற்றி நன்றாக ஆராய்ந்திருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். அலங்கார சாஸ்திரத்தை நம் நூலாசிரியர் ஆழமாக ஆய்ந்திருக்கிறார்கள் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் காவிய சமக்ரத்தைப்பற்றின ஆராய்ச்சிகள் இதுவரை வெளி வந்திருக்கும் நூல்களில் விஸ்தாரமாகக் காணப்படவில்லை. பெருங் காப்பியத்தில் என்ன என்ன விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டும் என்று ஓர் பெரிய ஜாபிதா இலக்கணங்களில் காணப்படும். ஆனால் காவியம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், என்ன என்ன இலக்கணங்கள் பெருங் காப்பியத்துக்கு இன்றியமையாதவை, பெருங் காப்பியங்களின் போக்குக்கும் ஏனைய காவியங்களின் போக்குக்கும் என்ன வித்தியாசம், என்ற விஷயங்கள் நம் இலக்கணங்களில் விசாரிக்கப்படவில்லை. மேனாடுகளில் அரிஸ்தோத்தலன் காலம் முதற்கொண்டு இலக்கண நூலாசிரியர் காவிய அமைப்பைப்பற்றிப் பெரிய பெரிய ஆராய்ச்சிகள் வெளியிட்டிருக்கிறார்கள். நம்மவர் காட்டிலுள்ள மரங்களைத் தனித் தனியே கவனித்துக்கொண்டு வந்து ஆரணியத்தை மறந்து விட்டார்கள். மேனாட்டவர் மரங்களைக் கவனித்ததோடுகூட ஆரணியத்தைப் பற்றியும் விசேஷமான ஆராய்ச்சிகள் செய்துளார்கள்.

காவிய சமக்ர இலக்கணத்தைத் தண்டி கவி தனது அலங்கார இலக்கணத்தில் பாவிக அணியை வர்ணிக்கும்போது சில வார்த்தைகளில் சொல்லி முடித்து விடுகிறான். அரிஸ்தோத்தலன், ஹொராவியன், புவாலோ, வீதா, பெயின் முதலிய மேனாட்டு இலக்கண ஆசிரியர்கள் விரிவாகச் செய்துள்ள ஆராய்ச்சியைப் பற்றி இங்கு ஓரிரண்டு வார்த்தைகள் சொல்லுவது பொருந்தும். அவ் விலக்கணக்காரர்களுடைய பிரதான அபிப்பிராயம் என்னவென்றால், ஓர் பெருங் காப்பியம் அனேக அவயவங்கள் சேர்ந்ததாயிருப்பினும் ஒரு ஜீவ பிராணியைப் போல ஓர் தனிப் பிண்டமாயிருத்தல் வேண்டும். தலை, இடை, கடை என்ற பாகுபாடும், அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது ஏகம் என்கிற உணர்ச்சியும் அக் காவியத்தில் தோன்ற வேண்டும். ஒவ்வோர் அவயவமும் தன் தனக்கு முன்னேயுள்ள அவயவத்தோடும், பின்னேயுள்ள அவயவத்தோடும் பிணைக்கப் பெற்று ஒன்று என்கிற உணர்ச்சியை வளர்க்கவேண்டும்.

பஞ்சதந்திரக் கதை, விக்கிரமாதித்தன் கதை, மதன காமராஜன் கதை, அராபியக் கதை முதலிய கதைகளை ஓர் பக்கமும், அரிச்சந்திர புராணம், கந்த புராணம், ராமாயணம் முதலிய காவியங்களை ஓர் பக்கமும் வைத்துச் சீர்தூக்கிப் பார்த்தால் நாம் மேற்காட்டிய இலக்கணத்தின் கருத்து விளங்கும். பின் சொல்லிய மூன்றிலும் ஒரே ஒரு வஸ்துதான் காவியமாக எழுதப்

படுகிறது. இவற்றுள் அனேக உப கதைகள், வர்ணனைகள், உபாக்கியானங்கள் வருகின்றன என்பது வாஸ்தவம். ஆனால் இவை அனைத்தும் கதையின் மத்திய சம்பவத்துக்குத் துணையாக நிற்கின்றன—மத்திய சம்பவத்திற்கு அலங்காரமாகவோ, மத்திய சம்பவத்திற்கு வித்தாகவோ, மத்திய சம்பவத்தினின்று இயற்கையாக விளைந்த விளைவாகவோ,விளங்குகின்றன. முன் சொல்லப்பட்ட நூல்களோ, அவை செய்யுள் நூல்கள் அல்ல என்பது ஓர் பக்கமிருக்க, தனிக் கதைகளின் கேவலம் சேர்க்கையே யாகும். அவைகளுள் மத்திய சம்பவத்திற்கும் கதைகளுக்கும் உள்ள சம்பந்தம் மிக மிக லேசானது—அதைச் சம்பந்தம் என்று கூடச் சொல்லத்தகாது. மகா காவியத்தின் பகுதிகளுக்கோ இத்தகைய ஒட்டின்மை இராது. அவற்றின் சம்பந்தம் ஜீவ சம்பந்தம். உபாக்கியானங்கள் முதலிய புற அணிகள் பெருங்காப்பியத்தினுள் அளவுக்கு மீறி இரா. மற்ற உறுப்புக்களெல்லாம் காவியத்துக்கு அகத்துறுப்புக்களாகவே விளங்கும். அவ் உறுப்புக்களில் எதை எடுத்துவிட்டாலும் கதை ஊனமாகிவிடும்.

பாவிக அணி என்று நாம் கூறுவதை மேனாட்டவர் "ஆர்க்கிதெக்தோனிக்ஸ்" என்கிறார்கள். இப் பதத்துக்கு ரசனை அல்லது காவிய நிர்மாணம் என்று பொருள் சொல்லலாம். இது மனைச்சிற்ப நூலினின்று எடுத்துக்கொண்ட பெயராகும். ஓர் அரண்மனையையோ கட்டடத்தையோ கட்டுவதற்கு அனந்த கோடி ரீதிகள் உண்டு. ஆனால் சில ரீதிகள்தாம் கட்டடத்துக்கு அழகு தரும். பெரும்பாலவை வானத்தையும் காற்றையும் சூரிய ஒளியையும் மூடுமே ஒழிய நமது சௌந்தரிய உணர்ச்சியைத் திருப்தி செய்யியா. அப்படியே ஓர் காவியத்தைப் பல மாதிரி எழுதலாம். நள சரித்திரம், ராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம், முதலிய காவியங்களெல்லாம் அவ் அவ் ஆசிரியர்களின் மனோதர்மத்துக் கேற்றபடி எழுதப்பட்டுள்ளன. சில சம்பவங்களைச் சிலர் விரிக்கிறார்கள், மற்றவற்றைச் சுருக்கி விடுகிறார்கள். வேறு சிலர் முற் சொல்லியவர்க்கு மாறாகச் செய்கிறார்கள். சிலர் சில சம்பவங்களை எடுத்துவிட்டுப் புதிய சம்பவங்களைப் புகுத்துகிறார்கள். ரஸிகனுடைய மனதிற்குத் திருப்தி உண்டாகும்படி எந்தக் கவியின் அமைப்பு அமைந்திருக்கிறதோ அவனைத்தான் ரசனையில் சிறந்தவன் என்று சொல்லலாகும். உண்மையாகப் பார்க்கையில் பெருங்காப்பியங்களுக்கு ரசனையே இன்றியமையாதது. ரசனை சுகம் இல்லாமல் வேறு எந்தச் சுகம் இருப்பினும் பெருங்காவியங்கள் பெருமையுள்ளன வாகா.

காவிய ரசனையை மகா வித்துவான் ஒருவனுடைய ராகவிஸ்தாரத்துக்கு ஒப்பிடுவோம். எல்லா வித்துவான்களும் எழு ஸ்வரங்களைத்தான், அல்லது அர்த்த ஸ்வரங்களையும் சேர்த்துக்கொண்டால் இருபத்திரண்டு ஸ்வரங்களைத்தான் கையாடுகிறார்கள். இந்த ஸ்வரங்கள் துவாரா நவ ரஸங்களைத்தான் ஊட்டுகிறார்கள். ஆனால் ஒரு வித்துவானுடைய ஆலாபனத்துக்கும் இன்னொரு வித்துவானுடைய ஆலாபனத்துக்கும், ஒரு பாடகன் ஓர் கீர்த்தனையைப் பாடுவதற்கும் இன்னொருவன் அதே கீர்த்தனையைப் பாடுவதற்கும் எத்தனை பேதம்! ஒருவன் ராகத்தின் ஸ்வரங்களில் யாதொரு அபஸ்வரத்தையும் கொண்டுவந்து கலக்காமல் பாடிவிடுகிறான். ராகம் பிழையின்றி, சாஸ்திரோக்தமாகப் பாடப் பட்டிருக்கும். லயத்தில் யாதொரு பிசகும் இராது. கேட்போர் 'சபாஷ்' என்று சொல்லிக்கொண்டும் சிரக்கம்பம் செய்துகொண்டும் கேட்பார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்தில் யாதொரு சலனமும் ஏற்பட்டிராது. அலை வந்து மோதியும் அசையாத பாறைபோல அவர்களுடைய இருதயம் அப்படியே இருந்துவிடும். இன்னொருவன் வருகிறான். அதே ராகத்தைப் பாடுகிறான். ஆனால், எல்லோரும் அமுத மழையில் அகப்பட்டவர்கள்போலாகிவிடுகிறார்கள். அவரவர்களுடைய சம்ஸ்காரத்துக் கேற்றபடி அவரவர்களுடைய இருதயம் மந்த மாருதத்தில் ஊசலாடும் பூங்கொம்பர் போலவும்,சிற்றலைகளால்அசைந்தாடும்தாமரை போலவும், கருப்பஞ்சாற்றில் கரையும் கற்கண்டைப் போலவும், அக்னியில் நெகிழ்ந்து உருகும் மெழுகைப் போலவும் தங்கத்தைப்போலவும் ஆகிவிடுகிறது. அவர்களுடைய மனது புதிய உலகத்தில் சஞ்சரிக்கத் துவங்கிவிடுகிறது. மனோ லோகத்தில் சித்திரத்துக்கு மேல் சித்திரம் தோன்றிக்கொண்டே வருகிறது. அவர்கள் லயப்பட்டு, வயப்பட்டுப் போய்விடுகிறார்கள். இந்தக் கலைஞனுக்கும் முன் சொல்லப்பட்ட கலைஞனுக்கும் உள்ள வித்தியாசம், இவனிடம் கனிவு இருந்தது, அவனிடம் அது இல்லை. ஆனால் அது மாத்திரம் இல்லை.



இவனுடைய பாட்டின் அமைப்பு மனோஹரமாக அமைந்திருக்கிறது. ஒவ்வொரு ஆவிருத்தமும் அதற்கு முன்னே பாடப்பட்ட ஆவிருத்தத்தினின்று இயற்கையாக வளர்ந்த வளர்ச்சியாகும், அதேமாதிரி தனக்குப் பின்னே வரப்போகும் ஆவிருத்தத்திற்குத் தோற்றுவாயும் ஆகும். ஒவ்வொரு 'சங்கதி'யும் அந்தந்தப் பதங்களை அலங்கரிக்க விழுந்த அலங்காரமாகுமே யன்றி, பதங்களையே முழுக்கி மூடிவிடும் வெறும் சப்த சாலங்களாகா. ஒவ்வோர் ரஸமும் போதிய அளவுக்கு விஸ்தரிக்கப்பட்டு இயற்கையான சோபானங்கள் வழியாக அதனோடு பொருந்தக்கூடிய வேறொரு சுவைக்கு வழி காட்டிக் கொண்டு போகும். கடைசியாக எல்லா ஆவிருத்தங்களும் எல்லாச் சுவைகளும் இன்னலத் தெரியவல்லாருடைய இருதயம் லயித்துப் போகும்படி ஓர் சமஷ்டி உணர்ச்சியை உண்டாக்கும்.

இதே மாதிரி தான் ஒரு காவிய ரசனையும். காவியத்தின் தனித் தனிப் பாகங்களிலுள்ள இன் சுவை ஒரு பக்கமிருக்க, பாகத்துக்கும் பாகத்துக்கும் உள்ள பொருத்தம் அழகாக இருப்பதோடு காவியமானது நல்ல சமஷ்டீகாணத்தைப் பெற்றிருக்கவேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு இந்த சமஷ்டீகாரம் அழகாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு காவியமானது ரஸிகருடைய இருதயத்தைக் கவர்ந்து எல்லோரும் விரும்பத் தக்கதாகும்.

கம்ப ராமாயணத்தில் உள்ள ரசனைச் சுவை மிகவும் உயர்ந்தது. ரஸிகருடைய அறிவுக்கு அது அமுதமாக நிற்கின்றது. கம்ப ராமாயணத்தின் ரசனைச்சுவையை உணராமல் மற்றச் சுகங்களைமாத்திரம உணருகிறவர்கள் அதன் சுவையில் செம்பாதிக்குமேல் இழந்து விடுகிறார்கள். ராமாயணத்தின் அழகை விஸ்தரிக்கிறவர்கள் ஒவ்வோர் பாகத்தின் அழகை, சிற்சில வேளைகளில் ஒவ்வோர் செய்யுளின் அழகைத்தான் எடுத்துக் காட்டுகிறார்கள். ராமாயணத்தை ஓர் சிற்பியால் சமைக்கப் பெற்ற அரண்மனையாகப் பாவித்து, அவ் அரண்மனையின் ஒவ்வோர் அவயவத்துக்கும் மற்ற அவயவங்களுக்கும் உள்ள பொருத்தத்தையும்,அவயவங்களுக்கும் அரண்மனையின் சமக்ர அமைப்புக்கும் உள்ள பொருத்தத்தையும் வியக்தீகரித்து எடுத்துக் காட்டும் விமரிசனங்கள் இது வரையில் வெளிவரவில்லை. கம்ப ராமாயணப் பிரகடனத்துக் கென்று உதித்திருக்கும் 'கம்ப நாடா'ரில் இவ் இரசனைச் சுவை தீர விசாரிக்கப்படும் என நம்புகிறோம்.

ராமாயண கதை அயோத்தியா காண்டத்தில்தான் ஆரம்பிக்கிறது என்று சொல்ல வேண்டும். வால்மீகி பகவான் தனது ராமாயணத்துக்கு "ராவணவதம்" என்றும் "சீதையின் பெருங்கதை" என்றும் மறு பெயர் கூறுகிறான். ராமாயணத்தின் வஸ்து, அதாவது பிரதான சம்பவம் ராவண வதம். அதற்கு நெருங்கிய காரணம் அரணியத்தில் நேரும் சீதாராவண சந்திப்பாதலால், ராமன் சீதாசமேதனாய்க் காட்டுக்குச் செல்வதையே அந்த வஸ்துவுக்கு பீஜம், அதாவது விதை, என்று கூற வேண்டும். அயோத்தியா காண்டத்தில்தான் இவ் விதை விதைக்கப்படுகிறது. ஆகலால் அதுவேதான் கதையின் உண்மையான துவக்கம். அது முதற்கொண்டு கதையானது ஓர் அரண்மனைக் கட்டடம் போல அழகாயும் கம்பீரமாயும் கிளம்பி, வஸ்து பூர்த்தியாகிற வரையில் ஒரே வளர்ச்சியாக வளர்ந்து செல்கின்றது. இப் பெரிய கட்டடத்திற்குப் பால காண்டம் முன் வாயிற் சோலையாக விளங்குகிறது. அரண்மனைக்குள் பிரவேசித்து அதன் சிற்ப வேலையில் மூழ்குவதற்கு முன் படிப்போனுடைய மனது இவ் உத்தியானத்தில் ஆனந்தத்தோடு உலவும். இதில் ராமனுடைய அவதாரமும் விவாகமும் வர்ணிக்கப்படுகின்றன. ஆனால் இவை மாத்திரம் இக் காண்டத்தின் ௧,௪00; செய்யுள்களை நிரப்பப் போதா. அதற்காகக் கம்பன் நாட்டு வர்ணனைகளும் நகரவர்ணனைகளும், எழுச்சி, உண்டாட்டு, வரைக் காட்சி, ஆற்று வர்ணனைகளும், உலாவியல் வர்ணனைகளும் பிறவும் கொண்டு இக் காண்டத்தை விரிக்கிறான். தவிர இக் காண்டத்தில் விசுவாமித்திரனாலும் விசுவாமித்திரனைக் குறித்தும் சொல்லப்படுகிற கதைகளைக் கம்பன் வால்மீகியினின்று எடுத்துக் கொண்டு பால காண்டத்தின் அளவைப் பெருக்கிக் கொள்ளுகிறான். வஸ்துவின் பெருமையையும் விஸ்தாரத்தையும் உத்தேசிக்க, இந்த முகவுரையை நாம் அனாவசியம் என்றாவது அதிவிளம்பனமாக இருக்கிறது என்றாவது கண்டிக்க வேண்டியதில்லை. ஆனால் காவியத்தோடு அவயவ சம்பந்தம் அதற்கில்லை என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

# யோக ஸாதனம்

(௧)

(உத்தரயோகி அரவிந்த கோஷ் எழுதியதை ஸ்ரீ க. அமுதன் மொழிபெயர்த்தது)

[கலியப்தம் ௫௦௧௧-ம் வருஷம் பங்குனி மீ ௨௧ வ ஸ்ரீ அரவிந்த கோஷ் புதுவைக்கு வந்தார். வந்தகையில் ஐந்தாறு மாத காலம் அவர் கோமுட்டித் தெருவில் ஸ்ரீமான் சங்கர செட்டியார் வீட்டில் தங்கியிருந்தார். இந்த யோக ஸாதனம் என்னும் புத்தகமானது அப்பொழுது பத்து தினங்களில் நாளுக்கொரு அத்தியாயமாக எழுதப்பட்டது. ஆயினும் யோகஸாதனம் என்னும் புத்தகத்திற்கு--பொதுஜனங்கள் மதிப்பதுபோல்—ஸ்ரீ அரவிந்தர் ஆசிரியரல்லர். இவர் தன் உடல், உயிர், மனம் முதலியவைகளில் 'சாந்தியை' ஸ்தாபனம் செய்த பொழுது இவர் மூலமாகத் தினே தினே ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு அசரீர மகா புருஷர் இந்த யோக ஸாதனத்தை உபதேசித்துச் சென்றார். ஸ்ரீ அரவிந்தர் தான் கேட்டதைக் கேட்டவாறே சுற்றியிருந்தவர்களிடம் சொல்லிய பொழுது அவர்கள் ஒவ்வொருவரும் அப்படியே எழுதிவைத்துக்கொண்டார்கள். பிறகு இந்நூல் "வாணிவிலாஸ்" அச்சுக்கூடத்தாரால் அச்சிடப்பட்டது. இதை உபதேசம் செய்த அசரீர மகா புருஷர் யார் என்பதை வெளியிட எனக்கு அதிகாரம் கிடையாது.

நம் தென் நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு ஜப்தா யிருந்தார். அவர் தம் கடைசி நாட்களில் வடக்கிலிருந்து ஒரு யோகி தென் நாட்டை ஆசிரயிக்கப் போவதாகத் தன் சிஷ்யர்களிடம் வெளியிட்டார். அவரை இன்னாரென்று கண்டுபிடிக்கும் பொருட்டாக மூன்று சின்னங்களையும் தன் சிஷ்யர்களுக்குக் காட்டிப் பரகதியை அடைந்தார். அச்சின்னங்களையொப்ப அரவிந்தரே அந்த யோகியென அறியப்பட்டது. இதனால் இவருக்கு "உத்தரயோகி" என்ற பெயருண்டாயிற்று.

இந்த யோக ஸாதனத்தில் காணப்படும் ஸாதன முறைக்கும் இவர் தற்சமயம் செய்துவரும் யோக ஸாதன முறைக்கும் வெகுவாய் வித்தியாசங் காணப்படும். இப் புஸ்தகத்தில் ஸாதன ஆரம்பத்திற்கு வேண்டிய சில மூல தத்துவங்களே காணப்படுகின்றன. ஸ்ரீ அரவிந்தர் இபபொழுது இருந்துவரும் யோக அவஸ்தையையும் செய்துவரும் ஸாதன முறையையும் அவர் நடத்திவந்த "ஆரியா" என்னும் இங்கிலீஷ் மாதப் பத்திரிகையில் "பூரணயோகம்" என்னும் தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கடைசி பதினைந்து அத்தியாயங்களிலிருந்து ஒருவாறு ஊகிக்கலாம்.

இந்த யோக ஸாதன புத்தகத்தின் நடையானது மூலத்தில் ஏறக்குறைய ஸூத்திர தோரணையானது—பாஷ்ய நடையன்று—விரி உரை நடையன்று. நேயர்கள் பொருளை அறிந்து வழியைத் தெளிய வேண்டின், ஒரு முறைக்குப் பல முறையாகப் படிக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூடியவரை, மூலத்தின் உயிரைப் பெரும்பாலும் மொழிபெயர்ப்பில் பிடித்து நிறுத்த முயன்றிருக்கிறேன்.

கடைசியாக ஒரு வார்த்தை. ஐரோப்பியர்கள் ஞானத்தை வெளியினின்று சிறிது சிறிதாகத் தேடுகிறார்கள். நாம் ஞானத்தின் இருப்பிடமாகிய ஆத்மாவை அனுபவத்தில் உள் நாட்டத்தினால் பெற்று அதன் சக்தியின் உதவியால் வெளிவந்து ஒளிர்கிறோம். இதுவே இரு நாடுகளுக்குமுள்ள முக்கிய வித்தியாசம். உன்னத்தின் உச்சியினின்று ஆரம்பிக்கும் உண்மை வழியையே இந்த யோக ஸாதனத்தில் காட்டப்பட்டிருக்கிறது. இம்முறையைக் கண்டு நேயர்கள் பிரமிக்க வேண்டியதில்லை.]

—— ◦(௦)◦ ——

அனேக ஜனங்கள் பயின்றுவரும் யோக ஸாதன முறையும், நீ பயின்று வந்த யோக ஸாதன முறையும் ஒன்றுக்கொன்று நேர் மாறானவை. சாதாரணமாக எல்லோரும் தேகம் பிராணன் இவைகளினின்று தொடங்கிப் புத்தி, சக்தி இவைகள் வரை சென்று முடிக்கிறார்கள். சக்தியினின்று தொடங்கி தேகம் வரை சென்று முடிப்பதே ஒழுங்கான வழியாகும். சக்தியினின்று ஆரம்பிக்கும் பக்ஷத்தில் ஆஸனம், பிராணாயாமம், கும்பகம், சித்தசுத்தி முதலிய தொடங்குவதற்காக ஏற்பட்டுள்ள எவையும் அவசியமில்லை. யோக சம்பந்தமாக இந்த உண்மையைக் காட்டிக் கொடுக்கும் பொருட்டே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஜனனமெடுத்



தார். "முதலில் சக்தி உபாஸனை செய்து, சக்தியைப் பெறு: பிறகு அவள் உனக்கு ஸத்தைக் கொடுப்பாள்," என்று பரமஹம்ஸர் முறையிட்டார். உறுதியும் சக்தியுமே ஒரு யோகிக்கு இன்றியமையாத முதற் கருவிகள். ஆனது பற்றியே "நீ பிரம்மம் என்பது நினைவிருக்கட்டும்," என்னும் மந்திரத்தை அவர் எப்பொழுதும் உச்சரித்தார். ஸ்வாமி விவேகானந்தருக்கு இதையே மூலமந்திரமாக உபதேசித்தார். நீ ஈசுவரன். உனக்கு இஷ்டமிருந்தால் நீ சுத்தனாகலாம், ஸித்தனாகலாம், வேறு எதுவாக வேண்டுமானாலும் ஆகலாம்; அல்லது மேற்சொல்லியவைகளுக்கு நேர் மாறாகவும் ஆகலாம். உன்னிடத்தில் உனக்கு நம்பிக்கை இருக்க வேண்டும்—இது முதல் அவசியம். இரண்டாவது பகவானிடத்தில் நம்பிக்கை வேண்டும். மூன்றாவது உனக்குக் காளியிடத்தில் நம்பிக்கை வேண்டும். இவை மூன்றுஞ் சேர்ந்ததே உலகம். முதலில் தபோசக்தியைப் பயிற்சிசெய், தபோசக்தியினால் ஞானத்தைப் பயிற்சிசெய், ஞானத்தினால் சித்தத்தைச் சுத்தஞ்செய், பிராணனை அடக்கு, மனதைச் சாந்திசெய். மேற்சொல்லிய எல்லாவழிகளாலும் உடலை அமரமாக்கு. இதுதான் உண்மையான யோகம், மஹாபந்தா; இதுதான் மெய்யான தாந்திரிக மார்க்கம். புத்தியினின்று தொடங்குவது வேதாந்தம்; சக்தியின் துணையைக்கொண்டு ஆரம்பிப்பது தாந்திரிக ஸாதனம்.

உறுதி என்பது என்னவென்று நீ கேள்வியுற்றிருப்பாய். அது சக்தி. அது வாஸனையுமன்று, சேஷ்டையுமன்று. உறுதி நீங்கிய காலத்து வாஸனையும் சேஷ்டையும் உண்டாகின்றன. உன்னிடத்தில் இச்சைகளிருந்தால் உனக்கு உன் சக்தியில் நம்பிக்கையில்லை என்பது தெளிவு. பிரம்மத்துக்கு ஒரு வித இச்சையுங் கிடையாது. அது எதனிடத்து உறுதிவைக்கிறதோ அது அவ்வாறே நடைபெறுகிறது. உன்னிடத்தில் சேஷ்டைகளிருந்தால் அது உனக்குச் சக்தியில் நம்பிக்கையில்லை என்பதையே குறிக்கும். தங்களிடத்து வலிமை இல்லை என்று நினைப்பவர்களும் உணர்பவர்களுமே தங்களுக்கு வேண்டிய ஸித்தியைக் குறித்து முயற்சித்துப் பாடுபடுகிறார்கள். பிரம்மத்தினிடத்துச் சேஷ்டை கிடையாது. அதனுடைய உறுதியின் இயல்பு ஸித்தி. ஆனால் அது காலதேச வர்த்தமானங்களின் எல்லைகளுக்குள்ளாகவே ஸித்தியை விளைவித்துக் கொடுக்கிறது. இப்பொழுதே சில நிபந்தனைகளுக்குள்ளாக ஏதேனும் ஒரு குறித்த ஸித்தியை வேண்டுவது அஞ்ஞானமாகும். பலயுகங்களுக்கு முன், கல்பம் ஆரம்பித்த பொழுது, ஒவ்வொரு ஸம்பவத்தின் நிகழ்ச்சி வளர்ச்சி முதலியவற்றினுடைய கால தேச வர்த்தமானங்களைப் பரமேஸ்வரனும் நீயுமாகக் கூடி நிர்ணயித்திருக்கிறீர்கள். ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளவைகளை இப்பொழுது மாற்ற முயல்வதானது அறிவின்மையாகும். காலதேச நிலைகளைக்குறித்துக் கவலைப்படாதே; உணர்வில் உறுதிகொள்; பலனைப் பகவானிடத்தில் ஒப்பித்துவிடு. உன் அகத்தில் காணப்படும் ஸர்வ சக்தி வாய்ந்த ஸர்வக்ஞமான ஆத்மாவே அவர். நீ ஜீவாத்மா: அவர் விசுவாத்மா. அவரன்றி ஒன்றுங் கிடையாது—"ஏகமேவாத்விதீயம்"—இரண்டற நின்றவர். இதனால் உறுதி என்பது ஸமதை என்று விளங்கும்; அது வாஸனையும் சேஷ்டையும் அற்ற நிலை; இவை இரண்டும் நீங்கியதே ஞானம். ஞானம் உதிப்பதற்கு முன் வாஸனையையும் சேஷ்டையையும் வரவொட்டாது தடுப்பதோ அஸாத்தியம்.

நிற்க, யோக ஸாதனத்தை எவ்வாறு தொடங்குவது? உனக்குள்ளாகச் சக்தி இருக்கிறாள். அவளை யோக ஸாதனத்தைச் செய்யும்படி விட்டுவிட்டு, நீ சரியான நிலை நோக்கத்தோடு இருந்துகொண்டு, அவளுக்குத் துணையாயிரு. நீயே ஸாக்ஷி, அநுமந்தா, போக்தா, பர்த்தா. அநுமந்தாவாக விருந்துகொண்டு

அநுமதி கொடுத்து, ஸாக்ஷியாக விருந்து கொண்டு அவள் எப்படி பலன்களைக் கொடுக்கிறாளென்று பார்த்து, போக்தாவாக விருந்து பலன்களை அனுபவித்து, பர்த்தாவாக விருந்து ஆதாரத்தை இரட்சணை செய்து அவளுக்குத் துணைபுரி. தமோ குணத்தால் கவரப்பட்ட உதாஸீனத்தினால் அல்லது இராஜஸிக எதிர்ப்பினால் அவள் செய்வதை அழித்துவிடாதே. உனக்குள் ளிருக்கும் சக்தியானவள் ஸாதனத்தை நடத்தி நிறைவேற்றிக் கொடுக்கத் தவறுவாள் என்பதில் சிறிதும் சந்தேகப்படாதே. நீ ஞாதா. தானாக உன் முன் வந்து நிற்கும் ஞான மௌனத்தையும் பெற்றுக்கொள். நான் சொல்லியுள்ள திருஷ்டி நிலையைக் கைக்கொள். ஸாதனத்தின் ஒவ்வொரு தனிச் செயலையும், வாழ்க்கையின் ஒவ்வொரு தனிச் செயலையும் மேற் சொல்லியுள்ள திருஷ்டி நிலையினின்று செய். வேறொன்றும் நீ செய்ய வேண்டியதில்லை. மிகுந்து நின்ற அனைத்தையும் காளி செய்துதருவாள். துன்பப்படாதே, கவலைப்படாதே, ஆத்திரப்படாதே; உன் னெதிரில் அளவில்லாக் காலம் காத்துக்கொண்டிருக்கிறது, எதற்காக அவசரப்பட வேண்டும்? ஆனால் மாத்திரம் தமோ குணத்தினால் கவரப்பட்டுவிடக்கூடாது, வீண் காலக்ஷேபமும் செய்யக்கூடாது.

—✽o✽—

**இதுவரையில் எந்த ஜனசமூகமும் கஷ்டங்களை அனுபவியாமல் சுதந்திரம் பெற்றதில்லை.**

* * *

**அன்னியநாட்டு உடை அணியும்வரை இந்தியர்களை நிர்வாணிகளென்றே நான் கூறுவேன்.**

*மகாத்மா காந்தி.*

# பாரதசக்தி

(ஸ்ரீமான் சுத்தானந்த பாரதியார் பாடியது)

[இது மகா காவிய நடையில் எழுதப்பட்டு வரும் ஓர் சிறந்த நூலாகும். **இந் நூலில் ஆசிரியர்** "பாரத நாட்டின் பழம் புக"ழைப் பாடுவான் எடுத்துக் கொண்டுளார். உலக சரித்திரம் தோன்றியுள்ள நாட்களுக்கு முற்காலம் தொடங்கி நேற்று வரையில் வீர வாழ்க்கைக்கும் கல்விக்கும் ஞானத்துக்கும் தாயகமாக இருந்து வந்திருக்கிற பாரத நாட்டின் புகழ் எல்லையில்லாத கடல். இக் கடலில் நீந்துவதற்குப் போதிய ஆற்றல் படைத்தவர் ஸ்ரீமான் சுத்தானந்த பாரதியார் என்று நாம் இங்கு துணிந்து கூறுவோம். **இவர் நைஷ்டிக பிரம்மசாரி**யாக இருந்து கொண்டு ஆத்தியாத்ம வாழ்க்கையின் ரகசியங்களைப் பரிசீலனை செய்தும் அனுஷ்டித்தும் வருகிறார். பாரத தேசத்தின் பழைய சரித்திரத்தையும் பிற்காலத்துச் சரித்திரத்தையும் ஆர்வத்தோடு, பக்தியோடு, சிரத்தையோடு ஊன்றிப் படித்திருக்கிறார். தமிழில் அர்ஜ்ஜுன சன்னியாசி, கிருஷ்ண ரகசியம், லக்ஷ்மீ விஜயம், அறவழி, அறநூல் முதலிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இன்னும் வெளியிடாத நூல்கள் பல எழுதி வைத்திருக்கிறார். தமிழ்க் குருகுல வித்தியாலயத்தில் உபாத்தியாயர் வேலை பார்த்துக்கொண்டும்; நமது "பாலபாரதி"க்கு உதவி ஆசிரியர் ஸ்தானத்தை வகித்துக்கொண்டும் இத்தகைய அரிய நூலை அவர் தொடர்ந்தெழுதி வருவதற்கு ஆற்றலும் நேரமும் படைத்திருப்பதற்குக் காரணம் அவரது தேசு நிறைந்த பிரம்மசரியமேயாம். இந்நூல் இன்னும் பூர்த்தியாகவில்லையாயினும், இதில் ௯000 செய்யுள்கள் முற்றுப்பெற்று விட்டன.



நூல் அச்சாகு முன்னரே தமிழ் நாட்டு அறிஞர் பலரும் அதிற் பொதிந்துள்ள அமுதத்தைச் சுவை பார்க்க வேண்டுமென்று "பாலபாரதி"யில் சிற்சில பகுதிகளை அவ்வப்போது வெளியிட விரும்புகிறோம். ப-ர்,பா,பா.]

## பாரத சக்தி

### காப்புகள்

'பாரதத் திரு நாட்டின் பழம்புகழ்'
வீர சக்தி விளம்பிட நீயருள்
ஏரிலங்கருள் இன்ப வளர்த்தரு
வாரி யோடென் மனத்திகழ் வாணியே.

கங்கை வேணியன் றங்கிடு கார் வரை
சங்க மேந்தியுந் தாங்கிடு மெய்யறம்
மங்கலந் திகழ் மாமதி வாண்முகப்
பங்கயக் கண்ணி பாரத தேவியே.

எப் பொருண்மய மிவ்வுல கானதோ
செப்பொணாது மறைகள் திகைப்பதோ
தப் பகப்பற நின்று துரியமாம்
அப்பெரும் ஒளி நெஞ்சம் அணிகுவாம்.

யா தொடங்கினு மார்க்கினுங் கேட்கினும்
நாத வோர் மொழி நாமமே வருந்
தீதறுத் தொளி யின் வழி சேர்த்த தோர்
சோதி மௌன குரு வென்றன் சுத்தனே.

கம்பர் வள்ளுவர் வில்லிக் கவிகள் பால்
இன்பமாகத் தவழ்ந்த இளந் தமிழ்
நம்பு பாத்திறம் நானறி வித்தலும்
அம்பு கால் கங்கை யாமெனற் போலுமே.

தெய்வ காவியஞ் செய்ய வுதவிடும்
மொய்கொள் சோதி முதல்வி பராசக்தி
உய்ய ஈந்த வுதவியு மின்னருள்
பெய்து செய்த தலாற் பெற வல்லதோ.

ஆதலால் தமிழ் மைந்தன் வரைந்த யிவ்
வோதை வோவியம் ஊன் பல வாயினும்
வேத மைந்தமிழ் வித்தகரே பொறும்
பேதை யன்பின் பிதற்றிய சொற்றொடர்.

### சித்திகாண்டம்

—

#### தோற்றச் சருக்கம்

பாரெலா மெது படைத்தளித்
  ததனுளே தங்கு
சீரெலா மெவன் செய் வகக்
  கருணை செய்ததுவோ,
தாரெலாந் தவர் தன் மன
  மவ ரவை தாங்கும்
பாரெலாந் திகழ் பாரத
  சக்திதான் பணிவோம்.

உலகெலா மெவள் ஓமொலி
  யாலுயிர் பெற்றே
இலகுகின்றதோ நிலை பெறும்
  அறத்தினை வளர்க்கும்
அலகில் ஆற்றலும் அருள் தரும்
  அன்னையாய் எங்கும்
இலகு சக்தியின் மலரடி
  எண்ணி வீடடைவாம்.

தூய பங்கய மென் னகந்
  துலங்கிடு சக்தித்
தாயின் இன்னருள் தனில் வளர்
  சாலமா வுயிர்கள்
மேய யிவ்வணி புலகமும்
  மேதகு பரத
தேயம் தோன்றியே திகழுறு
  வகை யினைத் தெரிவாம்.

வானமாதி யைம் பூதங்கள்
  தொகுத்தவை வகுத்தும்,
ஈனலாதி யைந் தொழில் களைச்
  சக்தியா வியற்றி,
மானவர் முதல் எழ் வகைப்
  பேதமும் மகிழ,
ஞான மாச்சுடர் காட்டியே
  நவிலரு மிறைவன்,

ஆக்கும்போ தயனாகவும்,
ஆருலகதனைக்
காக்கும்போ தரியாகவும்,
கடை வெளத்தாலே
நீக்கும்போ தரனாகவும்,
நிலவுமோ ரிறைவன்
போக்கி ஞாலத்தைப் புதுயுகம்
பூத்திட நினைத்தான்.

வையம் யாவையும் கடை வெளம்
விழுங்கிய துடனே
நைய வைம் புவி நீத்தமும்
நிறைந்தது; வுயிர்கள்
வெய்ய ஆழியால் இற்றன,
விரும்பிய முடித்தே,
ஐயன் சக்தியோ டமர்ந்தனன்
அழிவறுவீடு.

சக்தி மெய்த்தவம் ஆழ்ந்தனள்;
தனுவெலாம் உயிராம்
அத்தனுஞ் சமநிலையினில்
அமர்ந்தனன்; அவனுள்
முத்தொழில் செயும் முதல்வரும்
அயர்ந்தனர்; நேமி
சுத்த நெஞ்சப்பால் ஆழியில்
அயனொடுந் துயின்றான்.

பூதவாதிகள் பிரிந்தன;
பொன்றுற வெல்லாம்,
பூதநாயகன் சக்தியுந்
தவத் துயில் புகவே;
வேத மாதிய காணரு
விளம்பரும் பொருளாம்
ஆதிநாயக னொருவனே
யினைத்துட னமர்ந்தான்.

மகிழ்வினுற் படைத் தாண்டுமே
மாற்றுறு மையன்,
உகமும் கற்பமும் ஊழியும்
தந்திடும் உயர்ந்தோன்,
திகழு சக்தியும் அயர்ந்திடச்
செயலிலாதாகச்
சகமும் அற்றுயி ரற்றது
சடுதியிலாங்கு.

## மூலப்ரக்ருதி விழித்தல்

தவக்கனாவினின் றெழுந்தனள்
சக்தியாந் தாயும்
உவந்து தன்றிரு ஆடல்கள்
புரிதரு முலகைக்
கவர்ந்து ஊழியும் விழுங்கிய
கடுமையைக் கருதி
நிவந்து கசனை யூக்கினள்
நிகழ்த்தினள் மாயை.

---

## பராசக்தி உலகைத் தோற்றுவிக்கும் படி வேண்டல்

---

"அளவிலா வுயிர் இயற்பொருள்
அழகு செய் யுலகு,
வளமையோடு யான் ஆடிடும்
மகிழ் பெரும் வையம்,
ஒளியும், ஓசையும், உருவம் ஊ
றுருசியு மொடுங்கி,
யொளிந்த தூழியில்
ஒருவனாய் நின்றிடும் முதலே!

"அளவிட முடியா திரு
ஆடல்கள் புரிந்தே
யுளவிடத்தினில் தங்கியே
யுலகெலாம் நிறைந்தே,
அனக்கர் என்றனுல் உயிர் பெற
அன்னையாக்கினவா!
உளக்கருணையால் உலகுயிர்த்
திட அருள் புரிவாய்.

"முதன்மை யானதோர் சோதியே
முதுபெரு முலகு
சிதைந்து வோருயிர் இலது; நின்
சிதைத்திடும் ஆடல்
அதை நிறுத்தியே தோற்றிட
அணு நிறை பவனும்
விதியை யுந்தியில் அடக்கிய
விண்டுவை எழுப்பாய்"



## இறைவன் மொழிதல்

நயத்தின் அம்மையும் மொழி நா
நாதனும் மொழிவான்
"செயற் கிறைவியே! சக்தி யான்
செய்வதெலாம் உன்
உயர்ந்த காரணத் தால், உல
காதலும் ஒடுங்கல்,
அயர நீ யுல கயர்ந்தது;
விழித்தனை, விழிக்கும்.

பொங்குன் ஆடல்கள் புரிதரப்
புவியுயிர்த்திடவே,
அங்கை யாழொலி வோமென
அகமகிழ் பாவை
எங்கும் ஓமொலி யிசை தா
இசைத்திட நெஞ்சு
தங்கும் நாரணன் விழித்துயிர்த்
தந்தையை யெழுப்பும்"

---

## அம்மையின் இசை

என்றலுந் திருவுளக் களிப்
பெழுந்துயாழ் மீட்டி,
நன்று செய்திடும் நாற்றிசை
பரவிடு நாதம்,
என்றும் எவ்வுல குயிரொடும்
இறைவனோர் கீதம்,
கண்டு பாறைமேல் தேன் நதிக்
கனிவென ஆர்த்தாள்.

---

## விஷ்ணு எழுதல்

என்றன் அம்மையின் எழில்தரு
கின்னர விசையை
உண்டுவந்தெலா அணுக்களும்
ஊக்கமாய்ச் சுழல,
விண்டுவும் மனப் பாற்கடற்
பள்ளியின் விழித்தே,
யண்டர் நாதனை, யம்மையைத்
தொழு தகம் பூத்தான்.

## பிரம்மா எழுதல்

உந்தி யம்புய முகிழ்த்தனன்
விரிஞ்சனும்; உவந்தே
முந்து தேவனைத் தேவியை
முகுந்தனை வணங்கிச்
சிந்தைபூத் தம்மை சிலம்பிடும்
ஓமொலி தேர்ந்தே,
சந்தமாமறை இசைத்தனன்
தருமமும் மகிழ.

---

## உலக சிருட்டி

வேத வோசையால் அணுவெலாம்
விம்மியே சுழல,
ஆதி நாரணன் உயிர்பெற
அவ்வணு நிறைய,
பூதம் யாவையும் அவன்மருங்
கிருந்துமே பொருளாய்ப்
பேதமாயுள வுடல் பல
பெற்றனவாங்கே.

ஓம வோசையி னின்னொளி
பிறந்தது; வுடனே
சோம சூரியர் தாரகை
தோன்றிய; அணுக்கள்
நேமமாய்ச் சுழன்றிறுகின,
நெருங்கின, மென்மேல்;
சேமமாய்ப் பல வுலகம
தாகவே திரிந்த.

பூமியிற் பல மலை, நதி
கானமும், பொலிந்த;
வாம நல்லியல் வனப்புகள்
வகை வகை நிறைந்த
ஏம மாவரை யெழுந்தது
வானிடித் ததன் மேல்
சேமமாம் பாம் பொருளுடன்
தேவியும் அமர்ந்தாள்.

## பராசக்தி சிவனைக் கேட்டல்

கவுரி சங்கரம் பொலிவுற
தேவியுங் களித்துச்
"சுவவு போன்றது, ஞானமாச்
சோதியும் விளங்கக்
குலவு நல்வளங் கலைமறை
கொண்டெழில் பொழிலாய்
உவப்புடன் என்றன் சந்நிதி
யோங்கிட அருளாய்."

---

## பாரத நாடு தோன்றல்

"ஞான பீடமாய், நல் வளம்
பொலிய நம் சந்நி
தானமாக, நீ பாரைசெய்
சாந்தமாம் பொழிலாய்த்
தானமுந் தவந் தவழ்ந்திடு
பாரத நாட்டை
வானவர் மகிழ்ந் தறந்தரும்
வனப்பொடு பாராய்!"

என்றலுந் திரு மகிழ்ந்தனள்,
இலகினள் நாட்டில்;
அன்று மால் "இதன் காவலன்
யான்," என, அயனும்,
"என்றன் ஆக்கிடு திறமை காட்
டுவன்" என ஈசன்
நன்று கூறித் தென்வட மொழி
நல்குவனென்றார்.

## பராசக்தியின் ஓமொலியால் பல சிருட்டியாதல்

என்பராசக்தி யிலங்கிடு
பாரத நாட்டில்
இன்பத் தேவியின் இசைபல
தொழுதியின் குரலாய்
அன்பு பூத்தனள்; பழுத்தெழில்,
அகங்களிப் புறவே,
பின்பு பற்பல வுயிர்வகை
பிறந்திடச் செய்தாள்.

வெள்ள மீன்வர, ஆமையும்,
பன்றியும் வேறு
வள்ளரிக்கவி வகைவகைக்
குலங்களும் வருக,
உள்ளமா மகிழ்வெய்திடத்
தேவியும் உரைப்பாள்
கள்ளவிழ்தரு கருணையின்
முகமலர் கனிந்து,

"தானுவே யுன்றன் குணநிலை
சாலவுங்குறி யெண்
சானுடம்பினிற் றேயருள்,"
என வமை சாற்ற,
மானுடத் திரு வுரு வரன்
அமைத் துயிர் வழங்க,
மானிடத் திருமாலுனே
சிவனுகந் தனனே.

கருமஞான விந்திரியங்கள்
காற்றொடு புலனுங்
காணமோ டிருபத்தினால்
தத்துவங் கண்டு
இருபத்தைந்தனுப் சிவனே
யிருந்திட இறைவன்
இருபத்தாறனாய் ஆகிட
மானுடன் இவர்ந்தான்.

மனுவெனும் முதல் மானிட
னுற அருளாலே
சனித்த மானிட விதிகளும்
ஒழுக்கமுஞ் சால
தனித்தனித்தருமங்களுந்
தழைத்திடப் பூவில்
இனிய மானிடர் ஓங்கிட
இறைவனும் இசைப்பான்:—

"என்னெழில் பெறு மானிடர்
பெருக வுன் மாயை
தன்னை மாதராய் ஆக்குக
தளிரழகுடனே!"
அன்னையுந் திருப்பெண்டிரை
யாசையால் அமைத்தான்;
அன்னித்தானுனே தொல்புவி
[illegible]பெரு கிடத் துணையாய்.



உலகமோகினி யம்மையால்
உலகெலாம் உயிர்க்க,
இலகுமின்னிய பாதனை
இறைவனுய் அனுப்ப,
அலகிலாதொரு ஆண்மையுங்
கருணையு மளித்தே
நிலவு சீர்த்தியோ டாண்டவன்
நேமியோ டுலகை,

சிறந்தமாலுயிர் காத்திட,
அரன் சிருட்டிக்க,
நிறைந்த பூவுலகெங்குமே
நிவந்துயிர் தழைக்க,
செறிந்து நல்வளம் உணவுடை
வினை சிறந்தோங்க,
அறங்கள் வாழ்ந்திடப் பாதனும்
அரும்புவி யாண்டான்.

ஒலிய மாயையை யூட்டியே
மனத்தி லுண்டாகும்
அலவில் காமம தாகிய
பல்குணம் அமைய,
உலகமெய்ப் பொருளுடனுடல்
வேறுபட் டுருளக்
கலக வேற்றுமை வினைகளுங்
காரண மலிந்த.

அறிவருள், மறம், அன்பொடு
ஊக்கமும், அடக்கம்,
பொறையுறுதி யோர்ப் பிரக்கமும்
எளிமையும் புகழும்
மறவி துன்பமுங் கூரமும்
மையல் வெறுப் பிகலும்
மிறைகள் ஈரொன்பதோடுமே
மேவின குணத்தில்,

---

# ஆலோகன அவலோகனம்

## 'பாலபாரதி'

நமது நாட்டிலும் பிறநாடுகளிலும் அவ்வம் மாதங்களில் நடக்கும் சம்பவங்களுள் முக்கியமானவற்றைப் பற்றி இந்தத் தலைப்பின் கீழ் எழுதி வர விருக்கிறோம்.

நாம் 'பாலபாரதி' ஆயத்தப் படுத்த ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிற சமயத்தில் வருண பகவான் கோபாவேசத்துடன் எழுந்து தமிழ் நாட்டிலும் மலையாள நாட்டிலும் பிரளயத்தை உண்டாக்கித் துவம்சம் செய்துவிட்டான். நாம் ஏற்கெனவே பிரசுரப்படுத்தியிருந்த காலத்தில் 'பாலபாரதி' யைத் துவக்க முடியாமற்போனதற்கு இந்த உலகப் பிரளயமே தான் காரணம். அச்சிடுவதற்கு வேண்டிய சகல கருவிகளும் சென்னையிலிருந்தே வரவேண்டி யிருந்ததால் காவேரி வெள்ளம் சென்னை வழியை உடைத்துவிட்டதும் எமது அச்சுக் கூடம் வருவாய் அடைபட்ட ஊருணி போலாகிவிட்டது. வெள்ளம் வடிந்து வழி நேரான பிறகுதான் குருகுல அச்சுக் கூடத்திற்கு உயிர் வந்து 'பாலபாரதி'யை யாக்கும்படியான ஆற்றல் அதற்கு வந்தது.

## வெள்ளச் சேதம்

ஆனால் காவேரி தீரவாசிகளின் கஷ்டத்தையும் கோனாதேசவாசிகளின் கஷ்டத்தையும் பார்க்கையில் எமக்குச் சில அசௌகரியங்கள் நேர்ந்தன என்று எழுதக் கூடக் கை கூசுகிறது. வெள்ளத்தால் சேதமான சில பாகங்களை நாமே கண்ணால் பார்க்க நேர்ந்தது. கல் போல இருந்த ராஜமார்க்கங்களெல்லாம் அங்கங்கே ஒரு ஆள் ஆழத்துக்குத் துருவப்பட்டுப் போயிருந்தன. திரிச்சியிலிருந்து ஸ்ரீரங்கம் போகிற ரஸ்தாவில் மண்டபங்கள் இருக்கிறஇடங்களெல்லாம் காவேரியம்மை பிரவேசித்துப் பெருங்குழிகள் வெட்டிப் போட்டுவைத்துவிட்டாள். கொள்ளிடத்தின்மீது கட்டப்பட்டிருந்த அழகிய பாலம் இஸ்பேட்டுச் சீட்டுகளினால் கட்டிய வீடு விழுவதைப் போல விழுந்துவிட்டது. மேட்டுப் பாளையத்திலிருந்து சீர்காழி வரையிலும், கள்ளிக்கோட்டையிலிருந்து கன்னியாகுமாரி வரையிலும் சில நாட்களுக்கு நதிகள் கடலாகப் பெருகிவிட்டன.

காட்சிகளிற் சிலவற்றை இக் குறிப்புகளுக் கிடையில் அச்சிட்டிருக்கிறோம். இப் படக் கட்டைகளை எமக்கு உதவிய 'ஸ்வராஜ்ஜியா' பத்திரிகைக்கு எமது நன்றியைச் செலுத்துகிறோம். வெள்ளத்தினால் நேர்ந்த பொருட் சேதத்தை விட அதனாலும் அதன் பின் னணியில் வந்த சங்காத நோய்களாலும் ஏற்பட்ட உயிர்ச் சேதம் மிகவும் கொடுமையானதாக இருக்கிறது. எத்தனை குடும்பங்கள் அடியோடு அற்றுப் போயினவோ



இருப்புப் பாதை உடைப்பு, சீர்காழி.

எத்தனை குழந்தைகள் தாய் தந்தையரை இழந்து தவி யாய்த் தவிக்கின்றனவோ! இத் தகைய பயங்கரமான கஷ்டத்தை நிவர்த்தி செய்வதில் அங்கங்கேயுள்ள உத்தியோகஸ்தரும் தேச பக்தர்களும் சாத்தியப்பட்ட அளவிற்கு ஒன்று சேர்ந்து உழைப்பது சிறிது சந்தோஷத்தைத் தருகிறது. ஆனால் அநாதையாகப் போய்விட்ட குழந்தைகளை ரக்ஷிக்க அவ் வக் குழந்தைகளைச் சேர்ந்த வகுப் பினர் முன் வந்து உழைப்பதாகத் தெரியவில்லை.

துறந்தார்க்கும் துவ் வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல் வாழ்வான் என்பான் துணை

என்பதை அங்கங்கே யுள்ள கிரகஸ்தர் நினைத்துப் பார்த்து அநாதைக் குழந்தைகளை எடுத்து வளர்க்க முற்படுவர் என நம்புகிறோம். சோமாதேவி பாத்து வாஜ ஆசிரமம் தனக்குச் சக்தி உள்ள அளவுக்கு இந்த வெள்ளத்தில் அநாதைகளாகிவிட்ட குழந்தைகளை வளர்ப்பதற்குச் சித்தமாக இருக்கிறது என்று அதன் காரியஸ்தர் நமக்குத் தெரிவிக்கிறார்.

### அசிரத்தை

சென்ற நூறு வருஷங்களில் தமிழ் நாட்டில் வெள் ளத்தினால் இவ்வளவு சேதம் ஏற்பட்டதில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படிக் கிருந்தும் பொருளாளி



கள் மற்றோர் படுங் கஷ்டத்தை நிவர்த்தி செய்யச் சிரத் தையோடு முன் வரவில்லை என்று காண மனம் வருந்து கிறது. கஷ்ட நிவாரண நிதிக்கு ஏதோ பொருள் சேர்ந்து வருகிறது என்பது வாஸ்தவம். ஆனால் நிதிக்கு உதவுகிறவர்கள் எவ்வளவு தூரத்துக்குச் சர்வத்தையும் இழந்திருக்கிற ஜனங்களுக்கு இரங்குகிறார்கள் என்பது ஒரு பெரும் பிரசினையாக இருக்கிறது. இவ் வேழை



கொள்ளிடம் ஆவி ரத நிலயம்.

கள் விஷயத்தில் உண்மையான அனுதாபம் காட்டுகிற வர்கள் இக் காலத்தில் உதவி நிதிகளுக்கு ஏதோ ரூபாய் கொடுத்துவிட்டு, சபைகளுக்கு (கிளப்புகள் என்று சொல்லாததற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள் வோம்) சென்று பந்துவிளையாட்டு, சீட்டுவிளையாட்டு முதலியவைகளில் யதோக்தமாக இறங்கமாட்டார்கள். மற்று, எல்லாவற்றையும் கட்டி வைத்துவிட்டு, சேதம் நடந்த இடங்களுக்கு வீடுவீடாய்ச் சென்று ஜனங்கள் துன்பத்தை நேருக்கு நேராய் நின்று துடைக்கப் பிரயத்தனப்படுவார்கள். நாதர்களை இழந்த ஸ்திரீகளுக்குச் சகோதரனைப் போலவும், குழந்தைகளுக்குத் தகப்பனைப் போலவும் தாயைப் போலவும் பரிந்து கொண்டு உதவி செய்வார்கள். அவர்களைக் கண்டதும் கஷ்டப்படும் அநாதைகளெல்லாம் தாயைக் கண்ட கன்றுகளைப் போல் ஆறுதலை யடைந்து மனந் தேறு வார்கள். அத் தகைய புண்ணிய சீலர்கள் எங்கே? எங்காவது சில இடங்களிலேனும் இருக்கிறார்கள் என்று அறியப்பெரிதும் ஆவற் பட்டுளோம்.

### உலகப் பிரளயம்

நம் தமிழ் நாட்டில் மாத்திரமில்லை வெள்ளச் சேதங்கள். வித்து நதியும் கங்கையும் கரை புரண்டோடிச் சென்ற இரண்டு மாத காலமாக ஏராளமான நஷ்டங்களை உண்டாக்கி வருகின்றன. எங்கு பார்த்தாலும்

ஜனங்கள் தவிக்கிறார்கள். இது மாத்திரமா? சீனாவில் யாங்த்ஸிகியாங் பெருகியதில் ஜனச் சேத மாத்திரம் ஐம்பதினாயிரமாம். பொருட் சேதம் இந்தத் தொகையின் பரிமாணத்துக்குச் சரியாகத்தான் இருக்கும். ருஷியாவில் வெள்ள மேலீட்டினால் யந்திர சாலைகளுக்கு மாத்திரம் ஒரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாம். பிறகுதான் சாமானிய ஜனங்களுக்கும் அவர்கள் பொருள்களுக்கும் எத்தனை நஷ்டமென்று தெரியும். ஆனால் அகாதமாயிருக்கும் என்பதில் தடையில்லை. இந்த உலகப் பிரளயத்துக்கு வானத்தில் பல்லாயிரங் கோடி மைல்களுக்கப்பாலிருந்து நம் சூரிய மண்டலத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிற ஓர் தூமகேதுவே காரணம் என்று ஜோதிஷ தந்திரக்ஞர் கூறுகிறார்கள். ஆனால் இவ் வெள்ளங்களால் மனிதஜாதிக்கு நேரும் கஷ்டங்களுக்கு மனிதனேதான் காரணம். இருப்புப் பாதைத் தண்டவாளங்களைக் கட்டுவதற்கான அணைகளைப் பிரவாக ஜலங்கள் வடிகிற வழிகளில் கட்டியதால்தான் இத்தனை வெள்ள நஷ்டங்கள் ஏற்படுகின்றன. முதலாளிகளும் அவர்களால் நடைபெறும் அரசாங்கங்களும் மனிதருடைய உயிரும் ஜீவனோபாயமும் தங்களுடைய வட்டியையும் லாபங்களையும் விட உயர்ந்தவை என்று என்றுதான் கருதக் கற்றுக்கொள்ளுவார்களோ அறியோம்.

## சட்ட சபையும் லீ அறிக்கையும்

**ஸ்வராஜ்ஜியக் கக்ஷியினர் தாங்கள் வாக்காளர்களிடம்** செய்த வாக்குறுதியைத் தழுவியே சட்ட சபைகளில் நடந்து வருவதைக் கண்ணுறும்போது மகிழ் வெய்துகிறோம். அவர்கள் சட்ட சபைகளில் செய்துவரும் கிளர்ச்சியானது ஸ்வராஜ்ஜியப் போருக்கு எவ்வளவு துணையாக நிற்குமென்பதைக் குறித்துத் தற்பொழுது நாம் விவரிக்கப் புகவில்லை. ஆயினும் அவர்கள் இந்தியா சட்ட சபையில் பெற்றுவரும் வெற்றிகளிலிருந்து தற்கால அரசியல் முறையில் ஜனங்களுக்கு உள்ள அருவருப்பை நிஷ்கரிஷித்துக்கொள்ள இயலும். பொதுவாக அதிகார வர்க்கத்தினர் தாம் கொண்டுவரும் பிரேரணைகளில் எல்லாவற்றிலுமே இந்த முறை கூடிய சட்ட சபைக் கூட்டத்தில் தோல்வியுற்று வந்திருக்கிறார்கள். இதற்கு ஸ்வராஜ்ஜியக் கக்ஷியாருக்குத் துணையாக உத்தியோகப் பற்றில்லாத மற்ற அங்கத்தினர்களாகிய தேசீய கக்ஷியினர் நின்றதும் பொருத்தந்தக்கதே.

இந்திய சட்டசபை இம்முறை கூடுவதற்கு முன்னதாகவே அதிகார வர்க்க கோஷ்டிகளில் ஒருவித மனக் கலக்கமும் பீதியும் ஏற்பட்டிருந்ததென்றே கூறல் வேண்டும். ஸ்வராஜ்ஜியக் கக்ஷியினரும் தேசீய கக்ஷியினர் என்று கூறப்படுவோரும் ஒரு முகப்பட்டு, எவ்வாறு தாங்கள் நடந்துகொள்ள வேண்டுமெனத் தீர்மானஞ் செய்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் அரசாங்கத்தார் தங்களுடைய வர்க்கத்திற்கு லீ பிரபு வகையரா செய்துள்ள சிபார்சுகளின்படி, தற்போழுதுள்ள சௌகரியங்களுடன் இன்னும் ஏராளமான வசதியங்களும் கொடுத்தல் வேண்டுமென்ற நோக்கத்தை நிறைவேற்றுவதற்கேற்ற தீர்மானங்களைச் செய்து முடித்துக் கொள்ள வேண்டுமென இருந்தனர். லீ கூட்டத்தாரை நியமனஞ் செய்வதையே இந்திய அங்கத்தினர் எதிர்த்து நின்றதும், அப் பஞ்சாயத்து இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து மூடுமந்திரம் போல் விசாரணை செய்வதற்கான செலவுகளை இந்திய அரசாங்கம் கொடுக்கக் கூடாது என்று தேசிய கக்ஷியினர் கூறியதும் நேயர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் ஞாபகம் இருக்குமென்பதில் ஐயமில்லை. அவர்களால் மறுக்கப்பட்ட ஓர் பஞ்சாயத்தார் செய்த சிபார்சுகளை எங்ஙனம் சுயமரியாதையுள்ளவர்கள் அங்கீகரிக்கக் கூடும்? மேலும் இந்திய ஜன சமூகத்தில் தேசீய உணர்ச்சி ஓர் சிறிதாகிலும் உள்ள எவ்வகுப்பினரும் இந்த லீ திட்டங்களுக்கு மாறாக விரோதமாயிருந்திருப்பதையும் கவனித்தல் வேண்டும். இத்தகைய காரணங்களினால் அரசாங்கத்தாருக்குத் தங்களுடைய எண்ணங்களை இந்திய சட்டசபையில் நிறைவேற்றிக் கொள்ளுதல் இயலாதென்ற அச்சம் ஆரம்ப முதல் உண்டு. அதற்கேற்ப, பண்டித மோதிலால் நேரு தேசியகக்ஷியினரின் சார்பாக லீ வர்க்கத்தாரின் சிபாரிசுகளை முற்றிலும் நிராகரித்துத் தள்ளி [illegible] ஓர் தீர்மானமும் கொண்டுவந்தார். எனினும் அரசாங்கத்தாரின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு ஸர் அலெக்ஸாண்டர் மட்டிமான் ஒரு திருத்தம் கொண்டுவரப் பின்வாங்கவில்லை. இதற்குத் தயாராகவே அங்கத்தினர் யாரும் சென்றிருந்தனர். அதிகார வர்க்கத்தின் எண்ணங்கள் நிறைவேறாமல் தள்ளப்பட்டுத் தேசிய கக்ஷியின் திருத்தமே நிறைவேறிவிட்டது.



ஆனால் அதிகாரவர்க்கத்தினரின் விருப்பப்படி ஆடுகிறதற்கு ராஜாங்க சபை இருக்கிறதன்றோ? அதில் லீ துரையின் சிபார்சுகள் அனைத்தும் கொண்டுவந்தவை கொண்டு வந்தவாறே நிறைவேறிவிட்டன. இந்த நிலைமையில் அதிகாரவர்க்கம் என்ன தந்திரங்களைக் கையாடப் போகிறது என்று தேசம் முழுவதும் உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

## மகாத்மா காந்தி

உலகத்தில் சாந்தத்தையும் அன்பையும் நிலைநாட்ட எழுந்தருளியிருக்கும் எம் அடிகள் இருபத்தொரு நாள் உண்ணாவிரதம் இருந்து சென்ற மாதம் ௮௨ பாரணைசெய்தார். அவர்எடுத்தகாரியத்தை நிறைவேற்றும் ஆற்றல் படைத்தவரேயாயினும் தற்பொழுதுதான் நோய் வாயினின்று தப்பிய அவரது துர்பலமான சரீரம் இவ் விரதத்தை முடிக்கும் வரையில் தாங்குமோ என்கிற ஐயம் பாரதநாட்டு மக்கள் அனைவருக்கும் இருந்தது. மனிதஜாதிக்கே திலகமாக விளங்கும் இவரது உடலுக்கு அபூதபூர்வமான இக் கடுந் தவத்தினால் ஏதேனும் ஹானி நேர்ந்துவிட்டால் என்ன ஆகிவிடுமோ என்று அறிவாளிகளெல்லாம் மகாவிசாரப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் அறத்தினுக் கழிவுமுண்டோ?

> **தேவரும் பிழைத்திலர்! தெய்வ வேதியர்**
> எவரும் பிழைத்திலர்! அறமும் ஈறு இன்று, ஆல்!
> யாவது இங்கு இனிச் செயல் அரிது? எம் பிராற்கு
> ஆவ என் அடிமையும் பிழைத்து இன்றும் அன்றோ?

என்று சீதா பிராட்டியின் தவத்தைப் பார்த்து உருக்கத்தோடும் மன உற்சாகத்தோடும் ஆஞ்சனேயப்பெருமான் சொல்லியதைப் போலப் பாரத தேச மக்கள் அனைவரும் காந்தியடிகளின் தவம் பூர்த்தி அடைந்ததைக் கண்டு பேரானந்தத்தோடு கூறத் துவக்கிவிட்டார்கள்.

இத் தவத்தின் கடுமையை நாம் சாக்ஷாத்கரித்தல் கடினம். ஐம்பத்தேழு அசனம் நோற்ற சத்திராந்தியும், புரீன்டன், டியூவி முதலிய பழம் புண்ணாளி வைத்திய தத்வக்ஞர்களும், தேசபக்த சிரோமணியும் மகா தியாகியுமான மக்ஸ்வீனியும் ௯௦, ௭௦ நாட்கள் வரையில் உபவாசம் இருத்தல் சாத்தியமென்று நிரூபித்திருப்பதிலிருந்து மகாத்மாவின் உபவாசத்தின் கடுமையை நாம் சரிவர உணராது இது என்ன அவ்வளவு பெரிய காரியமா என்று அவமதித்துவிடுதல் எளிது. அவ்வித அலக்ஷியதை தோன்றும்பொழுது மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல நாம் பட்டினி இருந்து பார்த்தோமானால் அப்பொழுது மகாத்மா புரிந்த தவம் இத்துணை கஷ்டமானது என்று நமக்கு வியக்தமாகத் தெரியும்.

துருவன், விசுவாமித்திரன் முதலிய பெரியோர் தவம் செய்தபோது அவர்களுடைய தபோவேகம் தாங்க மாட்டாமல் தேவாதி தேவர்களெல்லாம் வாந்தா முன் வந்தார்கள் என்று வருகிற கூற்றைப் பழங்கதை என அவமதித்து வந்திருக்கிறோம். ஆனால் மகாத்மாவின் தவத்தைக் கண்டு உலகிலுள்ள பெரியோர்களெல்லாம் தவி தவித்ததைப் பார்க்கையில் அப் புராண கூற்றுகள் ஓர்ஆழ்ந்த சத்தியத்தையே வற்புறுத்துகின்றன என்று நாஸ்திகரும் ஒப்புக்கொள்வார்கள். இவருடைய பட்டினி பிளான்வ்ஷ வாத்ஸன்என்னும் மாதை உருக்கியிருக்கிறது. ரோமான் ரோல்லானுடைய இருதயத்தைக் குலுக்கியிருக்கிறது. இச் செய்தியைக் கேட்டதும் சாதுஹோம்ஸ் உள்ளத்தில் எழுந்திருக்கக்கூடிய உணர்ச்சிகளை யாரே சொல்லவல்லார்? ஸ்ரீமான்கள் மதன மோஹன மாளவியாவும், அபுல் கலாம் அஜாதும், மோதிலால் நேருவும், ராஜகோபாலாசாரியாரும், அ. ரங்கசுவாமி ஐயங்காரும், லாலா லஜபதி ராயும், அக்கினிப்பிரவேசம் செய்வதற்காகத் தீயை வலம் வந்த பரதனைத் தடுக்கக் கோஸலா தேவி ஓடி வந்ததைப் போல தில்லிக்குப் பறந்தோடிச் சென்றார்கள். ஸ்ரீமான் சே. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் தில்லிக்குப் போக முடியாததால்தான் போகவில்லை. அவருடைய மதுரைப் பிரசங்கத்தைப் படித்தவர்கள் மகாத்மாவின் தவம் அவரது மனத்தை எவ்வாறு உருக்கிவிட்டிருக்கிறது என்று கண்டறிந்து கொள்ளுவார்கள். வடநாட்டுப் பத்திரிகைகளெல்லாம் பரஸ்பர குரோதம் உண்டாக்குகிற வியாசங்களை எழுதுவதைஉடனே நிறுத்திவிட்டன. நாட்டில் ஓர் சாந்த உணர்ச்சி பரவ ஆரம்பித்துவிட்டது. ஒற்றுமைச் சபை கூடிற்று. அக்கூட்டத்தில் கூடியிருந்த ஹிந்து முஸ்லீம் தலைவர் ஐந்து நாட்கள் ஆழமாக யோசனை செய்து ஜாதி ஒற்றுமைக்கு இன்றியமையாத சில தீர்மானங்கள் செய்துவிட்டு அத் தீர்மானங்களைத் தங்கள் தங்கள் பிராந்தியங்களில் நிறைவேற்ற வேண்டும் என்கிற பூர்ண உறுதியுடன் புறப்பட்டு வந்திருக்கிறார்கள்.

இத் தீர்மானங்களை ஹிந்துக்களும் முஸ்லீம்களும் திரிகரணசுத்தியாக நிறைவேற்றப் புகுந்தால், நமது ஜாதியாகிற தேர்வடத்தை முறுக்குவதற்காகக் கடவுள் ஏற்படுத்தியிருக்கும் பல பிரிகளும் நன்றாக முறுங்கி மகாவன்மை பொருந்திய வடமாகி, பல்வேறு சமயங்களுக்கும் ஏகநாயகனாக விளங்கும் ஜகதீசுவரன், தற்பொழுது நிலை குலைந்து போயிருந்தாலும், இனி பவனி வரும்படி செய்ய இருக்கிற தர்மமாகிற தேரைலாகவமாக இழுத்துச் செல்லும் ஆற்றலைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை. அப்பொழுதுதான் மகாத்மா காந்தி இருந்த கடுந் தவம் பயனுடைத்தாகும்.

## ஸ்வர்க்கவாசி
## த. வே. கோபாலசாமி முதலியார்

சென்ற மாதம் கஉ௳ த. வெ. கோபாலசாமி முதலியார் பரமபதம் அடைந்தார். தமிழர்களுக்குள் ஜாதிச் சண்டைகளைத் தடுக்க முயன்ற பெரியார்களில் இவர் ஒருவர். தேச சபையினிடத்து இவருக்கிருந்த அபிமானம் மிகவும் போற்றத் தக்கது. இவர் இறந்ததால் தமிழ் நாடு பெரு நஷ்ட மடைந்துவிட்டது. இவருடைய குடும்பத்துக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

## பெஸன்டம்மை

இவ் வம்மை பிறந்த நாள் ஸௌரமான கணிதப்படி சென்றமீ கஅ௳ விழுந்தது. இவருக்கு அந் நாளில் அஎ ஆண்டுகள் பூர்த்தியாயின. இந்த அஎ-வருஷங்களில் இவர் சென்ற ஐம்பது வருஷங்களாகப் பொது நலத்துக்காகவே உழைத்துவந்திருக்கின்றனர். பொது ஊழியத்தில் தாம் இறங்கிய அர்த்தசதாப்தியை இவர் சென்ற மாதத்தில் கொண்டாடினர். இவருடைய அபிப்பிராயங்களில் சிலவற்றை நாம் ஏற்றுக்கொள்ளாவிடினும் இவருடைய அபாரமான கர்மயோகத்தை நாம் பெரிதும் போற்றுகிறோம். மனித ஜாதியின் மீது, முக்கியமாகப் பாத பூமியின் மீது, இவ் அம்மைக்குள்ள அன்பைப் பொதுஜன ஊழியர்களனைவரும் உதாரணமாகக் கொண்டால் இப் பூவுலகம் இன்றைக்கே ஸ்வர்க்க துல்லியமாகும் என்பதில் சந்தேகமில்லை. தற்பொழுது இவ் அம்மை ஒரு நாளைக்கு அரை மணிக்குக் குறையாமல் தூற்க இசைந்திருப்பதினின்று இந்த வயதிலும் தன் நிச்சயங்களை, நன்மை நோக்கி, மாற்றிக்கொள்ளச் சித்தமாக இருக்கிறார் என்று எல்லோரும் அறிந்துகொள்ளலாம். மனித வர்க்கத்திற்கு ஊழியம் செய்ய இன்னும் பல வருஷங்கள் இவருக்கு உதவ வேண்டும் என்று பராசக்தியை வேண்டுவோம்.

## நமது படம்

நமது அட்டையில் அச்சிட்டிருக்கும் படம் சென்னை 'கஸ்தான் ஸ்துடியோ' என்று பேர் வைத்துக்கொண்டிருக்கும் கீழ் நாட்டுச் சித்திராலயத்தில் எழுதப்பட்டது.

## ஸ்வர்க்கவாசி
## ஜனுப் கரிம்பாய் இப்ராகிம்

பம்பாயில் தொலைவியாபாரத்தினால் ஏராளமான பொருள் சேர்த்த இவர் விஷக்காய்ச்சலால் சென்ற புரட்டாசி கக-இல் இறந்துவிட்டார். முகம்மதியரின் கல்வி அபிவிருத்திக்காக இவர் பத்து லக்ஷரூபாய் தர்ம சாசனம் செய்து வைத்திருக்கிறார் என்று தெரிகிறது. கல்வி அபிவிருத்திக்காக ஸ்திரமான ஏற்பாடுகள் செய்து வைக்கும் தனிகரே உண்மையில் இசைபெற வாழ்கிறவர்களாவர். இவருடைய பெயர் இந்தியர்களுடைய இருதயத்தில் நித்திய வாசம் புரிந்திடுக. இவருடைய ஆத்மா பரமானந்தப் பிராப்தியை அடைக.

## ஸ்ரீமான் சின்னையா பிள்ளை

மாம்பலம் ஸ்ரீமான் சின்னையா பிள்ளை அவர்களைத் தமிழ் உலகம் நன்கறியும். இவர் ஆங்கில நாட்டில் குடிகளுக்காகப் போர்புரிந்த ஹாம்ப்தென் போன்றவர். பொதுவாய்த் தனவான்களா யிருப்பவர்கள் சிறை புக இணங்குதல் அபூர்வம்: ஸ்ரீமான் சின்னையா பிள்ளை செல்வத்தில் பிறந்து, செல்வத்தில் வளர்ந்தவ ராயினும், தம்மீது தொடரப்பட்ட ஜாமீன் வழக்கில் ஜாமீன் கொடுக்க மறுத்ததின்மேல் இப்பொழுது ச-மாதம் வெறுங்காவல் தண்டனை பெற்றிருக்கிறார். பாரத நாட்டிற்கு ஜன உரிமையைச் சம்பாதித்துக் கொடுக்க நடக்கும் இந்தச் சாத்வீகப் போரில் சேர விரும்புகிறவர்கள் இவரை ஓர் பெரிய வழிகாட்டியாகக் கொள்ளல் வேண்டும். இவருக்கும் மனைவி மக்கள் இல்லாமலில்லை. இவருக்கு ஓர் பாலிய மனைவியும் எட்டு வயதுள்ள ஒரு புத்திரனும் இருக்கிறார்கள். இருந்தும், ஜன உரிமை அபாயத்திலிருக்கும்போது மக்கள் மனைவிகளின் பிரிவையும் பொருட் படுத்தாமல், பொருள் நஷ்டங்களையும் லக்ஷியம் செய்யாமல், ஒரு எழுத்தினால் நீக்கிக்கொள்ளக் கூடிய சிறைத் தண்டனையை இவர் விரும்பி யேற்றுக் கொண்டிருக்கிறார். வாழி எம் சின்னையா!

## பிழை திருத்தம்

(நிஎ-ம் பக்கம் இடது பத்தியிலுள்ள உ-வது கவியின் உ-வது வரியில் 'அரன்' என்பதை 'அயன்' எனப் படித்துக்கொள்க.

# புஸ்தக விமரிசனம்

('மகாத்மா காந்தி:' ரோமான் ரோலான் என்னும் பிரெஞ்சு ஆசிரியன் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு. பிரசுராலை: ஸ. கணேசன், உக, பைகிராப்ட் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை. விலை ரூ. க.)

நாமத்தின் தொனி பிறந்த வரையில் இவ்வளவு பெருந் தொகையான ஜனசமூகத்தினரின் எண்ணங்கள் யாவற்றையும் கவரும்படியான தன்மை மகாத்மா காந்தியடிகளின் திரு நாமத்திற்கு வாய்த்திருப்பது போல், வேறெப் பெரியாருடைய பெயருக்கும் இதுவரையில் வாய்க்கவில்லை என்பது எமது துணிபு. தமது சொந்த அபிப்பிராயங்களையும், ஆசைகளையும், உணர்ச்சிகளையும் முற்றும் துறந்து, பெரிய பெரிய கற்றோரும் ஞானவான்களும், பூரண நம்பிக்கையுடனும் கவலையுடனும் சிரத்தையுடனும் ஆன்ம வளர்ச்சி முதிர்ந்த இப் பெரியாரையே தமக்கோர் வழி காட்டியாயும், இதம் தருவோனாயும் நோக்கி இன்று நிற்பது போல், இதற்கு முன் ஒருவனையும் எக்காலத்தும் எதிர்பார்த்து இவ்வுலகம் நின்றதில்லை. அறநெறி தவறாது ஆத்ம ஞான முறைகளைக் கடைப்பிடித்து ஒழுகி நிற்கும் அறிவுடையோரெல்லாம், சென்ற மூன்று ஆண்டுகளாகத் தமது வாழ்க்கையை மகாத்மாவின் ஒழுக்கங்களைப் பின்பற்றி நடத்துவதற்கே ஓயாது முயன்று வருகின்றனர். ஆகவே, இத் தகைய மகாபுருஷனை ஒவ்வோர் அம்சத்திலும் உணர்ந்தறியப் பெரிய நூலாசிரியர்கள் முன் வருவது சகஜம். இப்பேர்ப்பட்ட ஆசிரியர்களுள் பிரெஞ்சுதேசத்து ரிஷியாகிய கவி சிரேஷ்டர் ரொமான் ரோல்லான் என்பவர் முதன்மை பெற்று விளங்குகிறார். இவர் எழுதிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்துப் பிரசுரித்திருப்பவர்களை ஆதரிக்கத் தமிழ் உலகம் கடமைப் பட்டிருக்கிறது.

('கம்பநாடர்:' மாதப் பத்திரிகை. க-வது முதல் ௬-வது பகுதிவரை. பிரசுராலை: மோ. வெ. கோவிந்தராஜ ஐயங்கார், காரைக்குடி.)

கம்பனுடைய மகா மோகனமான ராமாயணத்தைத் தமிழர் அனைவரும் எளிதில் கற்றறியவேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பெற்ற இப் பத்திரிகையில் ௬-பகுதிகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் நான்கு உட்பிரிவுகள் காணப்படுகின்றன. அவையாவன: க. கம்ப ராமாயண ஆராய்ச்சி, உ. கம்பரும் வான்மீகியும், ௩. கம்ப ராமாயணச் செய்யுள், ச. கம்ப ராமாயண வசனம். ஆராய்ச்சி புதிய போக்கில் செய்யப்பட்டு வருகிறதால் இம் மாலிகை சம்ஸ்கிருதமும் ஆங்கிலமும் தெரியாத பண்டிதருக்கு இன்றியமையாத உதவியாகவும், சாமானிய ஜனங்களுக்குக் கம்ப ராமாயணம் என்னும் பாற்கடலைக் கடைந்து அமிருதத்தைத் தரும் வாழி மந்தரப் பெருங்கிரியாகவும் விளங்காநின்றது. கற்றோரும் மற்றோரும் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து தமிழ்ப் பாஷைக்கு இன்றியமையாததாயிருக்கிற இம் முயற்சி இனிது நிறைவேறும்படி செய்வது கடமையாகும்.

சந்தா வருஷத்திற்கு ரூபாய் ஐந்துதான். ஐந்து வருஷங்களில் இம் முயற்சி நிறைவேறும் என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

('சிந்தாமணி:' ஒரு மாதப் பத்திரிகை. க-வது உ-வது சஞ்சிகைகள்: சல்லிவன் தோட்டத் தெரு, மைலாப்பூர்.)

இஃது தென்னிந்தியாவில் நமது பெண்மணிகளின் முன்னேற்றத்திற்காக உழைத்துவரும் சகோதரி வை. பாலம்மாள் அவர்களால் பிரசுரிக்கப்படும் ஒரு மாதத் தமிழ்ப் பத்திரிகை. ஸ்திரீகள் நமது தேசிய விஷயங்களில் அதிகமாகச் சிரத்தை பாராட்டவேண்டுமென்ற நோக்கத்துடனும், பொதுவாக அவர்கள் பல் வகையிலும் மேம்பாடடைய வேண்டுமென்ற கருத்துடனும் பத்திராதிபர் இப்பத்திரிகையை நடத்தஉத்தேசித்திருக்கிறார். அவ்வுத்தேசம் பூரண சித்தியடையும்படி தமிழபிமானிகளும் பெண்கள் முன்னேற்றத்தை நாடுவோரும் பத்திரிகையை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம். பத்திரிகை சித்திரப் படங்களுடன் சோர்த்தியாக அச்சிடப்பட்டு வெளியாகியிருக்கிறது. வருஷச் சந்தா ரூ. ௩.

# Reviews of Books

*[Telugu, Malayalam, Samskrit, and Hindi books will be reviewed in these columns. The reviews will be written in English and, if required, in Tamil also. When publishers desire their books to be reviewed in two languages, they should send us two copies of their books.* ED. B. B.]

———O———

(MAHATMA GANDHI: By Romain Roland. Translated from the French by L.V.Ramaswamy Aiyar. Publisher S. Ganesan, Triplicane, Price Re 1-8-0.)

Never within the memory of man has any personality drawn to itself during the period of its terrestrial existence the thoughts of such a large mass of humanity as has been drawn by the personality of MAHATMA GANDHI to-day. Never has any man been looked to for guidance and consolation with the anxiety and trust and self-surrender with which some of the most intellectual men of this generation belonging to every country and nationality in the world are looking to this spiritual giant. The moral and spiritual aristocracy of the world has been engaged during the last three years in an incessant endeavour to make its life approach as near as possible to the spiritual content of the life of the Mahatma. If no Thomas a Kempis has written yet the Imitation of Mohandas, it is a fact that men of introspection all the world over are endeavouring to shape their conduct and spiritual life on those of the Mahatma. It is natural therefore that such a personality should be attempted to be studied in every one of its phases by some of the greatest leaders of thought in the world. Among these studies the first place is deservedly held by that made by Romain Roland, the French man of letters and Rishi The author and publisher ought to be congratulated for having given to the English-reading public an excellent translation of this masterly and discriminating study of the world's greatest spiritual force of to-day.

(GANDHI AND NON-VIOLENT RESISTANCE: By Miss Blanche Watson. Publishers: Ganesh & Co., Madras.)

This is a collection in handy form of a large number of articles about MAHATMA GANDHI that have appeared from time to time in American newspapers during the past two or three years. Anybody who wants to realise to himself the vast influence that the life of the Mathama is exercising in the thought-world to-day must go through this most interesting and fascinating book. Among other things the book contains the opinions of such well known writers as J T. Sunderland, Frazier Hunt, Josiah Wedgwood, W. W. Pearson, B.G.Horniman, Sarojini Naidu, and Lajpat Rai. We should also thank the publisher for having added in the appendix MAHATMAJI'S speeches before the court at his trial and the first two sermons of the Rev John Haynes Holmes on the Mahatma.

(INDIA ON TRIAL: Published by the Ahimsa Ashramam, Triplicane, Madras. Price annas 10.)

This volume contains English translations of twenty articles from the pen of MAHATMA GANDHI which appeared in the 'Navajivan.' As we in the south are unable to read the original publication this volume is very useful as the articles collected in it are the intimate revelations of MAHATMAJI'S soul in his own mother-tongue at the moment of his arrest. The volume also contains an article on MAHATMA by Shri. W. E. Johnson and the famous 'GREATEST MAN' sermon of the Rev. HOLMES.

(KAMBAN'S KOSALA: By T. N. Seshachalam Aiyar. Published by R. K. Rajagopalachari & Co, Madras. Price Re 1-4-0.)

We have received a copy of 'Kamban's Kosala' from the author. It is a learned commentary in English on the first four chapters of the Ramayanam in which the great poet describes the kingdom of Kosala. The discrimination with which Kamban chooses his similes in describing the Sharayu, his masterly style in singing our land of plenteous prosperity, his patriotism in describing the city of Ayodhya and the righteous rule of Dasharatha have been elaborately dealt with in the pages of this book. We hope that lovers of Kamban will wlecome this publication.

***0***

160198

# தமிழ்க்குருகுல வித்தியாலயம்,

## பரத்துவாஜ ஆசிரமம், சேரமாதேவி.

தமிழ் மாணவருக்கு லௌகிக கல்வியும், கைத்தொழிலும், வியாபார முறைகளும், ஒழுக்கமும் ஆத்தியாத்ம உணர்ச்சியும் கற்பித்துத் தரவேண்டும் என்ற நோக்கத்துடன் இவ் வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இதில் உயர்ந்த வகுப்புகளிற்கூட கல்வி தமிழ்ப் பாஷையின் மூலமே போதிக்கப் படுகிறது.

தமிழ் நாட்டு வீரம் நிறைந்த சரித்திரமும், பாரத நாட்டின் கம்பீரமான இதிகாஸமும், இவை தவிர உலக சரித்திரங்களும் மாணவர்களுக்கு நன்கு போதிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பாஷையின்மீதும் தமிழ் இலக்கியங்களின் மீதும் மாணவருக்கு அன்பும் ஆர்வமும் பிறக்கும்படியும், தங்கள் உயர்ந்த எண்ணங்களை வெளிப்படுத்தும் ஆற்றல் உண்டாகும்படியும், ஸரஸ்வதி கடாக்ஷம் உள்ளவர்களுக்குக் கவிதா சக்தியும் பிறக்கும்படியும் தமிழ் போதிக்கப் பட்டு வருகிறது.

கணிதம், பூகோளம், இயற்கைப் பாடம், சரீர தத்துவம், பிராணி நூல், ஸ்தாவர முதலிய பௌதிக சாஸ்திரங்கள் மாணவருக்கு அழகாகப் போதிக்கப்பட்டு வருகின்றன.

சம்ஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி முதலிய பாஷைகளும் பிரம்மசாரிகளுக்கு நன்கு கற்பிக்கப்பட்டுவருகின்றன. தாய் தந்தையர் தம் குமாரர் சம்ஸ்கிருதம் படிக்க வேண்டாம் என்று வியக்தமாகத் தெரிவித்தாலொழியச் சம்ஸ்கிருதம் கட்டாய பாஷையாக வைக்கப் பட்டிருக்கிறது.

சுயசலனி (மோட்டார்) அரசனான ஹென்றி போர்டு, நார்த்கிளிப், ரோன்டா பிரபு, மார்கன், ராக்பெல்லர், கார்னெகி முதலிய கோடீசுவர வியாபாரிகளின் சரித்திரங்களையும், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகள் குபேர நாடுகளாகப் போனதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகளையும் போதித்து வைசிய முறைகளில் இறங்க விரும்பும் மாணவருக்கு வியாபார சௌரியமும் பொருள் ஈட்டும் ஆற்றலும் பிறக்கும்படி செய்ய இருக்கிறோம். இவர்களுக்குக் கடிதங்கள் எழுதும் முறை, கையச்சு (டைப்) அடிக்கும் முறை, சுருக்கெழுத்து, கணக்கு வைக்கும் முறை, கணக்குப் பரிசோதனை முதலிய இன்றியமையாத கலைகள் கற்பிக்கப் படும். அச்சடிக்கும் தொழிலும், சித்திரமும், சங்கீதமும், நெசவும், நூற்றலும், தற்போது கற்பிக்கப்பட்டு வருகின்றன. லௌகிக வாழ்க்கையிலும் ஆத்தியாத்ம வாழ்க்கையிலும் சங்கீதம் பெற்று நிற்கும் ஸ்தானத்தின் அருமையை நன்கு உணர்ந்தவர்கள் நாங்கள் தக்க மாணவருக்குச் சங்கீத கலையைப் பயிற்ற முயலும் முயற்சியைப் போற்றுவர் என்பது திண்ணம். வங்காளியரும், தெலுங்கரும், இந்துஸ்தானியரும் சித்திர கலையில் புதிய துறைகளை

ஏற்படுத்திக்கொண்டுவரும் காலத்தில் தமிழ் நாடு தன் அரிய மூளையை இக் கலையின் அபிவிருத்தியில் பிரயோகிக்க முடியாதது நமது துரதிருஷ்டமேயாகும். கூடிய சீக்கிரத்தில் நமது ஆசிரமத்தினின்று புதியதோர் சித்திரத் துறை ஜனிக்கும் என்று பெரிதும் நம்பியுள்ளோம்.

காலக்கிரமத்தில் புதிய யந்திரங்கள் நிர்மாணிக்கத் தகுந்த கூரிய அறிவுள்ள மாணவர்கள் இவ் ஆசிரமத்தில் தோன்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் தமிழ் நாட்டு வியாபாரிகள் இவ் ஆசிரமத்திற்கு ஓர் நியதமான வருவாயை ஏற்படுத்தித் தர இருக்கிறார்கள். இதற்கென ஓர் 'மகமை'யை எடுத்து வைப்பது அவர்களுக்கு அசாத்தியமில்லை. இவ்வாறு ஏற்படுத்தித் தந்துவிட்டார்களானால், ஓர் சிறந்த கொல்லுப்பட்டறை வைத்து மாணவர்களுக்கு யந்திரங்களை அமைக்கும் ஆற்றலை உண்டாக்கித் தர ஏற்பாடு செய்வோம். அப்பொழுது அவர்களது ஜயம் தமிழ் நாட்டின் ஜயமாகும். அப்பொழுது, நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் தோன்றிய யந்திர சிருஷ்டியை இயக்கமும் அதனால் பெருகிய கைத்தொழில் அபிவிருத்தியும், அவற்றின் குற்றமின்றி, இன்றைக்கு நம் செல்வத் திருநாட்டில் தோன்றும். வியாபாரிகள் எடுத்து வைக்கும் சிறு 'மகமை' இத்தனை வேலை செய்துவிடும்!

குருகுலத்துக்குப் பொருள் கட்ட ஆசிரமவாசிகள் பல இடங்களுக்கும் எப்பொழுதும் போய்க் கொண்டிருத்தல் அசாத்தியமாக இருக்கும். ஆகையால் தமிழபிமானிகளும் தேசாபிமானிகளும் நாங்கள் வந்து கேட்காமலே தங்களால் கூடிய உதவிகளைச் செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். சிங்கப்பூர் முதலிய கீழ் நாடுகளுக்குப் போயிருந்த தேசாபிமானியும் இக் குருகுலத்தின் உபகாரியுமான பிரம்மஸ்ரீ மகாதேவ ஐயர் தமது சொந்தக் காரியங்களையெல்லாம் விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார். தன்னலம் கருதா அவருடைய தேசாபிமான தர்மாபிமானங்களின் பயனாக அந்தப் பிரதேசத்துத் தமிழபிமானிகள் இதுவரையில் சுமார் 10,000 (பதினாயிரம்) வெள்ளிகள் அவரிடம் குருகுலத்துக்காக உதவி செய்திருக்கிறார்கள். தொகைகள் இன்னும் வசூலாகிக் கொண்டு வருகின்றன. ஆனால் பொது நிதிக்கு மொத்தமாக உதவுவதுடன், இம் மாகாணத்திலும் கீழ் நாடுகளிலும் உள்ள குருகுல அபிமானிகள் குருகுலத்துக்காக ஓர் சிறு 'மகமை'யை எடுத்து வைத்து அதை விடாமல் குருகுலத்துக்கு அனுப்பி வந்தால், அது அமோகமாய்ப் பெருகி, சாஸ்திர வகுப்புகளும் தொழிற்சாலைகளும் வைத்து விமரிசையாக நடத்த எமக்குச் சக்தியைத் தரும். நமது நாட்டு மடங்களும் கோபுரங்களும் இதே மாதிரி 'மகமை'யினாலேயே வெகு லேசாகக் கட்டப்பட்டும் காக்கப்பட்டும் வந்தன என்பதை உணர்ந்து, தமிழ் மக்கள் அனைவரும் தங்கள் வருமானத்திலும் லாபத்திலும் அவரவர்களுக்குத் தோன்றிய பிரகாரம் ரூபாய்க்கு இத்தனை பைசா என்று எடுத்து வைத்து, வருஷத்தில் நான்கு தடவைகளிலோ அல்லது சௌகரியப்பட்ட பிரகாரமோ குருகுலத்துக்குச் சேர்ப்பித்து வரவேண்டும் என்று மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

தமிழ்க் குருகுலம், சேரமாதேவி.
ஐப்பசி க, கலி ருoஉக.

வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர்,
ஆசாரியன்.

# THE KURAL

OR

## The Maxims of Tiruvalluvar

Translated by

*Acharya V. V. Subrahmanya Aiyar.*

*Second Edition, thoroughly revised and enriched with a large number of footnotes and otherwise.*

The difficulty of unravelling the sense out of the cryptic though magnificent commentary of Parimelalakar can be conquered by the use of this translation which is the only one that preserves all the force and sublimity of the original.

This edition will be ready by the 15th of December, 1924, and will be beautifully bound in cloth.

Price Rs. 5. V. P. P. charges 8 as.

**The Bala Bharati Bookshop,**

**Sheramadevi.**

# பட்டு பிதாம்பர கம்பெனி, காசி.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!

**நாகரீகமான ஜரிகை வேலைசெய்த பட்டுச்சேலைகள்,**

**ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வேஷ்டிகள்.**

முதலியன

மிகச் சரசமாகக் கிடைக்கும்.

சித்திர வேலை செய்ததும் சாதாரணமான பித்தளைப்பாத்திரங்களும், காஷ்மீர சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி, கோரோஜனை முதலியனவும் கிடைக்கும்.

**விலை ஜாபிதாக்கள் இனாமாக அனுப்பப்படும்**

உடனே எழுதுங்கள்.

விலாசம்:

காரியஸ்தர், பட்டு பிதாம்பர கம்பெனி, காசி.

**Silk Pitambar Co.,**
**Pitambar Buildings,**
**BENARES CITY**